Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஓக.03-09,1994 ரூபா 9/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 57



உஷார்! உஷார்!

“நான் அவனில்லை”

## கிழக்கில் கட்சிமாறிகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## அர்த்தமற்ற போரின் வீர — தீர கௌரவங்கள்





அரசியல் அலசல்

தேர்தல் திருவிழா

ஆறாவது மாடியில் இருந்து ஒரு பாய்ச்சல்

ஒரு ஜோடி சப்பாத்து அஸ்வதியின் மொழிபெயர்ப்பில் அற்புதமான கதை

திரையுலக கிசு.கிசுக்களோடு ....சினிவிசிட்

இலக்கிய நயம்

புதுமைத்தொடர்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# கர்த்தர் எம்மோடு இருக்கிறார்

# ஆன்மீகம்

தினசரிப் பத்திரிகைகளைத் திறந்தால் எத்தனை தற்கொலைக் கதைகள்! இப்படி வாழவும் வேண்டுமா என அங்கலாய்ப்போர் எத்தனை ஆயிரம்! வாழ்க்கையில் ஏமாற்றம்! விரக்தி, திருப்தி இல்லை.

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே. நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசாயா 4:10)


என்று கர்த்தர் எங்களுக்கு உறுதி அளிக்கிறார்.

"நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன். தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" சங்23:4) என்று சங்கீதகாரன் கூறுகிறார்.

அண்ட சராசரங்களையும் படைத்த எல்லா பராக்கிரமங்களும் பொருந்திய கடவுள் எம்மோடிருக்க நாங்கள் எதற்குமே அஞ்சத் தேவையில்லை. "தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமாவார்." (சங் 46:1)

"ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை., அறுக்கிறதுமில்லை. களஞ்சியங்களில் வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விஷேசித்தவர்கள் அல்லவா?" (மத்தேயு 6:26) என்று இயேசு மொழிகிறார்.

இறைவனின் தூய அன்பையும், சமாதானத்தையும் உரு சித்துப் பார்த்தவர்களை இப் பிரபஞ்சத்தின் அநித்தியமான ஐசுவரியங்களின் குறைவு பாதிப்பதில்லை.. "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குகிறார்." (பிலிப் 4:19)



வாழ்க்கையில் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளை, சவால்களை, ஏமாற்றங்களை, குறைபாடுகளை எதிர்கொள்வதற்கு வேண்டிய பெலனையும் வழிநடத்தலையும் கர்த்தர் நிச்சயம் எமக்கு தந்தருளுவார். எமக்கு இயேசு கிறிஸ்து மூலம் கிட்டிய நித்தியமான விடுதலையை, சமாதானத்தை, திருப்தியை, அன்பை, நிறைவை பிறரும் அனுபவிக்க வழி கோலுவோமாக.

எஸ். கீதாஞ்சலி-கொழும்பு-06.

# ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்

ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும் என்பர். எனவே தான் சகல மதங்களும் ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றன. கட்டுக்கோப்பான சமூக வாழ்வுக்கும், நிம்மதி சந்தோஷத்திற்கும், ஆத்மீக ஈடேற்றத்திற்கும் ஒழுக்கமே பிரதானமாகும். ஒழுக்கமற்றவரின் வாழ்வு மிருகங்களின் நடத்தையை விடவும் மட்டமானதாகும். எனவே தான் "முஃமீன்களில் பரிபூரணமான ஈமானுள்ளவர் மிக அழகிய நற்குணமுள்ளவரே" என அருமை நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நல்லொழுக்கம் என்பது நற்குணத்தின் பிரதிபிம்பமே! நற்குணமுடையோர் ஒழுக்க சீலர்களே! அவர்களை உலகமும் விரும்பும், இறைவனும் நேசிக்கிறான். 'நிச்சயமாக கெட்ட வார்த்தை பேசுவோர் மீது அல்லாஹ் கோபம் கொள்கிறான்' என்பது நபி மொழியாகும். எனவே ஒவ்வொருவரும் ஒழுக்க சீலர்களாக வாழ வேண்டும். எனவே தான் இஸ்லாம் ஒழுக்கத்தை மிக மிக வலியுறுத்துகின்றது. ஒருவர் என்ன தான் கற்றிருந்த போதும், உயர்ந்த அந்தஸ்தில் இருந்த போதும் அவரிடம் ஒழுக்கமில்லையேல் அவரை உலகம் மதிக்காது. சமூகமும் மதிக்காது. தனிப்பட்ட வாழ்விலும் அவன் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும்.

ஒருவனுடைய ஒழுக்கத்தின் பிரதிபலிப்பு நடத்தையில் தான் தங்கியுள்ளது. அந்த நடத்தைக்கு அச்சாணியாக விளங்குவது மனம். எனவே மனம் சீர்மைபெற்றால் தான் நடத்தை சீர்மை பெறும். நடத்தை சீர்மை பெற்றால் ஒழுக்கம் ஒளி கொடுக்கும். எனவே மனம் மலராக இருப்பது அவசியம். மனதில் துர்க்குணம் இருந்தால் நடத்தையும் அதே வழியில் போய்விடும். எனவேதான் மனச்சீர்மை பற்றி எம் பெருமானார் குறிப்பிடும் போது, 'அந்தோ! உடம்பில் ஒரு தசைத்துண்டு இருக்கிறது. அது சீரடைந்தால் உடல் முழுதும் சீரடைந்து விடும். அது சீரழிந்தால் உடல் முழுதும் சீரழிந்து விடும். அது தான் இதயம்' (புஹாரி-முஸ்லிம்) என்பதாக. எனவே நாம் நற்குணங்களை கடைபிடித்து ஒழுக்க சீலர்களாக வாழ்வோமாக.

ஏ.பீ.எம். ஜிப்ரி-பேருவளை.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
கடல் கடந்து சென்றிருக்கும்
தம்மவர்கள்-
அங்கு பட்டுவரும் துயரங்கள்
கொஞ்ச நஞ்சமல்ல.

கண்ணுக்கெட்டாத தூரத்திலே
அவர்கள் வாழ்வதனாலோ என்னவோ
இங்குள்ள அவர்தம் உறவினர் பலர்
அந்நிய நாடுகளில்
தம்மவர் படும் கஷ்டங்களை அறிவதில்லை.

கடிதத்தில் எழுதினால்-
இங்குள்ளோர் மனம் கலங்குவார்களே
என்றெண்ணி-அவர்களும்
தம் துயர்கள் வெளியிடுவதில்லை.

அதனால்-இங்குள்ளோர்,
அவர்கள் கை நிறையச் சம்பாதித்து
காலிற்கு கால் போட்டு
உல்லாசமாய் இருப்பதாக
நினைத்துக்கொள்கிறார்கள்.

பணம் காய்க்கும் மரங்களாக
வெளிநாட்டில் வாழ்வோரை நினைத்து விடுகிறார்கள்.
ஆடம்பரமாய் இங்குவாழ
அடிக்கடி அந்த மரங்களை
அசைத்து-உலுப்பி-
"இன்னும் போடு பணம்"
என்று நச்சரிக்கிறார்கள்.

அரசாங்கமும் வெளிநாடுகளின்
கையை எதிர்பார்த்துத்தான்
அபிவிருத்தி திட்டங்களிலும்
அரசியல் நோக்க நிவாரணங்களிலும்
தைரியமாக கையெழுத்துப்போடுகிறது.

இங்குள்ள மக்களில் ஒரு பகுதியினரும்
வெளிநாட்டு உறவினர்களின்
கையை எதிர்பார்த்துத்தான்
மலைக்கவைக்கும் மாதவாடகைக்கும்
திகைக்க வைக்கும், தினச் செலவுகளுக்கும்
துணிந்து முன் வருகிறார்கள்.

பொறுப்புணர்வோடு நடந்துகொள்வோர்
தயவுசெய்து கோபிக்க வேண்டாம்.
பொறுப்பற்றோரின் போக்கால்
வெளிநாட்டில் தம்மவர்கள்
சுமக்கும் துயர்கள் அறிந்ததால்
இப்படி எழுதும்படியாகி விட்டது.

ஊருக்கு பணம் அனுப்பும் அவசியம்
ஒருபுறம்-
அங்குள்ள தன் குடும்ப செலவுகள்
மறுபுறம்-
என்று அதிக தேவைகள் உருவாகும் போது,
உழைக்கும் நேரத்தை அதிகப்படுத்தும்
அவசியமும் ஏற்பட்டுவிடுகிறது.
எனவே இரு நேர வேலை.

வீட்டிலே கணவன் முகம்காண
காத்திருக்கும்...துணைவி.
தந்தை முகம் தினம் காணாமல்
ஒட்டுறவு இல்லாமல் வளரும் பிள்ளை.

கணவனும்-மனைவியும்
வேலைக்குச் செல்லும் போது,
வேலை நேர மாற்றங்களால்
ஒருவரை ஒருவர் பார்த்து
புன்னகைக்கவும் நேரமிருக்காது-வாய்ப்புமிருக்காது.

உண்பதும்-உடுப்பதும் மட்டும்தான்
வாழ்க்கையா?
உணர்வுகள் மரித்துப்போக
உறவுகள் கசக்க
மண விலகல்கள் துரிதமாகின்றன.
விரக்தியும் விசுவரூபமெடுக்கிறது.

கனடாவில் தம் பிள்ளைகளை
தாமே கொல்லத் துணிந்த
இரு தமிழ் தாய்மார்களது விரக்தி
ஏன்? எதற்கு?
என்ன அடிப்படை? என்று புரியாமல்-
வெறுமனே பெண்மீது மட்டும்
வசை பாடுவது தவறல்லவா?

வெளிநாடுகளில் உள்ள நம்மவரின்
தற்கொலைகளுக்கும்,
தனிமனித உணர்வுகள் சாவதற்கும்
இங்குள்ள அவர்தம் உறவினர்களும்
ஒரு காரணமாகிவிடாமல் இருப்போம்.

வெளிநாட்டு வாசம் என்பது-
அப்படி ஒன்றும் பெரும் பாக்கியமல்ல.
அவர்கள் அனுப்பி வைக்கும் பணத்தை
செலவிடும்முன் சற்று யோசிப்பது நல்லது.
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

## கவிதைப்போட்டி இல-54

களம்தேடி வந்தவற்றில் வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**முகம் புதைக்கும் லாவகமோ!**

மாண்டவரின் கல்லறையால்
மண் முழுதும் மயானமிங்கே!
பீடில் கொண்டு இசை மீட்டால்
கடலையிலே ரசனையுண்டோ?
என்றெண்ணி வேதனையால்
முகம் புதைக்கும் லாவகமோ?
இந்திராணி சிவசுப்பிரமணியம்
கல்லடி-மட்டக்களப்பு.

### வியக்கப்பட்டவை

உயிரோடு உனையடைய
இவ்வுலகம் ஒப்பவில்லை
உயிரே நீ பிரிந்த பின்னே
உடல் மட்டும் நிற்குதிங்கே.
பன்னீர் புஸ்பா-கொழும்பு-11.

**நிலா**

இளைய நிலா-நீ என்
இதய நிலா
இணைந்த நிலா-நீ எனை
இப்போ பிரிந்த நிலா
ஏ.யோகேஸ்வரி-பசறை.

**விதியின் விடை**

அன்னிய தேசமிருந்து
அரவணைக்க வந்த கரம்
கல்லறை வசமிருந்து
கண்ணீராய் வடிக்கிறதோ?
தெ.லோஜனா-கொழும்பு-15.



## கவிதைப் போட்டி இல-57



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

*அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 09.07.1994.*

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 57
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

**இசையே! உனக்காக!!...**

இனிமையை இசைத்தவளே!..
தனிமையை புதைத்தவளே!..
தனிமரமாய் என்னைவிட்டு
நீ மட்டும் போனதெங்கே?
கண்மணி! எப்படி-
உனை நான் மறப்பேன்?!...
ஓ...சுவீட்டி! எப்படி
இனிநான் இருப்பேன்?!....
கோட்டைமுனை முத்துமணி
பதுளை.

**விடிவு எப்போது?**

நான் மீட்டும் அமைதி கீதம் கேட்கவில்லையா?
நம் இருண்ட தேசம் இன்னும் விடியவில்லையா?
எஸ்.எச்.ஹலீம்-புத்தளம்.

**மறக்கேன்**

இனியவளே!
இமைக்க மறந்தாலும்
இசைக்க மறக்கேன்,
இடையில் பிரிந்ததை
எப்படி மறப்பேன்.
எஸ்.சௌந்தர்
நாகொட.

**அன்பே உனை...**

காரிருள் கல்லறையிலே
அன்பே உனை
கயவர்கள் கண்ணயர
வைத்தனரோ...
கானத்தால் உனை நான்
கண் விழிக்க வைக்க
முயற்சித்தேன் ஐயகோ
முடியவில்லையே....
மா.கவிதா
அக்கரைப்பற்று-08.

**சந்தர்ப்ப வாதம்**

அழாதே...!
ஆழப்புதைந்த
எலும்புக்கூடுகளை
அகழ்ந்தெடு!
தேர்தலில்
அனுதாப வாக்குகளாவது
கிடைக்கும்.
பெ.சுப்ரமணியம்-மஸ்கெலியா.

**தனிமையிலேன் தவிப்பு?**

தனிமையிலே இனிமை இசையய்யா-அந்த
தனிமையிலும் உனக்கோர் சோதனையா?
இனிமையைத்தான் நாம் தேடி அலைகின்றோம்-நீ
இசைமறந்தால் அதுவும் எங்கள் சோதனையா?
என்.கே.தயாள குணசீலன்.-கிரான்.

**யார்?**

நிலமற்றுப் போனது தேசம்
வீதியெல்லாம் கல்லறைகள்,
வயலினை மீட்ட வேண்டும்
யார் இங்கே....
செவிவாங்க.
சௌஜன்யா-வவுனியா.

**பாடகன்**

போர் மழையில்
பூத்த மயானத்தில்
சோக கீதம் பாடும்
புதுப் பாடகன்.
ச.தஜானி-ஆரையம்பதி-03.

**நில்! கவனி!! முன்னேறு!!**

கடந்துவந்த பாதையெல்லாம்
கல்லறையே கண்டதாலா?
மீதமுள்ள பாதையதை
கண்மூடிக் கடக்கின்றாய்.
எதற்கும் முரசு வழி?
நில்! கவனி!! முன்னேறு!!!
க.சுசிலா-மட்டக்களப்பு.

**இதுபோகாது!**

காணச் சகிக்காது
கண்களைப் பொத்தினாலும்
போகாது மானிடனே
போர் இந்தப் பூமியிலே!
செல்வி.பாக்கியமலர் தம்பிஐயா
கல்முனை-02.

**மனம்**

மனக்கோட்டை
சமாதியாக-
மனமுடைந்து
நிற்கிறாயோ...
த.பிரகாஷ்-மடுல்கெல.

## வாசகசாலை

வாரம் ஒருமுறை வலம் வரும் என் இனிய முரசிற்கு, எனது பலகோடி வந்தனங்கள். மேலும் ரசிகனின் தொடர் நவீனம் பலே,பலே. இலக்கிய நயம் வெகு சுவீட், புதின செய்திகளை கண்டறிவதில் முரசுக்கு நிகர் முரசேதான். வாழ்க தினமுரசு வளர்க உன் பணி.

ரா.சாந்தராஜா-இரத்தினபுரி.

□□

தினமுரசில் வெளியாகும் அனைத்து அம்சங்களும் வெகு சிறப்பானவை. அதிலும் ரசிகனின் இலக்கிய நயம் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரிபோல்தான். என் இதயத்தில் நீங்காத இடம் பிடித்துள்ளது.

எஸ்.சுரேஷ்கண்ணா-நானுஓயா.

□□

என்னாசை இனிய முரசே!

நீ தரும் இலக்கிய நயமும், சிறுகதையும், உலக ரவுண்டப்பும், தேன் கிண்ணமும் பல அம்சங்களையெல்லாம் என் மனதில் குடிகொள்ளச் செய்த முரசே! உன் நற்சேவை என்றும் இன்று போல் தொடர வேண்டுமென எங்களது பல நல்வாழ்த்துக்கள். வாழ்க முரசே!

சி.பாலு,பிரசாந், நேசராஜ், சந்திரன்-சிலாபம்.

□□

தித்தித்து என்நெஞ்சில் ஒட்டிக்கொண்ட தினமுரசே!

அப்பப்பா...நீ தருபவை அனைத்தும் என்ன இரசனை. பொதுவாக ரசிகனின் ஆக்கங்கள் தேனைப்போல் தெவிட்டாத மாங்கனியாக உள்ளதே! இந்த ரசிகன் யாரென்று எத்தனை வாசகர்கள் கேட்டும் சொல்லவில்லையே. அந்த ரசிகனின் ரசிகையான ஒருத்தி இவள் கேட்கிறேன் சொல்லிவிடு ப்ளீஸ்...

செல்வி-தமிழ்ச் செல்வி பெருமாள்-பறகடுவ.

எனதன்பின் தினமுரசே!

வாரம்தோறும் தவழ்ந்து வந்து எங்கள் மனதை கொள்ளை கொள்ள வைக்கிறாய். அறிவு பூர்வமான அம்சங்களைத் தந்து அறிவூட்டுகிறாய்.

சசி-வவு/தெற்கிலுப்பைக்குளம்.

□□

பாப்பாமுரசில் இடம்பெறும் 'அறிவோம் மனதில் பதிவோம்' என்ற பகுதி எமது அறிவை வளர்க்கின்றது. அது மட்டுமா? ஸ்போட்ஸ், கொலை விழும் நேரம், மகாபாரதம் என்பன எம்மை தித்திக்க வைக்கின்றன. மொத்தத்தில் நீ வழங்கும் அத்தனை அம்சங்களும் அசத்துகின்றன. நீ பல்லாண்டு வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

என்டனி டெக்ஸ்டர்-கொழும்பு-15.

□□

அன்புள்ள தினமுரசு ஆசிரியருக்கும், தினமுரசு வாசகர்களுக்கும், கொலை விழும் நேரம் ரசிகன் அவர்களுக்கும், எம்.சுரேஷுக்கும், ஒட்டமாவடி அரபாத் அவர்களுக்கும் என் பாராட்டுக்கள். வாழ்த்துக்கள்.

செல்வன்-எஸ்.சந்தனராஜ்-அப்புத்தளை.

□□

என் இதயம் கவர்ந்த பொன் முரசே! உன் ஒவ்வொரு இதழ்களும் ஒவ்வோர் விதம். அனைத்து அம்சங்களும் வரவேற்க வேண்டியவை.



அதிலும் ரசிகனின் கொலைவிழும் நேரம், இலக்கிய நயம் இளம் எழுத்தாளர்களின் சிறுகதைகள் அப்பப்பா..! என்ன அருமை.

செல்வி. ஆர்.பாத்திமா ரிஸானா-வத்தேகெதர.

□□

என் இதயத்தைத் திருடிவிட்ட தினமுரசே,

கண்டதும் காதல் என்பார்கள். முரசே உன்னை எப்போது பார்த்தேனோ அன்றிலிருந்து உன்னை இதயபூர்வமாக நேசிக்கிறேன்.

ஏ.சி.எம்.ஜெமிசா.ஜெ.கைருன்நிஸா, ஏ.சி.நஸ்ரீன், ஜெ.எம்.ஜெம்சிர், எம்.வை.ஜெமிலா-கந்தளாய்.

□□

என் அன்புக்குரிய முரசே!

உன் வயது ஒன்றாகிவிட்டது. என்பதனை-நீ மகிழ்ச்சியாய்க் காட்டி விட்டாய்- அதற்கு என் இதயம் நிறைந்த பிறந்த நாள் வாழ்த்துக்கள். பத்திரிகைத் துறையில் நீ புரிந்திடும் பணி மென் மேலும் தொடர என் பாராட்டுக்கள்.

என்.கே.சுதர்சன்-செங்கலடி.

□□

அன்பின் முரசே,

நீ வாரம் தோறும் சுமந்து வரும் அனைத்து விடயங்களும் அருமையிலும் அருமை. ரசிகனின் இலக்கிய நயத்தில் நெஞ்சம் நெகிழ்கின்றது. அத்தோடு கொலை விழும் நேரம் விறுவிறுப்பாக செல்கின்றது.

இரா.தாசன்-பது/தெளிவத்தை.

□□

முரசே,

நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சிந்தியா கேள்வி பதில்கள் முரசு 52ல் ஏன் நிறுத்திவிட்டீர்கள்? நாங்களும் முரசை நிறுத்தி விடுவோம்.

இம்டியாஸ்-பயான் குவைட்.

□□

# வடக்கில் தேர்தல்! புலிகள் கண்டனம்!

## சுயேச்சைக் குழுவை புலிகள் நிறுத்துவது சந்தேகம்!

## புலிகள் தம்மை ஆதரிப்பதாக வதந்தி பரப்ப முயற்சி

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் குறித்து புலிகள் அமைப்பினர் உடனடியாக உத்தியோகபூர்வமான அறிக்கை எதனையும் வெளியிடவில்லை.

ஆயினும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில்- புலிகள் அமைப்பினரால் நேரடியாக நடத்தப்படும் 'ஈழநாதம்' பத்திரிகையில் வடக்கில் தேர்தல் நடத்தும் அரசின் முயற்சிக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

20.06.94 அன்று யாழ்ப்பாணத்தில் வெளியான அப்பத்திரிகையில், வடக்கில் [illegible] தேர்தல் நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ் அரச அதிபரை கொழும்புக்கு அழைத்து [illegible] வாக்காளர் பட்டியலை [illegible] கோரியுள்ளது. கொழும்பில் உள்ள தமிழ் அமைப்புக்களை போட்டியிடவைத்து தேர்தல் நடத்த அரசு திட்டமிட்டிருக்கிறது. யாழ் அரச செயலகத்தை தெல்லிப்பழைக்கு மாற்றுவதன் மூலம் தேர்தல் நடவடிக்கைகளை அங்கிருந்து மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது என்று புலிகளது தினசரி தெரிவித்துள்ளது.

யாழ் தேர்தல் மாவட்டத்தில் 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். யாழ் தேர்தல் மாவட்டத்தில் தீவுப்பகுதிகள் மாத்திரமே அரசின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

இந்நிலையில் புலிகள் ஒரு சுயேச்சைக் குழுவை யாழ் தேர்தல் மாவட்டத்தில் நிறுத்தினால் வெற்றிவாய்ப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும்.

புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை புலிகள்தான் நடத்துவர்களே தவிர அரசாங்கம் தனது சட்ட திட்ட விதிகளுக்கு ஏற்ப நடத்த முடியாது.

ஆயினும், யாழ் தேர்தல் மாவட்டத்திலும் தேர்தல் நடத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளமையால் புலிகள் சுயேச்சைக் குழுவை நிறுத்தினால்கூட தேர்தலை நடத்தியேயாக வேண்டும்.

ஆனால் புலிகள் சுயேச்சைக் குழுவொன்றை நிறுத்த முன்வருவார்களா என்பது பெரும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு புலிகள் கூறியிருந்தபோதும் சில பகுதிகளில் ஈரோஸ் சுயேச்சைக் குழுவை ஆதரித்தனர்.

இப்போது அந்த ஈரோஸ் தலைவர்கள் புலிகள் இயக்கத்தில் இணைந்துவிட்டனர். ஈரோஸ் கலைக்கப்பட்டுவிட்டதாகவும் அதன் தலைவர்களான பாலகுமார், பரராஜசிங்கம் ஆகியோர் அறிவித்தும் விட்டனர்.

அது மட்டுமல்லாமல் கடந்த பொதுத் தேர்தல் நடந்தபோது இந்திய அமைதிப் படையின் கட்டுப்பாட்டில் வடக்கு-கிழக்கின் பெரும்பாலான பகுதிகள் இருந்தன.

எனவே-அப்பகுதிகளில் தேர்தலில் போட்டியிட்டவர்கள் புலிகளது விருப்பு வெறுப்புக்கு மாறானவர்களாக இருக்க வாய்ப்பிருந்தது.

ஆனால் தற்போது யாழ்ப்பாணத்தில் தீவுகள் தவிர்ந்த எப்பகுதியில் போட்டியிட்டாலும் புலிகளது ஆதரவின்றியோ சம்மதமின்றியோ அங்கிருந்து எந்தவொரு சுயேச்சைக் குழுவும் முன்வரமுடியாது.

யாழ்ப்பாணத்தில் இருந்து, அதாவது புலிகளது கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் இருந்து, ஒரு சுயேச்சைக் குழு தெல்லிப்பழைக்கு வந்து வேட்பு மனுத்தாக்கல் செய்யுமானால் அது புலிகளது சுயேச்சைக் குழுவாகவே நம்பப்படும்.

புலிகள் மறுத்தால் கூட யாரும் நம்பமாட்டார்கள்.

அதனால் புலிகளுக்கு ஒரு தர்ம சங்கடமான நிலை தோன்றும்.

இலங்கை அரசின் பாராளுமன்றத்தால் பயனில்லை என்றும், பாராளுமன்றம் சென்றவர்கள் துரோகிகள் என்றும் கூறிவிட்டு இப்போது மட்டும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது எப்படி என்பதற்கு விளக்கம் சொல்ல முடியாமல் போகலாம்.

துரோகிகள் பாராளுமன்றம் செல்வதை தடுக்கவும், தமிழர்களது பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கவும் சுயேச்சைக் குழுவை நிறுத்துவதாகவும் சொல்ல முடியாது.

ஏனெனில் திரு.அமிர்தலிங்கமும் கூட்டணியினரும் முன்னர் அவ்வாறு கூறியதை புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ் ஈழம் விரைவில் மலரப்போகிறது என்று கூறி புதிய நிர்வாகம் ஒன்றை- ஏறக்குறைய நிழல் அரசொன்றை வடக்கில் உருவாக்கிவரும் புலிகள் அமைப்பினர் ஐக்கிய இலங்கைக் கோட்பாட்டையும், ஒரே நாடு என்பதன் அடையாளங்களில் ஒன்றான பாராளுமன்றத்தையும் ஏற்றுக் கொள்வது எவ்வாறு?

எனவே-புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் பொதுத் தேர்தலில் சுயேச்சைக் குழுவை நிறுத்தும் முடிவினை மேற்கொள்ள முடியாது என்றே நம்பப் படுகிறது.

வடக்கு-கிழக்கில் தேர்தலை நிராகரிக்கும் முடிவுக்கு புலிகள் வரலாம் என்றே நம்பப்படுகிறது.

இதேவேளையில் புலிகள் தம்மை ஆதரிப்பதாக ஒரு வதந்தியை பரப்பி விடவும், அதன் மூலமாக தேர்தலில் தமிழர்களது வாக்குகளைப் பெறவும் ஓரிரு தமிழ் கட்சிகள் முயலக்கூடும் என்று நம்பப்படுகிறது.

அண்மையில் கொழும்பில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பெருந்தொகையன வெடிகுண்டுகள் புலிகள் அமைப்பினரால் நீர்கொழும்பு கடல் வழியாக கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இக்குண்டுகள் தேர்தல் காலத்தில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவே கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

எனவே-தற்போதைய அரசாங்கத்தையோ அல்லது தேர்தலையோ புலிகள் ஆதரிக்கக்கூடிய அறிகுறிகள் பெரும்பாலும் தென்படவில்லை.

கட்சி மாறிய பட்சி



"ஐயோ... திருடன்...திருடன்.....!"
"இப்ப நான் அந்தக் கட்சியில் இல்லேம்மா. நான் புதுக்கட்சியிலை சேர்ந்திருக்கேன். உங்க பொன்னான வாக்கை எனக்கே போடுங்க என்று இரகசியமாய்க் கேட்கத்தான் வந்தேன்....?!

## காமினிக்கு தலையிடி

## சந்திரிக்காவோடு சிறீமானி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அத்துலத் முதலியின் மனைவி சிறீமானி கொழும்பில் போட்டியிடப்போவதை உறுதியாகிவிட்டது.

சந்திரிக்கா குமாரணதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியோடு இணைந்தே அவர் போட்டியிடுவார்.

இது தொடர்பான பேச்சுக்கள் நடந்துள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணியோடு உள்ள பிரச்சனைகள் பற்றி சிறீமானி அணியினர் பேச்சு நடத்தியதில் இரு தரப்புக்கும் திருப்தியான உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

திருமதி சிறீமானி தேர்தலில் போட்டியிடுவதால் திரு.காமினி திசாநாயக்காவுக்கு அது ஒரு தலையிடியாக இருக்கும்.

அத்துலத் முதலியின் ஆதரவாளர்களை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வைப்பதில் கடினமான முயற்சிகளை அவர் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

அத்துலத் முதலியின் ஆதரவாளர்களை தமது பக்கம் கொண்டுவரும் முயற்சியில் மக்கள் கூட்டமைப்பு அக்கறை காட்டுகிறது.

அத்துலத் முதலியின் வாழ்க்கைத் துணைவியாரை ஆதரிப்பதா அல்லது அத்துலத் முதலியின் அரசியல் சகாக்களான காமினி-பிரேமச்சந்திரா போன்றோரை ஆதரிப்பதா என்பதே அத்துலத் முதலியின் ஆதரவாளர்கள் பதில் தேடும் கேள்வியாகும்.

## -தேர்தல் களத்தில்-

## லேக்ஹவுஸ் தலைவர்

அரசாங்க பத்திரிகை நிறுவனமான லேக்ஹவுஸ் தலைவர் டாக்டர் சரத் அமுனுகம எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

சமீபத்தில்தான் டாக்டர் சரத் அமுனுகம லேக்ஹவுஸ் தலைவராக பொறுப்பேற்றிருந்தார்.

திரு.காமினி திசாநாயக்காவின் நெருங்கிய சகாவான சரத் அமுனுகம ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தவர்.

டாக்டர் சரத் அமுனுகம தேர்தலில் போட்டியிட்டால் அவரது பதவிக்கு தற்போது தகவல் தொடர்பு அமைச்சில் முக்கிய பொறுப்பில் உள்ள ஒருவர் நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது. எனினும் லேக்ஹவுஸ் தலைவர் பதவிக்கு வேறு சிலரும் விரும்பப்படுவதாக கூறப்படுகிறது.

## இலங்கைத் தமிழருக்கு 10 வருட சிறை!

## கனடிய நீதிமன்றம் கடும் தீர்ப்பு

குடிவெறியில்-தான் என்ன செய்கிறார் என்று தெரியாமல் துப்பாக்கியால் சுட்ட, மார்க்கம் என்ற இடத்தைச் சேர்ந்த ரமேஷ்குமார் இராஜகுலசிங்கம் (வயது 25) என்னும் இலங்கைத் தமிழருக்கு ரொறண்டோ நீதிமன்றம் 10 வருடச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கனடாவில் ஸ்கார்பறோவிலுள்ள ராயல்கொட் குடும்ப உணவு விடுதியில் இராஜகுலசிங்கம் 1993, ஏப்ரல் 24ம் திகதி குடித்துக்கொண்டிருந்தார். இவருடைய நண்பர்களுக்கு போதை தலைக்கேறியதும் இவரை துப்பாக்கியால் சுடும்படி தூண்டியிருக்கிறார்கள். இவர் 9 எம் எம் கைத்துப்பாக்கியை எடுத்து அந்த உணவு விடுதியிலிருந்த-இவருக்கு எந்த வகையிலும் தொடர்போ அறிமுகமோ இல்லாத-நபர்கள் மீது சரமாரியாகச் சுட்டிருக்கிறார். இருவருக்கு மார்பிலும் மற்றும் மூவருக்கு உடம்பின் அடிப்பாகங்களிலும் காயங்கள் ஏற்பட்டன,

நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெற்றபோது இராஜகுலசிங்கத்தின் துப்பாக்கிக்கு இலக்கானவர்கள் சமூகமளித்திருந்தனர். தான் அறியாமல்- சுய நினைவில்லாமல் செய்துவிட்ட குற்றத்துக்கு அவர் மன்னிப்புக் கோரினார்.

இவர்மீது 5 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. இவற்றுக்கும் சட்டத்துக்கு விரோதமாக கைத்துப்பாக்கி வைத்திருந்தமைக்காகவும் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டார். விசாரணை முடிவில் இவருக்கு 10 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

தான் இந்தக் குற்றச் செயலைப் புரிந்தமைக்கான காரணத்தை இதுவரை அவரால் தானும் புரிந்துகொள்ள முடியவில்லை. துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு சிமரோன் வீதியிலுள்ள தனது இல்லத்தில் வந்து படுத்துத் தூங்கிவிட்டார்.

அதிகாலையில் இவர் நண்பர் ஒருவர், முதல் நாளிரவு நடைபெற்ற சம்பவத்தை யிட்டுக் கூறும்வரை இவருக்கு நடந்தவை எதுவுமே தெரியாதாம். தொடர்ந்து வந்த பொலிசார் இராஜகுலசிங்கத்தை கைது செய்தனர்.

## தேர்தல் கிசு கிசு

## அவசரக் கலைப்பும்-ஜோசியமும்!

## இராஜதுரை நடத்திய யாகம்

பாராளுமன்றம் அவசரமாக கலைக்கப்பட்டதற்கு பிரபல ஜோசியர்கள் சிலரே காரணம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

ஒக்டோபர் மாதத்தின் முன்பாக பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்தினால் ஆளும் கட்சிக்கு சாதகமான நிலை இருப்பதாக அவர்கள் கணித்து கூறினார்களாம்.

தேசியப் பட்டியல் எம்.பிக்களை இராஜினாமாச் செய்ய வைக்க பகிரத முயற்சிகள் செய்த அரசாங்கத் தலைமை பாராளுமன்றத்தை அவசரமாக கலைத்தமைக்கு வேறு காரணம் இருக்க முடியாது என்கின்றன அந்த வட்டாரங்கள்.

இதேவேளை கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.இராஜதுரை ஒரு யாகம் நடத்தியதாக கூறப்படுகிறது.

மலேசியாவில் தூதராக இருக்கும் இராஜதுரை கொழும்பு வந்து ஆளும் கட்சியின் வெற்றிக்காக வேண்டி அந்த யாகத்தை பெரும் செலவில் நடத்தி முடித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கில் தேர்தலில் போட்டியிடும் எண்ணமும் அவருக்கு இருப்பதாகத் தெரிகிறது.

## அடுத்த நடவடிக்கை என்ன?

## செல்லச்சாமி பேச மறுப்பு!

முன்னாள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்து வெளியேற்றியுள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் திரு. செல்லச்சாமி எவ்வாறு போட்டியிடப் போகிறார் என்று தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியினர் திரு. செல்லாவுக்கு தற்போதைய நிலையில் ஆதரவளிக்கப் போவதில்லை.

எதிரணியோடு அவர் சேர்ந்து போட்டியிட்டால் ஐ.தே.கட்சிக்கு துரோகம் செய்யக் கூடாது என்று அவர் கூறிய கருத்துக்கள் அர்த்தமில்லாமல் போய்விடும்.

தமது அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி குழப்பமடைந்துள்ள செல்லச்சாமி அணியினர் தெளிவான ஒரு முடிவுக்கு வரமுடியாமல் உள்ளனர்.

கொழும்பில் உள்ள திரு. செல்லச்சாமியின் அலுவலகத்தோடு தொடர்பு கொண்ட முரசின் அலுவலக நிருபர், திரு. செல்லச்சாமியோடு பேசவேண்டும் என்று கேட்டபோது ஐந்து நிமிட தாமதத்தின் பின் தற்போது அவரோடு பேசமுடியாது என்று பதில் சொன்னார்கள்.

இரண்டுநாள் கழித்து தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறும் அவரை சந்திக்க ஏற்பாடு செய்வதாகவும் அங்கிருந்து தெரிவித்தார்கள்.

கொழும்பில் திரு. செல்லச்சாமி தனித்து சுயேச்சைக் குழுவாக போட்டியிட்டால் வெற்றிபெறும் சாத்தியங்கள் பற்றி அவரது ஆதரவாளர்கள் ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

இதேவேளையில் திரு. குமார் பொன்னம்பலம் ஒரு சுயேச்சைக் குழுவை கொழும்பில் நிறுத்த திட்டமிட்டுள்ளார்.

அந்த சுயேச்சைக் குழுவுக்கு இ.தொ.கா. தலைவர் திரு. தொண்டமானின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிப்பதாகவும் அறியப்படுகிறது.

இம்முறை எப்படியும் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு திரு. குமார் பொன்னம்பலம் தேர்தல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

## சுவிஸ் அரசு தொடர்ந்து பிடிவாதம்

## இரண்டாவது நிராகரிப்பு கடிதம்!

சுவிட்ஸர்லாந்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் தஞ்சமனுக்கள் நிராகரிக்கப்பட்டு இரண்டாவது நிராகரிப்பு கடிதமும் சுவிஸ் அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுவிஸில் உள்ள தமிழ் அகதிகள் அமைப்பினால் இரண்டாவது நிராகரிப்புக் கடிதங்கள் பெற்றவர்களுக்கான கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

கடந்தவாரம் சுவிஸில் உள்ள பேர்ன் நகரில் நடைபெற்ற அக்கூட்டத்தில் சுவிஸ் பிரஜைகளும் கலந்துகொண்டனர். இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக சுவிஸ் பிரஜைகளது அனுதாபத்தை தேடும் முயற்சிகளும் நடந்துவருகின்றன.

## திருமலையில் கடும் போட்டி வரும்!

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகளும், ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி (பொதுமக்கள் கூட்டணி) ஆகியவையும் தேர்தலில் போட்டியிடப் போகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் யார் என்று இதுவரை வெளிப்படையாக அறிவிக்கப்படாதபோதும் திரு.சம்பந்தன், திரு.தங்கத்துரை ஆகியோரது பெயர்கள் அடிபடுகின்றன.

திரு.தங்கத்துரைக்கு திரு. சம்பந்தனை விட செல்வாக்கு அதிகமிருப்பதாக திருமலையில் உள்ள கூட்டணிப் பிரமுகர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் இருந்து பல்வேறு ஊழல் நடவடிக்கைகள் காரணமாக வெளியேற்றப்பட்டதாக கூறப்படும் ராஜகாரியர் என்பவரும் திருமலையில் போட்டியிட ஒரு இயக்கத்திடம் விண்ணப்பித்திருக்கிறார். இவர் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சபாநாயகராக இருந்தவர்.

தமிழ் கட்சிகளிடையே கடும் போட்டி இருக்கப் போவதற்கான அறிகுறிகள் தற்போதே தெரிகின்றன.

## ஓர் எச்சரிக்கை தகவல்!

# அக்குறணையில் போலித் 'தங்கல்' மார்கள்; குணப்படுத்துவதாகக்கூறி பணம் சுருட்டல்!

(அக்குறணை நிருபர்)

அக்குறணையின் பல இடங்களில் கடும் சுகவீனமாகி பல நாட்களாகியும் குணப்படுத்த முடியாத, மற்றும் குடும்பச் சிக்கலில் மூழ்கியுள்ளவர்களின் வீடுகளுக்கு தாமாகவே சென்று "நோயைக் குணப்படுத்துகிறேன். கஷ்டங்கள் நீங்கவென்று கழிப்புக் கழிக்க வேண்டும். பேய்விரட்ட வேண்டும்" என்றெல்லாம் பொய்யான வார்த்தைகளைக்கூறி பெண்களை நம்பவைத்து பல ஆயிரம் ரூபாக்களை கூலியாகப் பெற்றுக் கொள்கிறார்கள். கோழி அறுத்தல், பூசனிக்காய் உடைத்தல் என்று ஏமாற்றுகிறார்கள்.

தலைப்பாகை அணிந்து பெரியவர் போல் தோற்றமளித்து பலரையும் ஏமாற்றி வருகிறார்கள்.

அண்மையில் அக்குறணையைச் சேர்ந்த- எம்.எஸ்.எம்.நிஸாம் என்பவரது வீட்டில் கடும் நோய்வாய்ப்பட்ட ஒரு குழந்தையைச் சுகப்படுத்தவென ரூபா ஐயாயிரம் ரொக்கமும், பெரிய கோழி, இன்னும் உடுதுணிகள் சகிதம் போலி விளையாட்டுக்களை விளையாடிவிட்டு ஆள் இடம்மாறியுள்ளார். இப்படியான 'தங்கலா'க நடித்தவர் எலதத்த எனும் இடத்தைச் சேர்ந்த முஹமது லெப்பை என்ற முஸ்லிம் நபரென அடையாளங் காணப்பட்டுள்ளது.

துனுவிலை, பங்கொள்ளாமட, ஒன்பதாம்கட்டை போன்ற இடங்களிலும் மேற்படி 'போலித் தங்கல்'மார்களின் நடமாட்டம் தெரிகிறது. இப்படியாக ஏமாற்றுபவர்கள் விடயத்தில் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# வர்த்தகர்கள் பகிஷ்கரிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

குடிநீருக்காக மாதாந்தம் ஆயிரக் கணக்கான ரூபாய்களை செலுத்த வேண்டிய நிலை மஸ்கெலியா நகர வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நீர் பாவனையாளர்கள் தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபைக்கு கட்டணங்களை செலுத்தாது பகிஷ்கரித்து வருகின்றனர்.

இது பற்றி கருத்து தெரிவித்த ஒரு வர்த்தகர், "கடந்த டிசெம்பர் 1993 வரை மாதாந்தம் நூறு ரூபா மட்டுமே செலுத்தி வந்தநான் தற்போது ஏறத்தாழ ஆயிரம் ரூபா வரையிலும் செலுத்த வேண்டியுள்ளது" எனத் தெரிவித்தார்.

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபையினாின் கருத்துப்படி, வர்த்தக நிலையங்கள் நுகர்வு செய்யும் நீருக்கு அலகொன்றிற்கு ரூபா 21/00 அறவிடப்படுகிறதாம்.

ஒரு பக்கம் வியாபார நிலையமும் இன்னொரு பகுதி குடியிருப்புமாகவே மஸ்கெலியா நகர் அமைந்துள்ளது. எனவே குடியிருப்புகளில் உபயோகிக்கப்படும் நீர் வர்த்தக நிலையங்களாக கணிக்கப்பட்டு கட்டணங்கள் அறவிடப்படுவதால் வர்த்தகர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் இதுபற்றிய முறைப்பாடுகளை வர்த்தகர்கள் சமர்ப்பித்திருந்தும் இதுவரை எவ்வித அனுகூலமும் ஏற்படவில்லை.

இலங்கையின் அதி உயர் மழை வீழ்ச்சியைப் பெறும் பிரதேசங்களில் ஒன்றாக இந்நகர் அமைந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

# பணமும்போனது-மனமும் உடைந்தது!

## மனைவியின் உழைப்பில் உல்லாசம்!!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் ஐயன்கேணியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான க.அன்னலெட்சுமி (27) கொழும்பில் வைத்து கொள்ளையர்களிடம் சுமார் ஒரு இலட்சம் ரூபா பணத்தை பறிகொடுத்துள்ளார். இப்பெண் சவூதியில் 2 வருடங்களுக்கு மேலாக பணிப்பெண் வேலை பார்த்துவிட்டு கொழும்பு வந்து தான் கொண்டுவந்த செக்கை (காசோலை) மாற்றியெடுக்கும் போது கொள்ளையர்களிடம் காசோலை மாற்றிய ரூபா 74,000யிரத்தையும் கைப்பையிலிருந்த 24,000 ரூபாய் பெறுமதியுள்ள சவூதி றியாழ்களையும் பறிகொடுத்துள்ளார். இதுபற்றி கொழும்பு பொலிஸில் முறையிட்டுள்ளார். பொலிசார் அப்பெண்ணுக்கு பஸ் காசு கொடுத்து மட்டக்களப்பிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை வீட்டுக்கு வந்த அவருக்கு வேறொரு அதிர்ச்சி காத்திருந்தது. அவரது கணவர் வேறொரு பெண்ணுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இப்போது அப்பெண் வயதான தனது தாயையும் மூன்று பிள்ளைகளையும் பராமரிப்பதற்கு மீண்டும் தான் வெளிநாடு செல்லவிருப்பதாக தனது சோக சம்பவங்களை 'தினமுரசி'ற்கு வேதனையுடன் தெரிவித்தார்.

# இருக்கையில்லாத அதிகாரிகள்!

## பரிதாபமான கிராமசேவகர்கள்!

(திருமலை நிருபர்)

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கென்று இட வசதியோ ஆசன வசதியோ இல்லாத படியால் அவர்கள் நின்றும் நடந்துமே தங்கள் கருமங்களை ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

பொதுமக்களுக்கான தினங்களில் சகல கிராம சேவை உத்தியோகத்தர்களும் செயலகத்தில் இருக்கவேண்டும். அத்தகைய தினங்களில் தமது கிராமசேவை உத்தியோகத்தர் எங்கு நிற்கிறார் என்று தேடிப்பிடிப்பதற்கே பொது மக்கள் நேரத்தைச் செலவழிக்க வேண்டி இருக்கிறது.

இத் தினங்களில் இருக்கை வசதிகளற்ற கிராமசேவை உத்தியோகத்தர்களாலும், தமது கிராமசேவையாளரைத் தேடும் பொதுமக்களாலும் பிரதேச செயலகம் சத்தமும் நெருக்கடியும் மிகுந்து சந்தை போலக் காட்சியளிக்கிறது.

இதுபற்றி 'முரசு'க்கு கிராமசேவையாளர்கள் தெரிவிக்கையில் "இது என்ன பிரமாதம்? நிர்வாக உத்தியோகத்தர் எங்களுடன் அடிக்கடி கலந்துரையாடலில் ஈடுபடுவார். அப்போதெல்லாம் 42 கிராம சேவையாளர்களும், பள்ளிப்பிள்ளைகள் போல் வரிசையாக நின்ற நிலையிலேயே பாடக் கேட்கிறோம்" என்கிறார்கள் வேதனையுடன்.

# கட்டுரைப் போட்டி

கண்டி மாவட்டத்தில் அமைந்திருக்கும் கும்புக்கந்துறை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி அப்பிரதேச மக்களுக்கு பல அரிய சேவைகளை செய்து வருகின்றது.

அத்துடன் அதன் முதல் வருட பூர்த்தியை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முடிவு செய்துள்ளது.

இக்கட்டுரைப் போட்டிக்கு 'இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சமூக சேவை' என்னும் தலைப்பிலான கட்டுரைகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

வயது எல்லையின்றி நடாத்தப்படவுள்ள இப்போட்டியில் வெற்றி பெறும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தை பெற்றவர்களுக்கு பரிசுகளும், மற்றும் பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளதாக அதன் செயலாளர் அனீஸ் எம்.ஷாகிர் அறிவித்துள்ளார்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி இம்மாதம் இறுதியாகும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி-

கௌரவ செயலாளர்
மு.லீ.வா. முன்னணி
கும்புக்கந்துறை
தெல்தெனிய.

# படகுப் பயணிகளின் அவலம்

(மன்னார் நிருபர்)

மன்னாருக்கான தரைப்போக்குவரத்து சென்ற 1990 ஜுன் மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளதிலிருந்து தற்போதுவரை கற்பிட்டியூடாக கடல் மார்க்கமாகவே இது நடைபெற்று வருகின்றது.

மிகவும் ஆபத்து நிறைந்த இப்போக்குவரத்தினை தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு உயிரை துச்சமென மதித்து கடலில் பிரயாணம் செய்யும் இவர்கள் தாழ்வுபாட்டு கடற்கரையில் பல கெடுபிடிகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

இங்கு வந்து சேரும் படகுகள் கரையிலிருந்து 25 யார் தூரத்தில் நிறுத்தப்பட்டு, பயணிகள் பெரிய படகு ஒன்றினுள் ஏற்றப்படுகின்றனர். மீண்டும் சிறியதொரு படகில் ஏற்றப்பட்டு கரைக்கு அண்மையில் இறக்கி விடப்படுகின்றனர்.

கற்பிட்டியிலிருந்து 90 மைல்களுக்கு 100 ரூபா கட்டணம் செலுத்தும் பயணிகள் இறங்குவதற்காக மேலும் 30 ரூபாய்களை 2 படகுகளுக்கும் செலுத்த வேண்டியுள்ளது.

இங்கு தற்காலிக துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ள போதிலும் அதிக காற்றை காரணம் காட்டி அதில் நிறுத்தப்படுவதில்லை. படகுகளிலிருந்து வரும் பயணிகளின் பொதிகளை இறக்கிக்கொடுத்து அதிக பணம் பெறும் நாட்டாமைகள் சிலர் அந்த பொதிகளை அவசரமாக- அனுமதியின்றி உடைத்து கேக், பிஸ்கட், பழவகைகள் போன்றவற்றை அபகரித்து லபக், லபக்கென்று தின்று விடுகின்றனர்.

பழுத்த வாழைக்குலைகளைக் கண்டால் போதும். நாட்டாமைகள் ஒரே அமுக்காக அமுக்கி விடுகின்றனர்.

இது இன்று நேற்றல்ல. 3 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் சம்பவமாகும். இவைகளை இதுவரை எந்த ஒரு அதிகாரிகளும் கண்டித்ததோ, நிறுத்துமாறு கட்டளையிட்டதோ கிடையாது.

# கட்டாந்தரையில் கல்வி


(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள மல்வத்தை, வளத்தாப்பிட்டி, புதுநகரம் போன்ற கிராமத்திலுள்ள பாடசாலைகள் தளபாட வசதியில்லாமல் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருக்கின்றன.

சமீபத்தில் மீளக்குடியமரப்பட்ட இப்பாடசாலைகளில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கட்டாந்தரையில் இருந்தே கல்வியைத் தொடர வேண்டியவர்களாகிறார்கள்.

# அறிவிப்பாளர் போட்டியில் முதலிடத்தில் வெற்றி

(அக்குறணை நிருபர்)



அகில இலங்கை ரீதியில் 'கலைஞர் ராதா மேத்தா'வின் வெள்ளி விழாவினையொட்டி நடாத்தப்பட்ட அறிவிப்பாளர் போட்டியில் சிறந்த அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட அக்குறணையைச் சேர்ந்த எம்.என்.எம்.அனஸ்(அக்குறணை இளைய அப்துல்லாஹ்) 1992, 1993ம் ஆண்டுகளுக்கான தேசிய இளைஞர் மன்ற அறிவிப்பாளர் போட்டிகளிலும் முறையே அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தினைத் தனதாக்கிக்கொண்டு தேசிய ரீதியில் மிகச் சிறந்த தமிழ் மொழி அறிவிப்பாளராகத் திகழ்கின்றார்.

இம்முறை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கழகங்களுக்கிடையிலான 1994ம் ஆண்டுச் சுற்றில் கண்டி மாவட்ட அறிவிப்பாளர், பேச்சு இஸ்லாமியக் கவிதை ஆகிய போட்டிகளிலும் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெயர் மட்டும் மாற்றம்

## தரம் இன்னும் உயரவில்லை!

அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி சில வருடங்களுக்கு முன் மத்தியமகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஒரு பிரபல தினசரியிலும் இச்செய்தி வெளியாகியிருந்தது.

இதனால் கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள், பெற்றோர் , பழைய மாணவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் பூரிப்படைந்தனர்.

கல்லூரியின் பெயர்ப்பலகையிலும் பெயர் மாற்றம் அழகான முறையில் இடம்பெற்றது.

ஆயினும் உண்மையான விபரங்களின் படி கல்லூரி இன்னும் மத்திய மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்படவில்லையென தெரிய வருகிறது. இக்கல்லூரி ஒரு 'ஏ' தர பாடசாலையாகவே இருந்துவருகிறதென்பதை தரவுகள் காட்டுகின்றன.

பெ. சுப்பிரமணியம்.

# நூலகமில்லாத நகரசபை! திறக்கப்படாத கட்டிடம்!!

கடந்த 1990ம் ஆண்டு வன்முறைச் சம்பவத்திற்கு முன்னர் பிரபல நூலகமாக விளங்கிய ஏறாவூர் நகர நூலகம் 1990ம் ஆண்டு வன்முறைவாதிகளால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. இதனால் நூலகக் கட்டிடமும் கூடவே அந்நூலகத்திலிருந்த பெறுமதிமிக்க வரலாற்று நூல்களும் தீக்கிரையாகின. அந்நூலகம் எரிக்கப்பட்டதினால் இப்பிரதேச வாழ் கற்றறிந்த தமிழ் பேசும் இரு சமூகத்தவர்களும் ஒரு அறிவுக் கருவூலமே அழிக்கப்பட்டுவிட்டதாக வேதனையடைந்தனர். இக்கஷ்டமான வேளையில் ஒரு தொண்டர் அமைப்பு 1990ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் ஈராண்டுகள்வரை செய்தித்தாள்களையும் சஞ்சிகைகளையும் கொண்ட ஒருசிறிய வாசகசாலையை நடாத்தியது. எனினும் தற்சமயம் அதுவும் தனது பணியை நிறுத்திக்கொண்டுள்ளது.

தற்சமயம் ஏறாவூர் நகரம் ஒரு நூலகமில்லாத நகரமாகக் காட்சி தருகிறது. சுமார் நாற்பத்தையாயிரம் பேரைக்கொண்ட ஏறாவூர் நகரத்திற்கு ஒரு நூலகமில்லாதிருப்பது துரதிஷ்டமே!

இதே வேளை பா.உ.ஒருவரின் நிதி ஒதுக்கீட்டில் புதிய நூலகத்திற்காக வேறோர் இடத்தில் கட்டி முடிக்கப்பட்ட ஒரு கட்டிடம் பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட தகராரொன்றில் இன்னமும் திறக்கப்படாதிருக்கிறது. இப்புதிய நூலகத்திற்காக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் காரியாலயம் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களை வாங்கிக்கொடுத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் பள்ளிவாசல் தகராறு முடிவுறுமா? நூலகம் திறக்கப்படுமா என்ற சந்தேகம் இன்னமும் இப்பிரதேச வாழ் மக்களிடம் காணப்படுகிறது.

ஏ.எச்.ஏ.ஹுஸைன்

# பாலத்தின் அவல நிலை

## மக்கள் கவலை

அனுராதபுர மாவட்டத்தில் 18 மைல்களுக்கப்பால் அமைந்துள்ள அழுத்கம கிராமத்திற்கும் கல்பொத்தேகம கிராமத்திற்கும் இடையில் அமையப்பெற்ற மல்வத்ஓய பாலம் அடைமழை காரணமாக வெள்ளத்தால் சேதமடைந்து இரண்டாக பிளந்து உடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் 150 குடும்பங்களை உள்ளடக்கிய அழுத்கம கிராம மக்களுக்கும் 50 குடும்பங்களை உள்ளடக்கிய கல்பொத்தேகம கிராம மக்களுக்கும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாகவுள்ளது.

இந்தப் பாலத்தினூடாக வாகனங்கள் எதுவும் செல்ல முடியாது. இதனால் மக்கள் தங்களுடைய சொந்த அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் பெரும் கவலையில் அங்கலாய்க்கின்றார்கள்.

திடீரென ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் அவரை எவ்வாறு வைத்தியசலைக்குக் கொண்டு செல்வது? சிலவேளை நோயாளி மரணிக்கும் சூழ்நிலைக்கும் ஆளாகலாம்.

ஆகவே இக்கிராம முக்களின் குறையை நீக்க இப்பாலத்தை கூடிய விரைவில் திருத்தியமைக்க இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

எஸ்.ஐ.நிலாம்தீன்
மரக்கல கட்டுகெலியாவை.


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவை.

உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசிய ரொஃபி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

**வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.**

| தலைமைப்பீடம் | கொழும்பில்- |
| --- | --- |
| P.K.சாமி JDGAN | இல: 162, |
| (மாந்திரீகச் சக்கரவர்த்தி) | கொட்டாஞ்சேனை வீதி, |
| சிறீ துர்க்காதேவி ஆலயம் | கொட்டாஞ்சேனை. |
| 32, தினச்சந்தை | கொழும்பு-13. |
| காம்பிளக்ஸ் | |
| நுவரெலியா. | |

தொலைபேசி: 052-2508, 052-3093, 01-434225

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

FAX: 0094 2508, 0094 3093


# ஒரு மறுப்பு

தங்கள் 54வது முரசில் புகார் பெட்டி பக்கத்தில் 'நிதி சேகரிப்பு ஏன்?' என்ற தலைப்பில் எமது வித்தியாலயத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்ததைப் பார்த்தேன். இச்செய்தியானது முற்றிலும் உண்மைக்கு மாறானது. இதனைத் தங்களுக்கு எழுதியவர் எமது சபைக்கோ அல்லது பாடசாலை நிர்வாகத்திற்கோ முறையிட்டிருக்கலாம்.

வருட ஆரம்பத்தில் வழமையாக வகுப்பறைகளை புதிதாக ஒழுங்கமைக்கும்போது மாணவர்களிடம் ஒரு சிறுதொகைப் பணம் அறவிடுவது எல்லோருக்கும் தெரிந்த விடயம். விழிப்புலனற்றவர்களுக்காக கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் 'தரிசனம்' கொடி தினம் இம்மாவட்டத்தில் சகல பாடசாலைகளிலும் அனுஷ்டிக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததே.

ஆனால் முரசில் வை.பாலசந்திரன் குறிப்பிட்டதுபோல இல்ல வளர்ச்சிக்கோ, அலங்காரப் பொருள்களுக்கோ அல்லது பூச்சாடிகள் வாங்குவதற்கோ பாடசாலையில் நிதி வசூலிக்கவில்லையென்பதை எனது விசாரணை மூலம் அறிந்து கொண்டேன்.

இதுவரை எந்தப் பெற்றோரும் நிதி சேகரிப்பு சம்பந்தமாக முறையீடு எதனையும் செய்யவில்லை.

எனவே, தயவு செய்து எமது இக்கடிதத்தை தங்களின் தினமுரசில் பிரசுரித்துதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சி. அபிமனன்சிங்கம்
செயலாளர்-அபிவிருத்திச் சபை,தி/ விபுலானந்தர் வித்தியாலயம்.

# புகார் பெட்டி

## கண்டி மாநகரில்

### காண முடியாத தமிழ்!

கண்டி மாநகரசபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளிலும் எனைய உள் வீதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளில் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரமே எழுதப்பட்டுள்ளன. ஏற்கனவே மும்மொழிகளிலும் வீதியின் பெயர்கள் எழுதப்பட்டு வந்தபோதிலும் படிப்படியாக அவற்றில் தமிழ் மறைந்து வருகின்றது.

சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக இருந்தபோதிலும் தமிழ் இவ்வாறு புறக்கணிக்கப்படுவதானது தமிழ்ப் பேசும் மக்களை பெரும் கவலைக்குள்ளாக்கியிருப்பதாக புகார்கள் தெரிவிக்கப் படுகின்றன. குறிப்பாக வரியிறுப்பாளர்கள் இந்த பாரபட்சம் குறித்து அதிருப்தி அடைந்துள்ளனர்.

(ஹரிஸ்பத்துவ நிருபர்)

உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை தகுந்த ஆதாரத்தோடும், உங்கள் முழுப் பெயர் முகவரியோடும் எழுதினால் மட்டுமே 'புகார் பெட்டி'யில் இடம்பெறும்.

-முகவரி-
புகார் பெட்டி
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772
கொழும்பு.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பாராளுமன்ற கலைப்பும் பா.உ.க்களின் திகைப்பும்!

## நாரதர்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. புதிதாக பாராளுமன்றம் சென்றவர்களுக்கு அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை!

மறுபடி பாராளுமன்றம் வரும் நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லை என்பதுதான் சோகத்திலும் சோகம்.

பாராளுமன்றம் கலைவதற்கு முன் பேச வேண்டியதையெல்லாம் பேசி பாராளுமன்ற குறிப்பில் இடம்பெறச் செய்துவிட ஒரு சிலர் பலத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அதில் தமிழ் பா.உ.க்களும் அடக்கம்.

அடுத்த தேர்தலில் அதிஷ்டம் இல்லாமல் போனாலும், தாம் பாராளுமன்றத்தில் ஆற்றிய வீர உரையென்று தூக்கிக்காட்ட உதவியாக இருக்கும் என்பதுதான் அந்தப் பலத்த முயற்சிகளின் பின்னுள்ள நோக்கம் என்று கருதலாம்.

பழையவர்களான பா.உ.க்களுக்கு பென்சன் இருக்கிறது.

புதியதாக சமீபத்தில் போனவர்களுக்கு பென்சன் வாய்ப்பும் இல்லை. அட-கடவுளே என்ன சோகம் பாருங்கள்!

கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்காக அரசாங்கம் வழங்கியுள்ள விடுதியின் பெயர் சிராவஸ்தி.

இங்கு பா.உ.க்களுக்கு தரப்படும் உணவு உயர்ரகமாக இருக்கும். விலை கொள்ளை மலிவு. ஒருவருக்கான சாப்பாட்டை இருவர் தாராளமாக மூக்குமுட்ட ஒரு பிடி பிடித்து விடலாம்.

வேண்டியவர்களையும் அங்குள்ள உணவு விடுதியில் இருந்து தருவித்துக்கொள்ளலாம்.

தனி அறை-தொலைபேசி வசதி, இப்படி ஒரு குட்டி ராஜாக்களின் சாம்ராஜ்ஜியம் மாதிரி சிராவஸ்தி இயங்கி வருகிறது.

எனினும் தற்போது உள்ள வசதிகள் தங்களுக்கு போதவில்லை என்று மதிப்புக்குரிய மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் (பா.உ.) வருத்தப்பட்டுக் கொண்டிருந்ததும் உண்மை.

பா.உ.க்களைவிட அவர்களை சுற்றியிருக்கும் ஆதரவாளர்களுக்குத்தான் சிராவஸ்தி வாசம் கொண்டாட்டமாக இருக்கும்.

அதிலும் நமது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அறைகள் கிட்டத்தட்ட கட்சி அலுவலகங்கள் மாதிரியே இயங்குகின்றன.

எப்போதும் கலகலவென்று கூட்டம். பேச்சும், கும்மாளமும் என்று பொழுது போய்விடும். இடைக்கிடையே உற்சாகமான சங்கதிகளும் பரிமாறப்படுவதுண்டு.

அதன் பின் அரசியல் விவாதம் அறையை படு பயங்கரமாக சூடுபடுத்தத் தொடங்கிவிடும்.

இவ்வாறான ஒரு அறையில் இருந்து தான் மதிப்புக்குரிய மக்கள் பிரதிநிதியும் "ஈ.என்.டி.எல்.எஃப்" என்னும் அமைப்பின் பிரதிநிதியுமான திரு.ஸ்ரீனிவாசன் தற்கொலை செய்யும் ஆசையோடு கீழே குதித்தார்.

(அவரது அறை மாடியில்) தமிழர்கள் செய்த பாவம் காரணமாக பாராளுமன்றம் சென்றவர் ஏதோ எப்போதோ தான் செய்த புண்ணியத்தால் உயிர் பிழைத்ததும், பின்னர் பதவி துறந்து அதனைத் தனது 'தியாகம்' என்று அறிக்கை விட்டதும். அதையும் படிக்க நேர்ந்ததும் தமிழர்களது தலைவிதி.

அடுத்த முறை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிராவஸ்தியோ, அல்லது வேறு எங்காவதோ அறை ஒதுக்கும்போது ஸ்ரீனிவாசன் போன்றவர்களுக்கு தரைப் பகுதியில் அறை கொடுப்பது சாலவும் சிறந்தது.

தமிழர்களது மானத்தை காக்க விரும்பும் யாராவது அரசாங்கத்திடம் அப்படி ஒரு சிபாரிசை முன் வைப்பது நல்லது.

ஏனெனில் அரசியல் என்றால் பலதும் பத்தும் வரும் என்று உறுதியாக நம்பும் நம் தமிழ் அமைப்புக்கள் உள்ளவரை ஸ்ரீனிவாசன் போன்றவர்களும் உருவாகிக் கொண்டுதான் இருப்பார்கள்.

சிராவஸ்தி பற்றி இங்கு குறிப்பிட வேண்டி வந்தது ஏன் என்றால் பாராளுமன்றக் கலைப்போடு சிராவஸ்தியில் உள்ளவர்களும் வெளியே போக வேண்டி வரும்.

பாராளுமன்ற கலைப்புச் செய்தி வந்தவுடன் பா.உக்கள் சிலரும் அவர்களது பரிவாரங்களும் சோகமாக இருந்ததாகவும் தகவல்.

வெளிநாடு செல்ல ஏஜென்சியிடம் கடவுச் சீட்டை கொடுத்துவிட்டு சிராவஸ்தியில் தங்கியிருந்தவர்கள் பாடுதான் கவலைக்கிடமாக இருந்தது.

ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரிடம் சிராவஸ்தியை எப்போது காலி செய்யவேண்டி வரும் என்று கேட்டேன். "தற்போதைக்கு உடனடியாக போகச் சொல்லமாட்டார்கள் போல் இருக்கிறது" என்று அரசாங்கத்தின் நாகரிகத்தில் சற்று நம்பிக்கை வைத்து பதில் சொன்னார்.

யாழ் மாவட்ட முன்னாள் அல்லது சமீப முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ் மாவட்டப் பக்கம் எட்டிப் பார்க்கவும் முடியாது.

சமீப காலத்தில் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் புலிகளை கோபப்படுத்தாமல் பேசுவதில் குறியாக இருந்தனர் என்பது மெய்தான்.

ஆனாலும்-புலிகள் என்ன செய்வார்களோ என்று உள்ளூற ஒரு பயம் இல்லாமல் போகாது.

எனவே பாதுகாப்பான சிராவஸ்தியை விட்டு வெளியில் போய் இருப்பதை விடவும், முன்னாள் பா.உ. என்ற அந்தஸ்துடன் விசா எடுத்துக்கொண்டு வெளியே செல்வது புத்தி என்று சிலர் நினைக்கக்கூடும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் மட்டக்களப்பில் குடியேற ஏற்கனவே ஏற்பாடு செய்துவிட்டார்.

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் மட்டக்களப்பில் தங்கியிருக்க முடியும். அதாவது படையினது கட்டுப்பாட்டில் அப்பகுதிகள் இருப்பதால் அவர்களுக்கும் தங்க வசதியாக இருக்கிறது.

தற்போது கலைந்த பாராளுமன்றத்தில் இருந்த தமிழ் பா.உ.க்களில் மிஞ்சி மிஞ்சிப் போனால் மூன்று நான்கு பேருக்கு மேல் எவரும் மீண்டும் பாராளுமன்றம் செல்லப் போவதில்லை என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கே சந்தேகமில்லாமல் தெரியும்.

என்றாலும் முன்னாள் எம்.பி என்று தம் பெயருக்கு முன்னாலோ பின்னாலோ போட்டுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது தமது வாழ்க்கையில் கிடைத்த வரப்பிரசாதம் என்பதையும் அவர்கள் மறந்துவிடக்கூடாது. நன்றியுள்ளவர்களாக இருந்தால் இந்திய அமைதிப்படைக்கு மனதார- ஆனால் இரகசியமாக நன்றியும் சொல்லலாம்.

கடந்த பொதுத் தேர்தல் தமிழ் பகுதிகளில் நடந்த முறையும், தாம் எவ்வாறு தெரிவாக முடிந்தது என்பதும் நமது மு.பா.உக்கள் அறியாத இரகசியம் அல்லவே!

■

# கிழக்கில் கட்சிமாறிகள்

கிழக்கிலே தமிழ் கட்சிகள் யாவும் குறிவைத்துள்ளது பற்றி ஏற்கனவே எழுதியாகி விட்டது.

அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் தேர்தலில் வெற்றிபெற விருப்பம் கொள்வது தவறான விசயம் அல்ல.

ஆனால், எப்படியும் வென்றால் சரிதான், என்ன செய்தும் வாக்குத் தேடலாம் என்றொரு தவறான அணுகுமுறைகள் தமிழ் கட்சிகள் மத்தியில் மேலோங்குவதுதான் பிரச்சனை.

பாராளுமன்றம் கலைபடுவதற்கு முன்னரே (பா.க.மு) தமிழ் கட்சிகள் தமது தேர்தல் வேலைகளை கிழக்கில் முடுக்கிவிடத் தொடங்கியிருந்தன.

இதில் வேடிக்கை யாதெனில் இக் கட்சிகள் கொண்டுவந்து இறங்கியுள்ளவர்கள் பலர் கப்பலில் ஓடிய தமிழர்கள். அதுவும் ஓடும் போது மக்களிடம் கப்பமும் வாங்கிக் கொண்டு ஓடிய தமிழர்கள்.

இந்திய சுதந்திரப் போரில் வ.உ. சிதம்பரம்பிள்ளை (வ.உ.சி) கப்பலோட்டினார்.

ஆனால் இவர்களோ மக்களிடம் வீரத்தை காட்டிவிட்டு, கப்பத்தையும் சுளையாக வாங்கிக்கொண்டு வாலைச் சுருட்டிக்கொண்டு கப்பலில் ஓடியவர்கள்.

இப்போது கேட்டால் தலைமை சரியில்லை என்று கூசாமல் கூறுவார்கள்.

சுருட்டல், ஒதுக்கல் விடயங்களில் மட்டும் இவர்கள் தலைமையைக் கேட்டுத்தான் சுருட்டி தம் பையில் போட்டுக்கொண்டு ஓடினார்களோ என்றால் இல்லை என்பதே பதிலாகிறது.

உதாரணத்திற்கு ஒரு சில கட்சிமாறிகள் பற்றி குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

லியோ செபஸ்தியன் என்பவர் முன்னாள் பா.உ. திவ்வியநாதனின் செயலராக இருந்தவர். சுருட்டல் மன்னர். பின்னர் ஏதோ சுரட்டல் கசமுசா காரணமாகவோ, அல்லது அதிகமாக சுருட்டலாம் என்று ஆசைப் பட்டோ வேறு ஒரு அமைப்பில் சேர்ந்து கொண்டார். அந்த அமைப்பின் சார்பில் பேசும் அளவுக்கு வளர்ந்தது முதல் கட்டம். அகதிகளுக்காக என்று கொடுக்கப்பட்ட பல இலட்ச ரூபாய்களை ஏப்பம் விட்டது அடுத்த கட்டம்.

சம்பந்தப்பட்ட அமைப்பு அவரையும் அவரது கூட்டாளியான 'பற்றி மாஸ்ரர்' (முன்னாள் ரெலோ பிரமுகர்) என்பவரையும் தேடித் திரிவதாகவும், அதனால் அந்த அமைப்போடு தமக்கு 'கொள்கை முரண்பாடு'(?!) என்று இருவரும் கூறித்திரிவதாகவும் தகவல்.

இதுதவிர புளொட்டில் இருந்து விலக்கப் பட்டவர்கள் சிலர் மோகன் குழு என்ற பெயரில் நடமாடுகிறார்கள்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சில பகுதிகளில் மக்களை மிரட்டி, மக்கள் சார்பாக இவர்கள் தமக்குத் தாமே வாக்குப் போட்டு கில்லாடித்தனம் காட்டியவர்கள்.

இன்னொருவர் காளிதாஸ். ஈ.என்.டி. எல்.எஃப். என்னும் அமைப்பில் அதன் தலைவர் பரந்தன் ராஜனுக்கு வலதுகரமாக இருந்தவர்.

அப்படி இருப்பதாகக் காட்டிக்கொண்டே குருவுக்கு மிஞ்சிய சீடராக வாலாட்டியவர். பின்னர் தன்னோடு சிலரை சேர்த்துக் கொண்டு ஒரு குழுவாக மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்.

அதன் பின்னர் ஸ்ரீனிவாசன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவரோடு போய் ஒட்டிக் கொண்டார்.

ஒரு நாள் ஸ்ரீனிவாசனை அகதிகள் மறுவாழ்வு பற்றிய கூட்டத்தில் கலந்துகொள்ள காரில் கொண்டு போய் இறக்கிவிட்ட காளிதாஸ், திரும்பிப் போய் ஸ்ரீனிவாசனின் அறையுள் இருந்த பணத்தை சுருட்டிக்கொண்டு தப்பி ஓடும்போது பொலிசில் சிக்கினார்.

இப்படியாகப்பட்ட காளிதாசும் கிழக்கில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடக்கூடும் என்று ஒரு தகவல். அடேயப்பா! தமிழர்களது அரசியல் எப்படியெல்லாம் முன்னேறி வருகிறது பார்த்தீர்களா? இப்படிப்பட்ட பலர் இன்னமும் இருக்கிறார்கள். சமயம் வரும்போது சுட்டிக் காட்டலாம்.

வெளிப்படையாகச் சொல்வதானால் திருவிழாவுக்குள் பக்தர்கள்போல் வந்து அரோகரா கோஷம் போட்டு சங்கிலி அறுப்பவர்களுக்கும், இந்த கட்சிமாறிகளுக்கும் இடையே பெரிய வித்தியாசங்கள் எதுவுமில்லை.

சங்கிலித் திருடர்கள் பரவாயில்லை என்றும் சொல்லலாம். தாங்கள் மாட்டிக் கொண்டால் பொல்லடி விழும் என்று பயந்து கொண்டிருப்பார்கள்.

இந்த கட்சிமாறிகளுக்கு எவ்வளவு துணிச்சல் பாருங்கள்! செய்வதையெல்லாம் செய்துவிட்டு, இப்போது வந்து புள்ளடி போடுங்கள் என்றல்லவா கேட்கப் போகிறார்கள்.

முடிச்சு மாறிகள் கூட தங்கள் முகங்களைக் காட்ட வெட்கப்படுவார்கள். இந்த கட்சி மாறிகளைப் பாருங்கள், ஒவ்வொரு சீசனுக்கு ஒவ்வொரு கட்சியின் சார்பாக பிரசுரம் அடித்து தமது புகைப்படத்தையும் அதில் போட்டுக் கொள்கிறார்கள்.

நேற்று ரெலோ- இன்று புளொட். நேற்று ஈ.என்.டி.எல்.எஃப். பொறுப்பாளர். இன்று ரெலோ அமைப்பாளர். நேற்று ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பின் கொள்கைத் தூண். இன்று ஈ.பி.டி.பி. அமைப்பின் பிரமுகர். இப்படித்தான் ஒரு கூட்டம் பிழைப்பு நடத்துகிறது.

இதிலே சிலர் தமது கடந்தகால சுருட்டல்களை மறைக்க பெயர்களை மாற்றிக்கொண்டு 'நான் அவனில்லை' என்று நாடகமாடுவதும் சுவையான விசயம்.

எவ்வித சொந்த நலனும் இல்லாமல் தாம் சார்ந்த கட்சிகளுக்காக உழைக்கும் சாதாரண தொண்டர்கள் அக் கட்சிகளை விட்டு வெளியேறுவதும், வேறு ஒரு அமைப்பில் இணைவதும் வேறு விவகாரம்.

தலைமைகளது தவறால் தமது உழைப்பு பயனற்றுப் போகிறது என்று அவர்கள் உணரும் போது விலகிப் போகிறார்கள்.

ஆனால் எந்தக் கட்சிக்குப் போனாலும் வாய்ப்பந்தல் போட்டு பிரமுகர்களாக திரியும் ஓடு காலிகள் மிக மோசமானவர்கள்.

வெண்கலக் கடைக்குள் யானை புகுந்தால் எப்படியிருக்கும்? அப்படித்தான் மக்களுக்குள் இந்த ஓடு காலிகள் புகுந்தாலும் நிலமை விபரீதமாக இருக்கும்.

ஒரு இயக்கத்தில் இருந்து விலகி பிறிதொரு இயக்கத்தில் சேருவது ஜனநாயக உரிமை.

ஆனால்- தேர்தல் சட்டப்படி பயங்கரமான குற்றவாளிகள் - தேர்தலில் நிற்கமுடியாது. அப்படியான விதியை ஜனநாயக விரோதம் என்று எவராவது சொல்ல முடியுமா?

ஜனநாயகம் கேலிக்கூத்தாக மாறாதிருக்கவும் பல விதிகள்-முறைகள் இருக்கின்றன.

ஆனால், நம் தமிழ் அமைப்புக்கள் தமக்குள் உள்ள போட்டிகளால் குடியுரிமையைக் கூட பறிக்கவேண்டிய குற்றவாளிகளையெல்லாம் தங்கள் உறுப்பினர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களில் சிலரை வேட்பாளர்களாகவும் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நிறுத்தித் தொலைத்தார்கள்.

தமிழர்களது தன்மானம் காக்கப் போவதாக ஆயுதம் ஏந்திய அமைப்புக்கள் தமிழர்களது அரசியலின் மானத்தைக் காப்பதற்கு, குறைந்தபட்சமாக கோவணத்தையாவது விட்டு வைக்கவேண்டும்.

ஏற்கனவே நொந்து போயும், தேய்ந்து போயும் உள்ள கிழக்கு மாகாண மக்களது பிரதிநிதித்துவம் குரங்கின் கைப் பூமாலையாக மாறிவிடக்கூடாது.

அவ்வாறு மாறாது தடுக்கும் கடமைப் பாட்டை தமிழ் அமைப்புக்கள் யாவும் புரிந்து கொள்ளுமா என்று தெரியவில்லை.

சில தமிழ் அமைப்புக்கள் கூட்டாக போட்டியிடுவது பற்றி யோசிக்கின்றன.

ஆனாலும் வேட்பு மனு தாக்கல் செய்யும் தினத்தின் பின்தான் கூட்டா? அல்லது ஏட்டிக்குப் போட்டியா என்று தெரியும்.

ஏனெனில் கத்தி எடுத்து தமக்குள் மோதத் தொடங்கும் கடைசி நிமிஷம்வரை கைகுலுக்கிச் சிரித்து, "தமிழர் ஒற்றுமை காப்பீர்" என்று சொல்லி மக்களை ஏமாற்றியவர்கள் அவர்கள்.

தமிழ் அமைப்புக்கள் கரம்கோர்த்து போட்டியிட்டாலும் சரி, களம் இறங்கி மோதிப் போட்டியிட்டாலும் சரி, மக்கள் விரோத சக்திகளை பட்டியல் நிரப்பப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். ●




# அதிரடி அய்யாத்துரை



சபை கலையும் எண்டு நான் முந்தி நீ முந்தி எண்டு செய்தி போட்ட பேப்பருகளை பாத்துத்தான் மந்திரமான வட்டாரங்களுக்கே முழிப்பு வந்ததாம். கலையுமோ கலையாதோ எண்டு ஒருத்தருக்கு ஒருத்தர் போன் எடுத்து தங்களுக்கையே கேட்டுக் கொண்டு பட்ட பாடுதான் பரிதாபம்.

பெட்டியை வாங்கிக்கொண்டு கதிரையை விட்டுக்கொடுத்தவைக்கு லாபம். இப்படி கலையப் போறது எண்டு தெரிஞ்சிருந்தா இழுத்தடிக்காமல் கதிரையால எழும்பியிருப்பினம். போனாக் கிடைக்காது. பொழுதுபட்டா கதிரை இருக்காது எண்ட நிலையிலை உடனடியா காலி பண்ணியிருப்பினம் எண்டு எதிரணி வட்டாரத்திலை அபிப்பிராயம் சொல்லிச் சிரிக்கினம்.

அதிகாரக் கட்சியின் முன்னாள் செயலர் கௌரவமான முறையிலை ஒதுங்கப் போறாராம். ஜப்பானுக்கு போகும் திட்டமும் இருக்குது எண்டு அரசல் புரசலாய் ஒரு செய்தி.

கூட்டு முன்னணியின் இளம் தலைவருக்கு இந்தமுறை எங்கை எலக்சனிலை நிற்கிறதெண்டு ஒரே யோசனையாம். கிட்டடியிலை நயினை அம்மன் திருவிழாவுக்கு போகும் சாக்கிலை போய் தீவுப் பகுதியை நோட்டம் விட்டுப்போட்டு வந்திருக்கிறார். எந்தக் களத்திலை சேனாதிபதியாய் குதிக்கப் போறாரோ தெரியேல்லை.

திருவான மலையிலை நகரத்தின் தலைவருக்கு புது ஐடியா வந்திருக்குதாம். சபைத் தலைவரா இருந்து ஒரு புண்ணியமும் இல்லை. பொதுத் தேர்தலிலை நிண்டா புள்ளடி விழுமோ எண்டு ஆராய்ந்து கொண்டிருக்கிறாராம்.

தமிழ் இயக்கமொண்டு தியாகிகள் தினம் வன்னியிலை நடத்தினவை. அதிலை போய் நிகழ்ச்சியையே கேலி பண்ணுறமாதிரி ஒரு எம்.பி. பேசியிருக்கிறார். ரெண்டு எழுத்தாரோடு மட்டும் பேசி பிரச்சனையை தீர்க்கலாம் எண்டு அவர் சொல்ல நிகழ்ச்சி நடத்தின இயக்கக்காரர் முகத்தில் ஈயாடேல்லையாம். எங்கை எதைப் பேசுறது எண்டு தெரியாதவையை எம்.பியாக்கியது யார் குற்றம்? ரெண்டு எழுத்தாரை கண்டிக்கும் தினத்திலை கைகொடுத்து வாழ்த்துற மாதிரிப்பேசிப்போட்டு வந்து போட்டார். மனுசன் புரட்...ச்..சி..வாதிதானுங்கோ. குடும்பம் மட்டும் இலண்டனிலையாம். ஏதோ எம்பியான புண்ணியத்திலை அவராலை தன் குடும்பத்துக்கு அதையாவது செய்ய முடிஞ்சுதே. அவருக்கே தெரியும் இனி ஒரு சான்ஸ் எந்த ஜென்மத்திலையும் இப்படிக் கிடையாது எண்டு.

அதிகாரக் கட்சிக்கு மறுபக்க ஆட்களை கொண்டு வந்ததிலை அம்மா மகனுக்கு பெரிய இடத்தவர் பேய் மரியாதையாம்.

உள்ளூர் செய்தியள் போடலாம் எண்ட உடனை பி.பி.சி-ரி.வி நியூஸிலை (ஈ.ரி.வி) ரெண்டு எழுத்தாற்றை பேட்டியள், படங்கள் எண்டு போட்டுப் பின்னிப்போட்டினம். உள்ளூர் அதிகாரிகள் முழிச்சதுதான் மிச்சம்.

நீலத்தையும், பச்சையையும் பகைக்காமல் இடையிலை நிண்டு சுழி ஓட சில அரசியல் கட்சிகள் நினைக்கினம். சுழி ஓட்டத்துக்கு அவை சொல்லுற பெயர் தனித்துவம். எல்லாம் அரசியல்தான்.

அழுகணிச் சித்தர் பாடல் ஒண்டு. கருத்தை கண்டு பிடியுங்கோ. கஷ்டமில்லை.

"மை யூரி லேயிருந்து பாழூரிலே பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்.
மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
மை யூரும் மெய்யூரும் என் கண்ணம்மா
பாழாய் முடியாவோ."

# சமாதானத் தூதராக முகம்மது அலி



"நான் போர்க்களம் போகமாட்டேன். எவருடனும் எனக்கு எத்தகைய கோப தாபமும் கிடையாது." என்று அறுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அடம்பிடித்தார், உலகக் குத்துச் சண்டை சாம்பியனான (காசியல் கிளே) முகம்மது அலி. அமெரிக்க அரசு தென் வியட் நாம் நாட்டில் வட வியட் நாம்-வியற் கொங் ஆக்கிரமிப்பாளர் களுக்கு எதிராக பெரும் போர் தொடுத்திருந்தது. அப்போர்முனைக்கு முகம்மது அலியையும் போயாக வேண்டும் என்று அமெரிக்க அரசு நிர்ப்பந்தித்தது. அமெரிக்க குடிமகன் ஒவ்வொருவரும் 16 வயதுக்குமேல் இராணுவத்தில் சேர்ந்து பணிபுரிய வேண்டும் என்ற சட்டத்தைக் காட்டி மிரட்டியது. "சிறை போவதானாலும் நான் தயார். ஆனால் இராணுவத்தில் சேர்ந்து துப்பாக்கி ஏந்தி, எந்த மனிதனையும் கொல்ல நான் ஒரு போதும் சம்மதிக்கமாட்டேன்" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இவ்வாறு கூறும் கருணை உள்ளம் கொண்ட முகம்மது அலி, குத்துச் சண்டை அரங்கில் மோதும் போது எதிரணியைச் சேர்ந்தவரை குத்து குத்தென்று குத்தி குற்றியிராக்கி விடுவார்.

இவர் 1974ல் குத்துச்சண்டைக்கு 'குட்பை' சொல்லிவிட்டார்.



இப்பொழுது 'பார்கின்சன்' நோயின் பாதிப்பினால் துன்புறுகிறார்.

போர் வீரனாக வியட் நாம் செல்ல மறுத்த முகம்மது அலி, இப்பொழுது சமாதானத் தூதுவனாக வட வியட் நாம் சென்றுள்ளார். போர் நடைபெற்ற காலங்களில் மரணமானவர்கள், நாடு திரும்பியவர்கள் போக காணாமல் போய் விட்ட அமெரிக்கப் போர் வீரர்கள் பற்றிய விபரங்களை அறிய அமெரிக்கா ஒரு தூதுக்குழுவை அங்கு அனுப்பியிருக்கிறது. அக்குழுவுடன் சென்ற முகம்மது அலி, ஹனோய் நகரில் வியட் நாம் மக்களால் அன்புடன் வரவேற்கப்பட்டார்.

"நான் அன்று ஒரு போர் வீரனாக உங்களை எதிர்கொள்ள வரமுடியாது என்ற எனது கூற்று மிகவும் சரியானதே என்று இன்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. இதனால் நான் மேலும் உறுதியுடையவனாகி இருக்கிறேன்" என்று அவர் இளைஞர்கள் மத்தியில் கூறினார்.

## மெல்லத் திறக்கும் கதவு

பொதுவுடைமைக் கொள்கையை சீனா கைவிடாதபோதும் தனியார் உடமைகளுக்கு தகவு திறந்துவிட ஆரம்பித்திருக்கிறது. உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் உதவ வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்ய வேண்டும் என்று சீனா கேட்டிருக்கிறது.

வெளிநாட்டு நிறுவனங்கள் சீனாவில் முதலீடு செய்து, விமான நிலையம் அமைப்பது, ஓடுபாதை அமைப்பது ஆகியவற்றுக்கு அனுமதிக்கப்படும் என்று அறிவித்துள்ளது சீனா.




# குழப்பக்காரர்கள் அமெரிக்கா வரத்தடை!

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியிருக்கக் காணப்படுகின்றன.

உற்சாகமும், உத்வேகமும் நிறைந்த உலகக் கிண்ண போட்டிகளைப் பார்வையிட, பந்தயங்களில் குதித்துள்ள நாடுகளின் இரசிகர்கள் தினமும் அமெரிக்கா நோக்கிப் படையெடுத்தவண்ணமிருக்கின்றனர்.

தொலைக்காட்சிகள் வாயிலாக உலகம் முழுவதும் அனைத்துப் போட்டிகளும் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. இருந்த போதிலும் தமது நாட்டு அணியினரை. மைதானங்களில் நேரடியாகவே சென்று உற்சாகப்படுத்த வேண்டுமென்ற பேரவா காரணமாக பல ஆயிரக்கணக்கான உதைபந்தாட்ட இரசிகர்கள் அமெரிக்கா வந்த வண்ணமுள்ளனர்.

பிரேஸில் அணியே இதுவரை இடம்பெற்ற முதல் சுற்றுப்போட்டிகளில் திறமையாக ஆடி இரண்டாவது சுற்றுக்குள் பிரவேசிக்கும் தகுதியைப் பெற்ற முதலாவது நாடாகியுள்ளது.

பிரேஸில் உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரை பல சிறப்புக்களைக் கொண்டிருக்கக் காணப்படுகின்றது.

## பிரேஸில் விழாக்கோலம்!

தென் அமெரிக்க நாடான பிரேஸில் 1930ம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமானதையடுத்து தொடர்ச்சியாக உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் ஒரு நாடாக இருக்கின்றது.

பிரேஸில் நாட்டு மக்களை உதைபந்தாட்டம், பெரிதும் கவர்ந்திருக்கக் காணப்படுகின்றது. பிரேஸிலின் மூலை முடுக்கெல்லாம் எக்காலத்திலும் மக்கள் வயது வேறுபாடின்றி உதைபந்தாட்டத்தில் எவ்வேளையிலும் ஈடுபட்டிருப்பதைக் காணமுடியும்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒருதடவை இடம்பெறும்போது பிரேஸில் நாடு முழுவதுமே விழாக்கோலம் பூண்டிருக்கக் காணப்படும்.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட நாட்களில் 'பிரேஸிலின் உதைபந்தாட்ட வீரர்களே' அந்நாட்டில் அனைத்துமாக எதிலும் பிரதிபலித்திருக்கக் காணப்படுவர்.

வீடுகள், ஹோட்டல்கள், மதுபானச் சாலைகள், விடுதிகள் என்பன தொலைக்காட்சிகளில் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக மக்களால் நிரம்பி வழிந்திருக்கக் காணப்படும்.

பிரேஸில் நாட்டவர்கள் உதைபந்தாட்டத்தை இவ்வாறு உயிருக்கு உயிராக நேசிப்பதனாலேயே, அந்நாடு இதுவரை மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

## உதைபந்தாட்ட வீரர் பேலே

1958,1962,1970ம் ஆண்டுகளில் பிரேஸில் உலகக் கிண்ண சாம்பியனாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர பல முன்னணி உதைபந்தாட்ட வீரர்களையும் பிரேஸில் உருவாக்கியுள்ளது. இவர்களில் பேலே (Pele) தலை சிறந்தவராவார்.

பிரேஸில் நாட்டின் உதைபந்தாட்ட நட்சத்திரமான பேலே இன்றுங்கூட உதைபந்தாட்ட இரசிகர்களால் பெரிதும் போற்றப்படுகின்றார்.

தமது 17 வயதில் 1958ம் ஆண்டு பிரேஸில் உலகக் கிண்ண அணியில் பேலே இடம்பிடித்தார். தொடர்ந்து 1970ம் ஆண்டுவரை உலக உதைபந்தாட்ட அரங்கில் அவர் ஓர் 'அசகாய சூரராகவே' விளங்கியிருந்தார்.

பந்தை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பது, எதிரணியினரின் வியூகங்களை ஊடறுத்துச் சென்று அநாயாசமாக கோல்களைப் போடுவது போன்றவற்றில் பேலே தன்னிகரற்று விளங்கினார்.

இதன் காரணமாகவே பிரேஸில் அணி பேலே இடம்பெற்ற 1958, 1962, 1970ம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை சுவீகரித்திருந்தது.

## தங்கக் கிண்ணம்

1970ம் ஆண்டில் தங்கத்தினாலான 30 செ.மீட்டர் உயரம் கொண்ட உலகக் கிண்ணம் பிரேஸில் நாட்டிடமே நிரந்தரமாகக் கையளிக்கப்பட்டிருந்தது. 1930ம் ஆண்டிலிருந்து பாவனையிலிருந்த இந்த உலகக் கிண்ணம் ஜுலஸ் ரிமெட் (Jules Rimet) கிண்ணம் என்று அழைக்கப்பட்டிருந்தது. பிரெஞ்சு நாட்டுக்காரர் ஒருவரே இதனை வடிவமைத்திருந்தார்.

மர்மமான முறையில் 1966ம் ஆண்டு இந்த உலகக் கிண்ணம் திருட்டுப் போயிருந்தது. இதனையடுத்து மோப்பம் பிடிக்கும் நாய் ஒன்று இக்கிண்ணத்தை கண்டுபிடித்திருந்தது.

பிரேஸில் வசம் 1970ம் ஆண்டிலிருந்து நிரந்தரமாக இருந்த உலகக் கிண்ணம் 1983ம் ஆண்டு மீண்டும் திருட்டுப் போயுள்ளதுடன், இதுவரை அக் கிண்ணம் கண்டுபிடிக்கப் படாமலேயே இருக்கின்றது.

உலகக் கிண்ணத்தை 1970ம் ஆண்டு பிரேஸில் நிரந்தரமாகத் தன்வசமாக்கிய பின்னர் புதிய உலகக் கிண்ணம் ஒன்று வடிவமைக்கப்பட்டிருந்தது.

அக்கிண்ணமே தற்போது பாவனையில் இருந்து வருகின்றனது. 50 செ.மீட்டர் உயரமுடையதாகவும் தங்கத்தினாலானதாகவும் தற்போதைய உலகக் கிண்ணம் விளங்குகின்றது.

இக்கிண்ணத்தை ஜெர்மனி இரு தடவைகளும், ஆர்ஜன்டீனா இரு தடவைகளும், இத்தாலி ஒரு தடவையும் சுவீகரித்துள்ளன.

இத்தடவை இக்கிண்ணத்தை சுவீகரிப்பதில் பிரேஸில், ஆர்ஜன்டீனா, ஜெர்மனி ஆகிய நாடுகளே முன்னணியில் திகழுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

## அவதானம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை அசம்பாவிதங்கள் எதுவுமின்றி வெற்றிகரமாக நடத்துவதில் அமெரிக்கா மிக அவதானமாகவே இருந்து வருகின்றது.

கடந்தவாரம், உலகக் கிண்ணப் போட்டிகளைப் பார்வையிட ஹொலந்தில் (Holland) இருந்து அமெரிக்கா வந்திருந்த பதினெட்டு உதைபந்தாட்ட இரசிகர்களை விமான நிலையத்தில் வைத்தே அமெரிக்க பொலிசார் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இப்பதினெட்டுப் பேரும் 1990ம் ஆண்டு இத்தாலியில் இடம்பெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின்போது குழப்பம் விளைவித்தவர்கள் என்று கண்டறியப்பட்டதையடுத்தே, அமெரிக்காவுக்குள் இவர்கள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.



இதுதவிர இரு ஐரிஷ் நாட்டு இரசிகர்களும் அமெரிக்காவுக்குள் வர அனுமதி மறுக்கப்பட்டிருந்தன. இவர்கள் உதைபந்தாட்டப் போட்டிகளில் குழப்பங்களை விளைவிப்பதில் முக்கியமானவர்கள் என்று அறியப்பட்டதையடுத்தே, அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்திருந்தது.

உதைபந்தாட்டப் போட்டிகள் இடம் பெறும் அனைத்து மைதானங்களிலும், கூடுதல் பொலிசார், கலகமடக்கும் விசேட பயிற்சிகள் பெற்றவர்களாக நிறுத்திவைக்கப் பட்டுள்ளனர்.

## இரசிகர்கள் ஆத்திரம்

இதேவேளை பிரேஸில் நாட்டில் மின்சாரம் திடீரென தடைப்பட்டு, தொலைக் காட்சியில் போட்டிகள் நிறுத்தப்பட்டதையடுத்து, இரசிகர்கள் கலகம் செய்த சம்பவம் ஒன்றும் கடந்தவாரம் இடம்பெற்றிருந்தது.

பிரேஸிலின் ரொன்டோனியா என்ற மாநிலத்தில் உள்ள நகரம் ஒன்றில் மக்கள் உலக உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிட்ட வண்ணமிருந்தனர். ரஷ்யாவுக்கும், பிரேஸிலுக்கும் இடையே இடம்பெற்ற போட்டி தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட வேளை மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

இதனையடுத்து ஆத்திரம் கொண்டு தமது வீடுகளுக்குள் இருந்து வெளியேறிய மக்கள், தமது நகரத்தின் மேயரது வீட்டைக் கற்களை வீசிச் சேதப்படுத்தியுள்ளனர். அத்துடன் தமது பிரதேசத்தின் மின்சார நிலையத்துக்கும் படையெடுத்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்களில் ஒன்றுக்கும் அவர்கள் தீ வைத்துள்ளனர்.

சுமார் ஆயிரம் பேர்வரை இந்த அட்டகாசத்தில் குதித்து தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தியிருந்தனர் என்று பிரேஸில் பொலிசார் தெரிவித்திருந்தனர்.

## ஸ்ட்ரைகர்

ஸ்ட்ரைகர் (Striker) இதுவே உலக உதைபந்தாட்டச் சின்னமாக தெரிந்தெடுக்கப் பட்டுள்ள நாய்குட்டியின் பெயராகும்.

ஸ்ட்ரைகர் நாயின் பல்வேறு வடிவத்திலுமான படங்கள் அமெரிக்காவில் வெளியிடப்பட்டிருக்கக் காணப்படுகின்றன.

ஒவ்வொரு சர்வதேச விளையாட்டுப் பந்தயத்திற்கும் ஒரு உத்தியோக பூர்வ சின்னம் தேர்ந்தெடுக்கப்படுவதுண்டு. இச் சின்னங்கள் பெரும்பாலும் பறவைகள், விலங்குகளாகவே இருப்பதுண்டு.

இந்நிலையில் அமெரிக்காவில் இடம் பெறும் உலக உதைபந்தாட்டப் போட்டிகளின் உத்தியோக பூர்வ சின்னமாக வரையப் பட்டுள்ள நாய்க்கு ஸ்ட்ரைகர் என்று பெயரிடப்பட்டுள்ளது.

உதைபந்தாட்டத்தில் கோல்களைப் போடுபவரையே ஸ்ட்ரைகர் (Striker) என்று குறிப்பிடுவதுண்டு. எனவே அந்த நாய்க் குட்டிக்கும் 'ஸ்ட்ரைகர்' என்றே பெயரிடப்பட்டுள்ளது.

## ஆயுதம் விற்கும் மண்டேலா

## "தீவிரவாதிகளுக்கு உதவி கிடையாது"



இன ஒதுக்கல் கொள்கை அமுலில் இருந்தபோது தென் ஆபிரிக்காவுக்கு பல தடைகள் ஐக்கியநாடுகள் சபையால் விதிக்கப்பட்டிருந்தது.

அதில் ஒன்றுதான் தென் ஆபிரிக்கா, வேறெந்த நாட்டுக்கும் ஆயுதம் விற்கக்கூடாது என்பதும். 10 ஆண்டுகளாக அந்தத் தடை இருந்தது.

இப்போது இனவெறி மறைந்து மண்டேலா, தலைமையிலான அரசு ஆட்சிபீடத்தில் குடிபுகுந்திருக்கிறது. இதனை அடுத்து தென் ஆபிரிக்கா மீதான தடைகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. ஆயுதம் விற்பதன் மூலம் நாட்டுக்கு வருவாய் கிடைக்கும் என்பதால் ஆயுத ஏற்றுமதியை அதிகரிக்க மண்டேலா அரசு முடிவெடுத்துள்ளது.

இதனால் பல நாடுகள் அச்சமடைந்துள்ளன.

தமது நாடுகளில் உள்ள தீவிரவாதிகளிடம் ஆயுதம் போய்ச் சேரும் என்று அவை பயப்படுகின்றன.

இதேவேளை, தமது நாடுகளுக்கு தென் ஆபிரிக்கா ஆயுதம் விற்பனை செய்தால் உதவும் என்று தீவிரவாத அமைப்புக்கள் பயப்படுகின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கை அரசுக்கு தெ.ஆபிரிக்கா ஆயுதம் விற்பனை செய்யக்கூடாது என்று அறிக்கை விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தீவிரவாதிகளுக்கு ஆயுத விற்பனை அறவே கிடையாது என்கிறது மண்டேலா அரசு.

## 'பழைய ஏற்பாடு' பைபிள் தொடர் அரபு நாடுகள் எதிர்ப்பு!

பைபிள் பெயரில் பழைய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட- 21 வாரங்களுக்கான தொலைக்காட்சி தொடர் ஒன்றுக்கு அரபு நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.


சுமார் 36 கோடி ரூபாய் செலவில் இத்தாலி-ஜெர்மன் தயாரிப்பாளர்கள் இணைந்து தயாரித்த பைபிள் தொடருக்கே எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதுவரை பைபிளை அடிப்படையாக வைத்து 251 படங்கள்வரை தயாரிக்கப் பட்டுள்ளன. அவற்றுக்கு எதிர்ப்புக் காட்டாத அரபு நாடுகள் 'பழைய ஏற்பாட்டின்' அடிப்படையிலான பைபிள் தொடரை மட்டுமே எதிர்த்துள்ளன.

## ஈராக்கை உடைக்க சதி?

வளைகுடா போர் முடிந்த பின்னரும் ஈராக் பிரச்சனை ஓயவில்லை.

அமெரிக்கா ஈராக்கை ஒருகை பார்த்து விடுவது என்று தீர்மானித்துவிட்டது.



ஈராக் அதிபர் சதாம்

ஈராக்கில் போராடிவரும் ஷியா, குர்ஷித் தீவிரவாதக் குழுக்களுக்கு அமெரிக்கா உதவி செய்வதாக ஈராக் குற்றம் சாட்டுகிறது.

குர்திஷ் மக்கள் குர்திஷ் ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் தனிநாடு கேட்டுப் போராடுகிறார்கள்.

ஈராக்கின் தென்பகுதியில் உள்ள ஷியா முஸ்லிம்களும் அமெரிக்க உதவியோடு போராடிவருகிறார்கள்.

இதனால் ஈராக் வடக்கு-தெற்கு மற்றும் மத்திய ஈராக் என்று மூன்றாக உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈராக் படைக்கும் குர்திஷ் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதலில், இதுவரை நான்காயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர்.

## விளம்பரமும்-விளையாட்டும்



காபிரேலலி நீஸ் ஒரு மொடல் அழகி. 24 வயது. 1.9 மீட்டர் உயரம். இவர் ஒரு விளம்பர நிறுவனத்தினைச் சேர்ந்தவர். ஒரு சஞ்சிகையில் கட்டுரைகளும் எழுதுகிறார்.

கரப்பந்தாட்டத்தில் மிகவும் ஈடுபாடு கொண்ட இவர் கடற்கரைக் கரப்பந்தாட்ட (வொலிபோல்) குழுவின் காப்டனாகவும் விளங்குகிறார்.

"எனது சக்தியை ஏதாவது பிரயோசனமான வழி முறைகளில் செலவிட வேண்டும் என்பதே எனது நோக்கம்" என்கிறார்.


விளம்பரதாரர் கவனத்திற்கு
எமது புதிய முகவரி
இல.5, காவிந்த பிளேஸ்,
கிருளப்பனை, கொழும்பு-06.
தொலைபேசி- 852041
ஹைலெவல் றோட்டில் சீபல் மாவத்தைச் சந்திக்கு எதிர்ப்புறம்.
பஸ் இல. 138,112,131,125,122,115

## அலசுவது – இராஜதந்திரி

# அர்த்தமற்ற போரின் 'வீர-தீர' கௌரவங்கள்!

வீர-தீரச் செயல்கள் புரிந்த 976 படை வீரர்கள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவினால் கடந்த வாரம் அதிவிசேட விருதுகள், பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இலங்கையின் முப்படைகளையும் சேர்ந்த பல்வேறு தரத்திலுமான படைவீரர்கள் இந்த உயர் கௌரவங்களைப் பெற்றிருந்தனர்.

தாய்நாட்டைக் காப்பதற்கான வீர-தீரச் செயல்களில் ஈடுபடுவோர் கௌரவிக்கப்படுவது, அனைத்து நாடுகளிலும் பன்னெடுங்காலப் பாரம்பரியமாகவே இருந்து வருகின்றது.

இலங்கையில் 1991ம் ஆண்டு இடம்பெற்ற படையினரைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியில் இலங்கை இராணுவத்தின் முக்கிய 'ஹீரோ'க்களாக விளங்கிய டென்ஸில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோரும் அதி உயர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

முன்னாள் இராணுவ பாரம்பரியங்களுடன் கூடிய கண்கவர் வைபவமொன்றில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அன்று இராணுவத்தில் உன்னத சேவையாற்றியமைக்காக டென்ஸில் கொப்பேகடுவ, விஜயவிமலரத்ன ஆகியோருக்கு பதக்கங்களை அணிவித்துக் கௌரவித்திருந்தார்.

ஆனால் இன்று மூன்று வருடங்களின் பின்னர் டென்ஸில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோர் மரணத்தைத் தழுவிய நிலையில், ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவும் அமரத்துவம் அடைந்திருக்கக் காணப்படுகின்றார்.

இந்த மூவரும் மட்டுமல்ல தேசிய பந்தோபஸ்து அமைச்சர்களாக இருந்த லலித் அத்துலத் முதலி, ரஞ்சன் விஜேரத்ன, மற்றும் கடற்படைத் தளபதியாகவிருந்த கிளான்ஸி பெர்ணாண்டோ போன்றோரும் கோரமான முறையில் கொல்லப்பட்டிருக்கக் காணப்படுகின்றனர்.

வீர-தீரச் செயல்களில் ஈடுபட்டமைக்காக படையினர் கௌரவிக்கப்பட்டனர். ஆனால் நாட்டின் தலைவர் உட்பட, நாட்டின் பாதுகாப்பைப் பேணுவதில் முதுகெலும்பாக இருந்தவர்கள் கடந்த ஆண்டுகளில் கொல்லப்பட்டமை, எத்தகைய வீர-தீரச் செயல்கள் இடம்பெற்ற போதிலும், நாட்டின் ஒட்டு மொத்தமான பாதுகாப்பு, அமைதி, ஒருமைப்பாடு என்பன தொடர்ந்து கேள்விக்குறியாக இருப்பதனையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் கடந்த பத்து வருடகாலமாக இடம்பெற்று வரும் யுத்தம், மற்றும் கடந்த காலங்களில் தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தினருக்கெதிரான நடவடிக்கைகள் என்பவற்றில் சிறப்பாகப் பணிபுரிந்தவர்களே இத்தடவை கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

ஆங்கிலேயரின் வருகையையடுத்து நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இலங்கையின் பாதுகாப்புப் படைகள் பெரும்பாலும் பிரிட்டிஷ் முப்படைகளின் பாரம்பரியங்களைத்தழுவியதாகவே தமது கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கக் காணப்படுகின்றன.

பயிற்றுவிக்கும் நிலையம் காணப்படுகின்றது.

இதுதவிர, கொழும்பு இரத்மலானையில் முன்னாள் இலங்கைப் பிரதமரான சேர். ஜோன் கொத்தலாவலயின் வாசஸ்தலம் கூட இன்று ஒரு இராணுவப் பயிற்சிக் கல்லூரியாக இயங்கி வருகின்றது. இங்கிருந்தும் பயிற்சிகளைப் பெற்று வெளியேறுவோர், இராணுவ ரீதியிலான கல்வித்துறையில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தோராகவே இருக்கின்றனர்.

இவைதவிர கடற்படை, விமானப் படை என்பவற்றிலும் பெருமளவில் பலர் சேர்க்கப்பட்டிருப்பதுடன், இப்படைகளும் திருகோணமலை, கொழும்பு, ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்களைக் கொண்டுள்ளன.

கடந்த பத்துவருட காலத்தில் இலங்கைப் பாதுகாப்புப் படையின் பலம் பாரியளவில் அதிகரித்திருக்கின்றது. கூடவே பாதுகாப்புத் துறைக்கே நாட்டில் பெருமளவு நிதி வருடந்தோறும் ஒதுக்கப்படுவதாகவும் இருக்கின்றது.

நாட்டின் வடக்கு-கிழக்கில் தோற்றம் பெற்ற ஆயுதப் போராட்டத்தை முறியடிக்கும் வகையில் பலகோடி ரூபா விரயத்துடன் படையினரின் பங்களிப்புக் காணப்படுகின்ற போதிலும், எத்தகைய விதத்திலும் ஒரு காத்திரமான தீர்வை எட்டாததாகவே வடக்கு கிழக்குப் பிரச்னை காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் யுத்தப் பிரதேசங்களில் வீர-தீரம் காட்டியோர் என்று கூறி தொளாயிரத்துக்கும் அதிகமான படையினருக்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க கடந்தவாரம் விருதுகள், பதக்கங்கள் வழங்கிக் கௌரவித்திருந்தார்.

இலங்கையின் பத்து வருடகால வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இந்தியாவும் இருவருடங்கள் நேரடியாகக் குதித்திருந்தது.

1987ம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து 1989ம் ஆண்டுவரை இந்தியப் படையினர்இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் நிலைகொண்டிருந்தனர்.

இந்தியப் படையினர் வடக்கிலும் கிழக்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக் கெதிராக தீவிர மோதல்களில் குதித்திருந்ததுடன், தமது நவீன போர்ச் சாதனங்களையும் இந்த மோதல்களில் விரிவான முறையில் பயன்படுத்தியிந்தனர்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக் கெதிராகப் போராடுவதில் தமது திறமையை வெளியிட்டிருந்த இராணுவ அதிகாரிகளுக்கு இந்திய அரசாங்கமும் உயர் விருதுகளை வழங்கிக் கௌரவித்திருந்தது.

யாழ்ப்பாணத்தை முற்றுமுழுதான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும்

எதிர்கொண்டவர்களாக தமது டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இந்தியப் படையினர் யாழ்குடாநாட்டின் மீதான முற்றுகையை முன்னெடுத்திருந்தனர்.

யாழ் குடாநாட்டின் மீதான முற்றுகையின்போது படையணியொன்றை வெற்றிகரமாக யாழ் நகரை நோக்கி நகர்த்தியமைக்காக மஞ்சித் சிங் என்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரிக்கு இந்திய அரசு உயர் விருதொன்றை வழங்கிக் கௌரவித்திருந்தது.

இதுதவிர புலிகளை எதிர்த்துப் போரிட்டு மரணத்தைத் தழுவிய இளம் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் சார்பாக அவரது விதவை மனைவிக்கும் இந்தியாவின் குடியரசு தின வைபவமொன்றின்போது கௌரவ விருதொன்று வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது.

இவைதவிர வேறு சில இந்தியப் படை அதிகாரிகளும் இந்திய அரசினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட



புலிகளின் மாவீரர் சமாதி

புலிகளின் இராணுவ பலம், அவர்களது கட்டமைப்பு, மற்றும் போர்த் தந்திரங்கள் என்பன மிகவும் சிறந்த நிலையில் இருந்து வருவதனையும், அவர்களை வெற்றி கொள்வது இலகுவான காரியமல்ல என்பதனையுமே, இலங்கை இராணுவத்தினர் மட்டுமல்ல, இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளும் தெளிவுபடுத்துவனவாக இருக்கின்றன.

1987ம் ஆண்டு வடக்கே இருபெரும் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. 'ஒப்பரேஷன் லிபரேஷன்' (Operation Liberation) என்ற பெயரில் வடமராட்சிப் பிரதேசத்தில் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அப்போது, மறைந்த டென்ஸில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோர் உட்பட இன்றைய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா கூட நேரடியாக மோதல்களில் குதித்திருந்தார்.

ஆயிரக்கணக்கான போர்வீரர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையை தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியும் யாழ் குடாநாட்டிலிருந்து கண்காணித்துவந்தார்.

ஆயினும் இந்தியாவின் தலையீட்டையடுத்து வடமராட்சி இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தஞ் செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து அமைதிப்படையினர் என்ற ரீதியில் இந்தியப்படையினர் இலங்கை வந்திருந்தனர். ஆயினும்

மறுபுறத்தே தமிழீழ விடுதலைப்புலிகளும் மோதல்களின்போது திறமையை வெளிப்படுத்திய தமது இயக்க உறுப்பினர்களைப் பாராட்டுவோராக இருக்கக் காணப்படுகின்றனர்.

வடபிராந்திய இராணுவத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவ, அவரது துணை அதிகாரி விஜய விமலரத்ன ஆகியோர் உட்பட ஒன்பது படையதிகாரிகளைக் கொன்ற கண்ணி வெடியைப் புதைத்தமைக்காக புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் அவ்வியக்கத் தலைவர் வே.பிரபாகரனால் பாராட்டப்பட்டிருந்தனர். இது தவிர பல்வேறு மோதல்களிலும் தமது திறமையை வெளிப்படுத்திய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை அவ்வப்போது பாராட்டுவதைப் புலிகள் இயக்கம் வழக்கமாகக் கொண்டுள்ளது.

கூடவே மோதல்களின்போது உயிரிழந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் 'மாவீரர்கள்' என்ற பெயரில் நினைவு கூரப்படுகின்றனர்.

இறந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் நினைவாக யாழ்குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் கல்லறைகள், நினைவாலயங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. வீதிகள், கட்டிடங்கள் என்பன கூட இறந்த புலிகள் இயக்க உறுப்பினர்களின் பெயர்களைக் கொண்டுள்ளன.

எனவே இலங்கைப் படையினரும், மறுபுறத்தே தமிழீழ விடுதலைப்புலிகளும் தத்தமது தரப்பினரின் வீர-தீரங்களைப் பாராட்டியும், நினைவுகூர்ந்தும் வருகின்ற போதிலும் எந்தவிதத்திலும் தமது நடவடிக்கைகளில் ஒரு முற்றுமுழுதான வெற்றியைப் பெற முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் மூலமாக எவ்வித வெற்றியையும் பெற்றுவிட முடியாதென்பதை இலங்கை இராணுவத்தினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நன்கு உணர்ந்துள்ளனர். ஆயினும் தம்மிடையேயான மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படாத சூழ்நிலையிலேயே அவர்கள் இருந்து வருகின்றனர்.



டென்ஸில் கொப்பேகடுவ

மறைந்த பிரபல இராணுவ அதிகாரியான டென்ஸில் கொப்பேகடுவ கூட இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும், அரசியல் நடவடிக்கைகள் மூலமாகவே வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வைக் காண முடியும் என்று முன்பு பலதடவைகள் குறிப்பிட்டு வந்தார்.

இராணுவத்தின் இன்றைய உப-தளபதியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றிலும்,

# வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வே சிறந்த பரிகாரம் எனக் குறிப்பிட்ட டென்ஸில் கொப்பேகடுவ!

இலங்கை சுதந்திரமடைந்தது முதற்கொண்டு நீண்டகாலமாக பிரிட்டனிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள், மற்றும் இராணுவ சாதனங்களே இலங்கைப் படையினரிடம் காணப்பட்டன. அத்துடன் இலங்கையின் இளம் படையதிகாரிகளும் பிரிட்டனிலேயே கூடுதல் பயிற்சியினைப் பெற்று தமது இராணுவத் துறை சார்ந்த அறிவைப் பெற்றிருந்தனர்.

இலங்கையின் மலைநாட்டில் உள்ள தியத்தலாவப் பகுதியில் இலங்கைப் பாதுகாப்புப் படையினரைப்

வகையில் 'ஒப்பரேஷன் பவான்' என்ற பெயரில் இந்தியப் படையினர் 1987ம் ஆண்டில் பாரிய இராணுவ நடவடிக்கையில் குதித்திருந்தனர். இந்த நடவடிக்கையின்போது யாழ்ப்பாண நகரை நோக்கி இந்திய இராணுவத்தின் படையணிகள் விரிவான நகர்வுகளை மேற்கொண்டிருந்தன. அப்போது இந்தியப் படையினருக்கு கண்களில்பட்ட அனைத்துமே 'புலி'யாகத் தெரிந்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடுந்தாக்குதல்களை

வீர-தீரச் செயல்களுக்காகக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

எனவே இலங்கைப் படையினர் மட்டுமல்லாது, இந்தியப் படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமரிட்டமைக்காகக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை-இந்தியப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் வெளிப்படுத்திய வீர-தீரம் என்பது, மறுபுறத்தே புலிகளின் பலத்தையும் வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றது.

இந்தியப்படையினரும் நாளடைவில் புலிகளுக்கெதிராக கடும் மோதல்களில் குதித்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த பத்து வருடகாலத்தில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசம், குறிப்பாக யாழ் குடாநாடு பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்குட்பட்டதாகவே இருக்கக் காணப்படுகின்றது. இராணுவத்தினரின் வீர-தீரங்களைக் கௌரவித்து அரசாங்கம் விருதுகள், பதக்கங்களை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் நடவடிக்கை மூலமாகவே நிரந்தரத் தீர்வைக் காண முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

புலிகளும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாகவே அண்மையில் தெரிவித்திருந்தனர்.

ஆனால் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளோ, நாட்டு நலனைக் கருத்தில் கொள்ளாததாகவும், வெறும் பித்தலாட்டமான அரசியல் சார்ந்ததாகவுமே இருக்கக் காணப்படுகின்றது.

# அடங்கா முடியை அடக்குவது எப்படி?

## அடர்ந்த கூந்தலை அழகுபடுத்தும் முறை!



பெண்களின் அழகுக்கு மேலும் அழகூட்டுவது அவர்களுடைய சிகையே! அழகாக-அளவான சுருள்களுடன் நீண்டு வளர்ந்த தலை முடியையே பெரும்பாலான பெண்கள் விரும்புவார்கள். பெரும்பாலான ஆண்களைக் கவர்ந்திழுப்பதும் அதுவே!

தங்களுக்கு அடர்த்தியான நீண்ட கேசமில்லையே என்று ஏங்குவோர் பலர். ஆனால் அதேவேளை தலை கொள்ளாது அளவுக்கு மீறி வளர்ந்து விகாரமான தோற்றத்தையும் சிலருடைய சிகை தருகிறது. இவற்றில் தேவைக்கு மீறிய சுருள்களும் சேர்ந்துவிட்டால்...!

அதிக சுருள்களுடன் அளவுக்கு மீறிய அடர்த்தியான தலை முடியுள்ள பெண்களுக்கு சிறப்பான புதிய வகையிலானதோர் அலங்கார முறையினை, கனடா-'ரொறன்ரோ டொமீனியன் சென்டர்' என்ற சிகை அலங்கார நிலையத்தின் உரிமையாளர் ஜோனாதன் ரோர்ச் அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

இதில் தேவையற்று வளர்ந்திருக்கும் முடிகளை அகற்றி 'சுரங்க மோஸ்தர்' அலங்காரத்தைச் செய்துவிடுகிறார். இது அடர்த்தியான-அதிக சுருள்களைக் கொண்ட தலைமுடியுடைய பெண்களுக்கு சிறந்த வரப்பிரசாதமாகும் என்று பலரும் விமர்சித்துள்ளார்கள்.



"அடர்ந்த-சுருண்ட கேசங்களை அடக்கி மடியவைக்க முடியை சீவினாலும் அவை அடங்கவும் மாட்டா-மடங்கவும் போவதில்லை. மென்மேலும் அடர்த்தியும் சுருள்களும் தொடர்ந்து மிக வேகமாக அதிகரிக்க ஆரம்பித்து விடும். ஆகவே முடியின் அடர்த்தியைக் குறைக்க வேண்டும். முடி வரிசைகளைப் பல கூறுகளாகப் பகுத்துப் பிரித்து, இடையிடையே வெட்டிக் குறைக்க வேண்டும்.

"இவ்வாறு செய்யும்போது மிகவும் அவதானம் தேவை. தாறுமாறாக முடியை வெட்டிக்குறைத்தால் அழகுக்குப் பதிலாக அவலட்சணமே மிஞ்சும். ஆகவே ஆரம்பத்திலேயே முடி வரிசை பிரிக்கும்போதே கூடிய கவனம் செலுத்தி வெட்டிக்குறைக்க வேண்டியவற்றை மட்டுமே வெட்டி நீக்க வேண்டும்.

"சுரங்கம் அமைப்பது போன்று இந்த முடிவெட்டு இருப்பதனால் இதனை 'ரணல் கட்டிங்' (சுரங்க வெட்டு) என்று கூறுகிறோம். இத்தகைய சிகை அலங்காரம் அதிகமான நேரத்தையும் கவனத்தையும் எடுப்பதனால் இதற்கான கூலியும் சற்று அதிகம்தான். ஒரு தடவை அலங்காரத்துக்கு 25 முதல் 60 டொலர்வரை கூலி வாங்குகிறோம்," என்கிறார் ரோர்ச்.

அடர்த்தியான கூந்தலைப் பராமரிக்கும் முறை தொடர்பாக சில ஆலோசனைகளை ரோர்ச் வழங்கியுள்ளார்.

- அடர்த்தியும் சுருளும் நிரம்பிய கேசத்தை மிகவும் மென்மையாகக் கையாள வேண்டும். அதிகமாக அழுத்திக் கழுவினாலும் அதன் வளர்ச்சி அதிகமாகுமே தவிரக் குறையப் போவதில்லை.
- கழுவும்போது நீர் சேர்ந்த அரைத் திண்மக் கரைசல்களையே பாவித்தல் வேண்டும். பாலேடும் இதற்கு உகந்தது.
- கழுவியபின்னர் இயற்கையாக உலர விடுவதே நல்லது. மின் சக்தியால் இயங்கும் சூடான காற்றைப் பீய்ச்சும் கருவிகளைத் தவிர்ப்பது நல்லது.
- தலைவாரி அழகு படுத்துவதை முடி நன்றாக உலரும் வரை காத்திருந்து ஆரம்பிக்க வேண்டும். சிக்கெடுக்கும்போதும் அதிக வலுவின்றி மென்மையாகவே வாருதல் வேண்டும்.

---

# அழகுக் கலை

ருக்கா-நாதன்

## லேடீஸ் ஸ்பெசல்

### பாதங்களைப் பராமரிக்க



ஒரு பெரிய பக்கெட்டில் கை பொறுக்கும் சூட்டில் கொஞ்சம் கிளிசரின் விட்டு அரை ஸ்பூன் உப்பு போட்டு நன்றாக கழுவவும். பாதங்களை 15 நிமிடம் அதனுள் ஊற வைக்கவும். பின் வெளியே எடுத்து துடைத்து நக பொலிஷ் பூசவும். மருதாணி பூசுவதானால் நக பொலிஷ் தேவை இல்லை. மருதாணி வேண்டிய டிசைன்களில் போடலாம்.

மருதாணி இலைகளை எடுத்து எலுமிச்சை ள சாறு விட்டு அரைத்து அதை பித்த வெடிப்பு உள்ள இடங்களில் பூசினால் குணமாகும்.



### மிருதுவாக கைகள் இருக்க

பழைய நகப்பூச்சுகளை அகற்றவும் நகங்ளை சீராக வெட்டவும். ஒரு பாத்திரத்தில் வெந்நீரில் எலுமிச்சை சாறை கலந்து கைகளை 10 நிமிடம் வைக்கவும். பிறகு கைகளை வெளியே எடுத்து அதிகமாக இருக்கும் நகங்களை மிக ஜாக்கிரதையாக வெட்டவும்.

பிறகு கோல்டு கிரீம் எடுத்து கைகளையும், விரல்களையும் மசாஜ் செய்யவும். பின் மீண்டும் கைகளைக் கழுவிய பின் நக்பொல்லிஷை (Quetex) ஒழுங்கான முறையில் பூசவும்.



### வரண்ட சருமத்திற்கு!

தேன் ஒரு ஸ்பூன், மூன்று அல்லது நாலு துளிகள் எலுமிச்சைச் சாறு இத்துடன் முட்டை மஞ்சள் கரு எல்லாவற்றையும் கலந்து முகத்தில் தடவவும். தினமும் கிளன்சில் கிரீம் பாவித்து முகத்தை கழுவி பின் மொயிஸ்சரைஸ்சிங் (Moisturizing) கிரீம் தினமும் பாவிக்கவும்.

### அழகான கூந்தலுக்கு

வாரம் ஒருமுறை மருதாணி, முட்டை, தயிர் உலர்ந்த நெல்லிக்காய் இவற்றை ஊற வைத்து அரைத்து தலையில் தேய்த்து அரைமணி நேரம் ஊறவைத்து பிறகு சீயாக்காய் போட்டு கழுவவும். தேங்காய் துருவி அரைத்து பாலெடுத்து தலையில் தேய்த்து 2 மணி நேரம் ஊறியபின் அலசிவிடவும். முடி கொட்டுவது உடனே தடுக்கப்படும்.

---

# சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது-சுகந்தினி

## சிலோன் புரோட்டா
### (வீச்சு ரொட்டி)

**தேவையான பொருட்கள்:**

மைதா மாவு- 1/2 கிலோ
முட்டை -1
உப்பு-1 தேக்கரண்டி
சீனி -2 தேக்கரண்டி
எண்ணெய் 2- மேசைக்கரண்டி

**செய்முறை:**

1. மாவை ஒரு தட்டில் போட்டு, நடுவில் பள்ளம் செய்து, முட்டை, சீனி, உப்பு எண்ணெய் சேர்க்கவும்.
2. தண்ணீர் சேர்த்துச் சற்றுத் தளர்த்தியாக மாவு பிசையவும்.
3. மாவின்மேல் இரண்டு மேசைக்கரண்டி எண்ணெய் தடவி ஈரத்துணியால் மூடி வைக்கவும். இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஊறவைக்கவும்.
4. மாவை ஒரே அளவு உருண்டைகளாகச் செய்யவும். மிக மெல்லிய அப்பளம் போல் இழுத்து எண்ணை தடவிய கல்லில் வீசி வீசி எடுக்கவும்.
5. புடவை மடிப்புப்போல் மடித்துக் கொள்ளவும். வட்டமாகச் சுருட்டிக் கொள்ளவும்.
6. மறுபடியும் சப்பாத்திபோல் இட்டுக் கொள்ளவும். அப்பளக் குழவியை நன்றாக அழுத்தக்கூடாது. அழுத்தினால் மடிப்புக் கலைந்துவிடும். புரோட்டாவின் 'லேயர்' (Layer) அமைப்பு பாதித்து விடும்.
7. தோசைக் கல்லில்போட்டு நெய்விட்டு இரண்டு பக்கமும் சுட்டு எடுக்கவும்.

தோதான கறியோடு இப்போது பரிமாற சுவையோ சுவை.

---

# கைவேலைப் பகுதி-செய்து பாருங்கள்

எஸ்-எஸ்


## (அலரிப்பூ)

தங்க நிறக் கம்பி 1 டசின்
ஸ்ரொக்கிநெற் வெள்ளைநிறம்
மகரந்தம்
ஸ்ரொக்கிநெற் பச்சை
கட்டுக்கம்பி
கம்ரேப்(ஒட்டுவதற்கு)

**செய்முறை:**

பெரிய பூ- 7 அங்குல அளவில் 5 துண்டுகள்
அடுத்த பெரியபூ- 6 அங்குல அளவில் 5 துண்டுகள்
சிறிய பூ- 5 அங்குல அளவில் 5 துண்டுகள்
மொட்டு- 4 அங்குல அளவில் 3 துண்டுகள்
இலை- 7 அங்குல அளவில் 2 துண்டுகள்

மேலே காட்டப்பட்டுள்ள அளவிலான தங்க நிறக் கம்பிகளை வெட்டிக்கொண்டு ஒவ்வொரு கம்பித் துண்டுகளினதும் இரண்டு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கவும். முறுக்கிய கம்பியை (படம் 1)ல் காட்டியவாறு அமைப்பினை விரல்களினால் அமைத்துக்கொள்ளவும். அவ்வமைப்பின் மேற்பகுதியால் வெள்ளைநிற ஸ்ரொக்கிநெற்றை போட்டு கீழ் பக்கமாக எடுத்து முறுக்கப்பட்ட கம்பிப் பகுதியோடு சேர்த்து இறுக்கி நூலினால் கட்டவும். எஞ்சிய பகுதியை வெட்டி எடுத்து மற்றைய இதழ்களுக்குமான கம்பிக்கு அவ்வாறு செய்யவும்.(படம் 2ல்) காட்டப்பட்ட வடிவில் இலையினை அமைத்து முன் பகுதியை சிறிது கூர்மையாக்கி பச்சைநிற ஸ்ரொக்கிநெற்றினால் இதழைக் கட்டியது போன்று செய்து கொள்ளவும். இதே போன்று மற்றைய இலையையும் செய்யவும். மகரந்தம் 2 துண்டை கட்டுக்கம்பியில் கட்டவும். கட்டிய மகரந்தத்தின் அருகோடு சேர்த்து ஒரு இதழை வைத்து நூலினால் கட்டவும். அதே போன்று அடுத்த 4 இதழ்களையும் அருகருகே வைத்து கட்டியபின்பு நூல்கள் தெரியாமல் கம்ரேப்பினால் அழகாக சுற்றவும். அதன் பின்னர் இதழ் ஒவ்வொன்றையும் விரல்களினால் இலேசாக வளைக்கவும். அவ்வாறு அடுத்து இரு பூக்களையும் செய்யவும்.




மொட்டு: மொட்டுக்கென குறிப்பிட்ட 4 அங்குல அளவில் 3 கம்பிகளை எடுத்து நுனிகளை முறுக்கி ஸ்ரொக்கிநெற்றை கட்டவும். பூ கட்டிய மாதிரி கட்டவும். கட்டியதும் கம்ரேப்பை சுற்றியபின்னர் இதழில் ஒன்றை உள்நோக்கியும் அடுத்த இதழை லேசாக வெளி நோக்கியும் அடுத்த இதழை இன்னும் கொஞ்சம் கூடுதலாக வளைக்கவும் மொட்டு அமைப்பாகிவிட்டதுதானே?

கொப்பாக கட்டும் முறை: கட்டுக் கம்பியை எடுத்து முதலில் மொட்டை வைத்து கட்டி, கம்ரேப்பால் சுற்றவும். சுற்றி கம்ரேப்பை இடையில் விட்டு சிறிய பூவையும் ஒரு இலையையும் வைத்து மீண்டும் இடையில் விடப்பட்ட கம்ரேப்பினால் சுற்றி அடுத்த இரண்டு பூக்களையும் இலையையும் வைத்து மீண்டும் கம்ரேப்பினால் சுற்றவும். இப்போ அலரிப்பூக்கொத்து உங்கள் கையில் அமைந்துவிட்டது.

---




## சிந்திக்கலாம் இங்கே...

அறையின் சன்னலை திறந்து வைத்தால்தான் உள்ளே இருக்கும் புழுக்கம் குறைகிறது.

பூட்டிப் பூட்டி வைத்திருந்தால் புழுக்கமும் அதிகமாகும். உடலுக்கு வருத்தமும் வந்து சேரும்.

சுவாசம் சுத்தமாக இருக்க வேண்டுமானால் உள்ளே இருக்கும் காற்று வெளியே செல்ல வேண்டும். வெளியே இருந்து புதிய காற்று உள்ளே வரவேண்டும்.

உன் மனம் இருக்கிறதே! அதுவும் அப்படித்தான். அதற்கும் ஒரு சன்னல் இருக்கிறது.

அந்த சன்னல் திறந்திருந்தால் மனப்புழுக்கம் இருக்காது.

இருந்தாலும்கூட மனதை திணற வைக்குமளவுக்கு இருக்காது.

மனச் சன்னல் திறந்திருந்தால் வெளியே இருந்து பல்வேறு வெளிச்சம் உள்ளே வரும்.

நட்பு ஒரு வெளிச்சம். காதல் இன்னொரு வெளிச்சம். குடும்ப உறவுகளின் நேசமும் வெளிச்சம்தான். இன்னும்-இன்னும் வெளிச்சங்கள் உண்டு.

சன்னல் எந்தளவுக்கு விரிந்து விசாலமாகிறதோ அந்தளவுக்கு உள்ளே வரும் வெளிச்சமும் விரிந்ததாக இருக்கும்.

வெளியே இருந்து வரும் வெளிச்சத்தில் ஏதாவது ஒரு வெளிச்சம் மீது உனக்கு விருப்பம் அதிகமாக இருக்கும்.

தினமும் அந்த வெளிச்சம் வராதா என்று மனதில் ஒரு தவிப்பும் இருக்கும்.

இரவுக் குளிரில் போர்வைக்குள் சுருண்டு கிடப்போம்.

அதிகாலையில் சன்னல் வழியாக வந்து உடலைத் தொடும் இளவெயிலின் வெளிச்சம் தருகின்ற சுகம் இருக்கிறதே. அது ஒரு தனிச் சுகம்.

விழிக்கமாட்டேன் என்று அடம்பிடித்தாலும் சூட்டால் கிள்ளி, விழிக்க வைத்துவிடும்.

அந்த அதிகாலை வெய்யிலின் வெளிச்ச விசேஷத்திற்கு உள்ள மரியாதை தொடர்ந்து எரியும் வெய்யிலுக்கு இருக்காது.

அப்படித்தான் மனமும். சில உறவுகளுக்கு தனியான முக்கியத்துவம் கொடுத்துவிடுகிறது.

அது காதலாகவும் இருக்கலாம். கனிந்த நட்பாகவும் இருக்கலாம்.

அந்த உறவின் வெளிச்சத்திற்காக மனச் சன்னல் திறந்து காத்திருக்கிறது.

எதிர்பார்ப்பு நிறைவேறாதபோது, அல்லது இடையிலே அந்த உறவு வெளிச்சம் திசைமாறும்போது சகல வெளிச்சம்மீதும் உனக்கு வெறுப்பு வந்துவிடுகிறது.

உடனே மனச் சன்னலை அறைந்து மூடிவிடுகிறாய். ஒரு மூலையிலே போய் அமர்ந்து கொள்ளுகிறாய்.

இதைத்தான் தனிமை என்று சொல்லுகிறார்கள்.

வாழ்க்கையில் கொடுமை தனிமை. தனிமையிலும் கொடுமை தனித்திருந்து புலம்புதல்.

நான்கு புறமும் வெளிச்சமும், காற்றுமில்லாமல் அடைபட்டுக்கிடக்கும் அறையில் இருப்பதும் ஒன்றுதான்,

யாரும் ஆறுதலோ தேறுதலோ சொல்லமுடியாத நிலையில் தனித்திருப்பதும் ஒன்றுதான்.

தோளின் சுமையை இறக்கிவைக்க சுமைதாங்கி வேண்டும்.

சுமைதாங்கி இல்லாது போனால் எவராவது ஒருவர் கைகொடுத்து உதவ வேண்டும்.

இரண்டுமே இல்லாமல் தனித்து சுமை இறக்கிவைக்க நீ முயன்றால் சமயத்தில் கழுத்து நரம்புகூட முறிந்து போகும்.

அப்படித்தான் மனப் பாரமும். பரிமாறிக் கொள்ள ஒரு து | ை ண கிடைக்காவிட்டால் வினைதான்.

எத்தனை பெரிய சோகமானாலும் இன்னொருவரிடம் சொல்லி முடிக்கும்போது அந்தச் சோகத்தில் பாதி குறைந்துவிட்டது போலத் தெரியும்.

மனதை அழுத்திய பாரம் ஒன்று காணாமல் போனது, போல ஒரு லேசான தன்மையும் தெரியும்.

எனவே-சன்னலை மூடாதே. எதிர்பார்த்த வெளிச்சம் கிடைக்காமல் போகலாம். அதற்காக இருட்டில் முடங்கி உன் முகவிலாசத்தை தொலைத்துவிடாதே.

இன்னமும் வெளியே வெளிச்சம் உண்டு. நம்பு. சன்னல் திறந்து பார்.

அந்த வெளிச்சத்தால் இருள் அலசி, அழுக்குகள் கழுவி, தூசுகள் துடைத்து சுறுசுறுப்பாய் மாறு.

இழந்ததை எண்ணி வருந்தி, முடிந்ததைச் செய்ய முனையாமல் ஒதுங்கியபடி இருந்தால் விரக்தி உன்னை வேரறுத்து விடும்.

யாரிடம் உன் சோகத்தை பகிர்ந்து கொள்ளலாம்?

உன் நெருங்கிய உறவுகளில் மிக நம்பகமானவர்களை பட்டியலிட்டுக்கொள்.

சிலர் இருக்கிறார்கள்- நீ சோகம் சொன்னால் சுவையான கதை கேட்பது போல சூள் கொட்டுவார்கள்.

நீ எழுந்து வந்த பின் "இதுக்குப் போய் அழுகிறானே...... சுத்தப் பைத்தியக்காரன்" என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

சோதனையைக் கண்டு அழுவதுதான் கோழைத்தனம்.

சோகத்தில் அழுவது மனித குணம். அழுதால் மனப் பாரத்தில் பாதி குறையும் என்றால் அழலாம். அதில் தப்பேயில்லை.

ஆனால், உன் கண்ணீரை கேலி செய்பவன் முன் அழாதே. அது தவறு.

யாருடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று பட்டியலிட்டு தெரிந்து தேர்வு செய்து சோகம் பகிர்ந்துகொள்.

தனிமை ஓடிவிடும். இனிமை எட்டிப் பார்க்கும். மனச் சன்னல் திறந்திருந்தால் தனிமை என்னும் இன்னல் உன்னை நெருங்காது.

எங்கே, இனி முயன்று பார்!

---


பரிசுத் திட்ட கூப்பன் இல-19

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

# 6வது மாடியில் இருந்து பாய்ச்சல்



சான்பினிற் குதிப்பதற்கு முன் 6வது தளத்திலிருந்து ஒரு நோட்டம்

## 5வது மாடியில் இருந்து அலறல்

வயது 29தான். வாழ்க்கையில் அரை செஞ்சரிகூட போடவில்லை.

அதற்குள் சாகும் ஆசை. அர்த்தமுள்ள ஆசையல்ல. ஆயுளை முடிக்கும் அபாய ஆசை.

அவன் பெயர் சான்பினிட். தாய்லாந்தின் தரைநகரான பாங்கொக்கில் ஒரு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தான்.

சான்பினிட்டுக்கு சகல கெட்ட பழக்கங்களும் அத்துப்படி.

மது-மாது-போதை மருந்து என்று மூன்றிலும் தனி ஈடுபாடு. இரவினில் ஆட்டம். பகலினில் தூக்கம். சுகம் தரும் சொர்க்க லோகம்.

ஒரு நாள் ஆட்டத்தின் விளைவு நோயாக மாறித் தாக்க மருத்துவமனைக் கட்டில் வரவேற்றது.

ஆடி அடங்கிக் கிடந்தவன் யோசித்தான். 'இனி அனுபவிக்க என்னதான் பாக்கி இருக்கிறது?'

பதிலாக சலிப்பே மிஞ்சியது. கட்டிலை விட்டு எழுந்து விடுவிடுவென்று நடந்து மருத்துவமனையின் ஆறாவது மாடியின் மேல் தளத்திற்கு சென்றான். கையில் இருந்த பேப்பர்களை கிழித்து காற்றில் பறக்கவிட்டான்.

அடுத்ததாக ஒரு காரியம் செய்தான்! என்ன காரியம்?

பெரிய விசயம் ஒன்றும் இல்லை.

அப்படியே ஆறாவது மாடியில் இருந்து ஒரே குதி! டமார்! ஒரு நொடிதான். உயிர் காலி!!

மருத்துவமனைக்கு வந்த புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் காகிதங்கள் காற்றில் பறந்து வருவதைப் பார்த்து, விபரீதம் ஏதோ நடக்கப் போவதாக உள்ளுணர்வு தூண்ட எடுத்த 'கிளிக்' 'கிளிக்'தான் படங்களாக நீங்கள் காண்பவை.

5வது மாடியின் தளத்தின் ஜன்னல் வழியாக அவனைப் பார்த்துக் கொண்டிருக்கிறாரே ஒருவர். அவருக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. அவன் கீழே விழுந்த பின்னர்தான் விபரீதம் உணர்ந்து அலறினாராம் ஒரு அலறல்! மருத்துவமனையே ஆடிப்போனதாம்.

இது ஒரு சுவாரசிய விளம்பரம்

## கலைமணம் கொண்ட பெண்ணுக்கு நிறை பணம் கொண்ட மணமகன் தேவை




கனடா நாட்டில் வான்கூவர் நகரின் பிரதான தெரு ஒன்றில் ஒரு விசித்திரமான விளம்பரம்: "கவின் கலைப் பட்டதாரிப் பெண்ணுக்கு பணம் படைத்த மணவாளன் தேவை" என்று தனது கவர்ச்சிப் படத்தையும் வரைந்து வைத்துள்ளார் எரிக்கா ரி.லவ் என்ற 33 வயதுப் பெண்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் வைக்கப்பட்டுள்ள- தானாகவே சுழன்று மாறும் 'எஸ்லோன் குழாய்' விளம்பரத்தைப் போன்று இதுவும் ஒரு சுழலும் விளம்பரம். இதற்கு மாதம் 2,000 டொலர் வாடகை தருகிறார் இந்தக் கலைஞர்.

விளம்பரத்தைக் கண்ணுற்ற பலர் விண்ணப்பம் அனுப்புகின்றனர். இருப்பினும் தான் எதிர்பார்க்கும் தகைமைகள் எதுவும் அவர்களிடம் காணப்படவில்லை என்று கூறும் எரிக்கா, தன் இலட்சியக் கணவர் எப்படியும் கிடைப்பார் என்றே பெரிதும் எதிர்பார்க்கிறார்.

"ஓவியக் கலைஞர்களுக்கு இன்று போதுமான மதிப்பும் கிடையாது. அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியமும் கிடைப்பதில்லை. எனவேதான் என்போன்ற வறிய கலைஞர்களை வைத்து பராமரிக்க பணம் படைத்த கணவனால்தான் முடியும்" என்கிறார் எரிக்கா.

# தகவல் பெட்டி

## பசுக்களின் சபையில் கச்சேரி!

## "இசை கேட்டால் அதிக பால் சுரக்கும்"

ஆச்சரியமாகத்தான் இருக்கிறது

ஆனாலும் அங்கே நடக்கிறது



'டூயட்' படத்தில் பிரபு வாசிக்கும் அல்லது வாசிப்பதுபோல நடிக்கும் சக்சஃபோன் இசைக்கு மேல் நாடுகளில் நல்ல மரியாதை.

இங்கே படத்தில் சக்சஃபோன் கருவியோடு இருப்பவர் ஜெர்மனைச் சேர்ந்த ஃபிரான்ஸ் புரவுண்.

இவருக்கு சக்சஃபோன் வாசிப்பதில் பிரமாதமான ஆற்றல் இருக்கிறது.

ஜெர்மன் நாட்டில் சக்சஃபோன் கலைக்கு வரவேற்பு குறைவென்பதால் அமெரிக்கா போய் குடியேறினார். அங்கு வரவேற்பு இருந்தது. ஆனால் வருவாய் இல்லை.

வெறுத்துப்போன புரவுண் ஒரு முடிவுக்கு வந்தார்.

சக்சஃபோனைத் தூக்கிக்கொண்டு மனிதர் நேரே போனார் ஒரு பசுப் பண்ணைக்கு.

வாசிக்கத் தொடங்கினார். பசுக்களுக்கு கொண்டாட்டம். வாயில்லா ஜீவன்களுக்கு சந்தோசம் கொடுத்த திருப்தியோடு திரும்பி வந்தார்.

ஒரு வாரம் பசுக்களின் சபையில் மனிதர் சளைக்காமல் சக்சஃபோன் வாசித்துக் கொண்டிருந்தார்.

இடையிலே சில நாட்கள் புரவுண் பண்ணைப் பக்கமே போகவில்லை. பசுக்கள் தேடியதோ இல்லையோ பசுப்பண்ணை உரிமையாளர் வீடு தேடி வந்துவிட்டார்.

வந்தவர் வெறுங்கையுடன் வரவில்லை. ஒரு பெரிய தொகைக்கான காசோலையையும் கொண்டுவந்து நீட்டினார்.

"இது எதற்கு?" புரவுண் கேட்டார். அதற்கு பண்ணை உரிமையாளர் சொன்ன பதில் உலக அதிசயம்.

சக்சஃபோன் இசைக் கருவியால் புரவுண் பசுக்கள் முன்பாக எப்போது வாசிக்கத் தொடங்கினாரோ அன்று முதல்-


அந்தப் பசுக்கள் வழக்கத்திற்கு மாறாக அதிக பாலைக் கரக்கின்றனவாம்.

புரவுணுக்கு தன் கதையை நம்பமுடியவில்லை.

ஆனால் செய்தி பக்கத்துப் பண்ணைகளுக்கும் பரவிவிட புரவுணை ஆளாளுக்கு புடித்திழுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இசை கேட்டால் பசுக்களுக்கும் குசி வருமா என்று ஆராயவேண்டும். ஆனால் வழக்கத்திற்கு மாறாக அதிகபால் சுரப்பது மட்டும் உண்மை என்கிறார்கள் பண்ணை உரிமையாளர்கள். இதே நேரம் இன்னொரு வேடிக்கை, கோழிப்பண்ணை உரிமையாளர்களும் புரவுணை கச்சேரிக்கு அழைக்க அவரது பாடு தர்மசங்கடமாகி விட்டதாம். எப்படியோ புரவுணின் பிழைப்பு படு ஜோராக நடக்கிறது.

## இப்படியும் பாசம்



சொந்த இல்லத்தை விற்றுவிட்டு பன்றிகளைப் பராமரிப்பதற்கு இவருக்கு ரொம்பவும் தான் தாராள மனசு!

டேல் றிஃபிள் மற்றும் ஜிம் புறாவர் ஆகிய இருவரும் நண்பர்கள். இவர்களுக்கு விசித்திரமான ஒரு ஆசை. கட்டாக் காலியாகத் திரியும் பன்றிகளை ஒன்று சேர்த்து ஒரு பன்றிப் பண்ணை வைக்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

பண்ணை அமைப்பதற்கு இவர்களுக்குப் பணம் தேவைப்பட்டது. சீஸ்பீக் குடாவில் கடற்கரையினை ஒட்டி அழகிய வீடு ஒன்று இவர்கள் உடமையாகவிருந்தது. தயங்காமல் அந்த வீட்டை விற்று பணம் புரட்டினார்கள். பன்றிப் பண்ணையை ஆரம்பித்தனர்.

இந்தப் பண்ணையில் இப்போது 57 பன்றிகள் சேர்ந்து விட்டன. இவற்றால் செலவே தவிர வருமானம் எதுவுமில்லை.

தங்கள் வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்பட்ட பன்றிகள் வீட்டாருக்குத் தொல்லை கொடுத்தால், அவற்றை இந்தப் பண்ணையில் கொண்டுவந்து விட்டு விடுகின்றனர்.

இவற்றை இறைச்சிக்காக இவர்கள் விற்பதில்லை. இவர்கள் இருவரும் தங்களுக்கு வருமானம் தரும் தொழில்களில் சம்பாதிக்கின்றனர். வருவாயில் பெரும் பகுதியை அனாதைப் பன்றிகளின் பராமரிப்புக்காகச் செலவு செய்கின்றனர்.

இருந்த அழகான வீட்டையும் விற்று பன்றிகளைப் பராமரிக்க முற்பட்ட இவர்களை ஆரம்பத்தில் எல்லோரும் பைத்தியகாரர்கள் என்றே கணித்தனர். ஆனால் இன்று இவர்களின் பணிக்கு ஒரு தனிமரியாதை கிடைத்துள்ளது.



## ரூபினியின் சோகம்!

'தாமரை' படத்தில் இசையமைப்பாளர் தேவா எழுதி இசையமைத்துள்ள பாடல் "முக்கா முக்கா மரக்கா, தெம்மாதெம்மா பிஞ்சு சரக்கா." (அப்பா என்னே கவித்துவம்?) படத்தில் இந்தப் பாடலுக்கு படு கவர்ச்சியாக நடனமாடியுள்ளார் ரூபினி. பாடலில் ஒரு வரிக்கு ஏற்ப நடன அசைவு சற்று ஆபாசமாக இருக்க, நடிக்க மறுத்து அழுதுவிட்டார் ரூபினி. பின்னர் படப்பிடிப்பு குழுவினர் ஒருவிதமாக சொல்லி நடிக்கவைத்தனர்.

## சொந்தக் குரலில் முயற்சி!

'நாடோடித் தென்றல்' முதல் சரத்குமார் நடித்த 'பேண்டு மாஸ்டர்' வரை இரவல் குரலில் நடித்தவர் ரஞ்சிதா. 'அமைதிப்படை' படத்தில் சொந்தக் குரலில் பேசி நடித்தார். ஆனால் 'அதர்மம்', 'ஜெய்ஹிந்த்' போன்ற படங்களில் இரவல் குரல்தான். சீதா என்னும் டப்பிங் கலைஞர் குரல் கொடுத்து வருகிறார்.

இப்போது 'தோழர் பாண்டியன்' படத்தில் சொந்தக் குரலில் பேச ரஞ்சிதா முயற்சி பண்ணுகிறார்.

## படம் வரும் பின்னே! பரிசு வந்தது முன்னே!

மு.மேத்தாவின் 'தென்றல் வரும் தெரு' படம் இன்னமும் திரைக்கு வராமல் இழுபடுகிறது. கவிதைப் புத்தகம் அடித்து தன் படமும் போட்டு ஓஹோவென்று விளம்பரம் வாங்கிய மேத்தா படம் எடுக்கப் போய் கையைச் சுட்டுக் கொண்டார்.

ஆனால் 'தென்றல் வரும் தெரு' படத்தில் வரும் ஒரு பாடலைப் பாடிய கல்லூரி மாணவர்களுக்கு இளையராஜா குத்துவிளக்குகளை வாங்கிப் பரிசளித்திருக்கிறார். அவர்கள் பாடியது திருப்தியாக இருந்ததாம்.

ராதாரவி-பபிதா
படம்-முக்கிய பிரமுகர்

## அனுஷா போட்ட போடு!

'தங்கராசு' படத்தில் முரளியின் ஜோடியாக அறிமுகமானவர் அனுஷா. இவரது சகோதரியும் ஒரு நடிகை. பெயர் ராகசுதா. (முகம் அநேகமாக மறந்திருக்கும்.) அனுஷா 'தோழர் பாண்டியன்' படத்தில் சத்யராஜின் தங்கையாக நடித்துவருகிறார்.

அனுஷாவை பலரும் கேள்விகளால் துளைத்தெடுக்கிறார்களாம். கதாநாயகியாக நடிக்க நீ தங்கையாக நடிக்கலாமா என்கிறார்களாம். "இவர்களுக்கெல்லாம் என்னால் பதில்சொல்ல முடியாது" என்று சொல்லிக்கொண்டு அலைந்து துள்ளிக்கொண்டு அனுஷா சொன்னது "அடுத்த படத்தில் சத்யராஜின் கதாநாயகி நான்தான், அதுதான் அந்தப் படத்தில் அவரது தங்கையாக நடிக்க ஒப்புக்கொண்டேன்." நடக்குமா? பார்க்கலாம்.

## ...மினிசினி...

- ★ தமிழில் பிரபுவுக்கு ஜோடியாக 'ஜல்லிக்கட்டுக் காளை' படத்தில் நடித்துவரும் கனகா, மலையாளத்தில் மோகன்லால் சொந்தமாகத் தயாரிக்கும் 'பிடன்காழி' என்ற படத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.
- ★ ராதாரவி தயாரித்து, முக்கிய வேடத்தில் நடித்து வரும் 'இளைஞர் அணி' என்ற படத்தில் ரசிகா என்னும் புதுமுகத்தை கதாநாயகியாக அறிமுகப்படுத்தி உள்ளார்.
- ★ அண்மையில் இலங்கை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட 'முள்ளும் மலரும்' படத்தை இயக்கியவர் மகேந்திரன். இவர் தற்போது ஒரு நாவலை வாங்கி திரைக்கதை அமைத்து வருகிறார்.
- ★ இந்தியில் மணிரத்தினத்தின் 'ரோஜா' மொழி மாற்றப்பட்டு வசூல் சாதனை புரிந்துள்ளதை அடுத்து இப்படத்தில் கதாநாயகியாக நடித்த மதுபாலா மூன்று இந்திப்படங்களில் நடித்து வருகிறார்.
- ★ தற்போது மீனாக இயக்கும் 'சாது' படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார் அர்ஜுன். இப்படம் முடிவடைந்ததும் தெலுங்கில் தயாராகும் 'அரண்மனைக் கிளி' படத்தில் நடிக்கவுள்ளார்.
- ★ 'அடுத்த கட்டம்' என்ற படத்தின் மூலம் யுவராணியின் சகோதரர் ரத்னகுமார் சினிமாவில் அறிமுகமாகிறார். இப்படத்தில் கதாநாயகியாக நடிக்கும் யுவராணிக்கு சகோதரராகவே படத்திலும் நடிக்கிறார்.
- ★ குறுகிய காலத்தில், குறைந்த செலவில் எடுக்கப்பட்டு வெற்றி பெற்ற 'மகளிர் மட்டும்' படத்தைப் போன்று ஒரு படமொன்றைத் தயாரிக்கிறார் கமல்ஹாசன். பாலுமகேந்திரா இயக்கும் இப்படத்தில் கமல் நடிக்கவில்லை.
- ★ 'புதுப்பட்டி பொன்னுத்தாயி' படத்தில் வித்தியாசமான நாதஸ்வரக் கலைஞராக நடித்துவரும் நெப்போலியன், எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.
- ★ சுரேஷ் மேனனின் 'புதிய முகம்', 'பாசமலர்கள்' ஆகிய படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியவர் ஆர்.டி.சேகர். இவர் தற்போது சில்க் ஸ்மிதா கதாநாயகியாக நடிக்கும் 'பிளே கேர்ல்ஸ்' என்ற படத்தை இயக்கி வருகிறார்.
- ★ கடந்த ஆண்டின் சிறந்த நடிகர், சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற மம்முட்டி, ஷோபனா இருவரும் 'ஆர்ய நாயகா' என்ற மலையாளப் படத்தில் இணைந்து நடிக்கின்றனர்.

## கிசு-கிசு இதுவரை

சமீப காலத்தில் நடிகர் நடிகைகள் யார் யாருடன் இணைந்து கிசுகிசுக்கப்பட்டார்கள் என்றொரு சின்னப் பட்டியல். கார்த்திக்-ஸ்ரீப்ரியா, ராதிகா-விஜயகாந்த், சீதா-பாண்டியராஜன், பிரபு-குஷ்பு, ஐஸ்வர்யா-பார்த்திபன், ஆர்.கே.செல்வமணி-ரோஜா, கவுண்டமணி-ஷர்மிலி, கமல்ஹாசன்-சரண்யா, சத்யராஜ்-பானுப்ரியா, சத்யராஜ்-கஸ்தூரி, சத்யராஜ்-சுகன்யா, ரஜினி-கௌதமி, விஜயகாந்த்-சுகன்யா, கார்த்திக்-சிவரஞ்சனி, சரத்குமார்-ஹீரா, சரத்குமார்-வினிதா, விஜயகாந்த்-ஆம்னி, அர்ஜுன்-மதுபாலா, பாண்டியராஜன்-பிரியாராமன், கமல்-சுகன்யா, குஷ்பு-ஜெயராம், கார்த்திக்-சுகன்யா, மன்சூரலிகான்-அஹானா, மன்சூரலிகான்-சில்க்ஸ்மிதா. இன்னும் நீளும் இடம்தான் இல்லை.

### கிசு-கிசு நம்பர் I

## ராணி! யுவராணி!

செந்தூர பாண்டியில் விஜய் மீது புரண்டு உருண்டு பெயர் வாங்கியவர் யுவராணி. யுவராணிக்கு நடனம் கற்று இரசிகர்களை கதிகலங்க வைக்க ஆசை. நடனம் கற்கப் போனார். ஆனால் கற்றது நடனமல்ல. காதல். யுவராணியின் காதலர் பெயர் நாகேஷ் (குழம்ப வேண்டாம். நமது நகைச்சுவை மன்னன் அல்ல. இவர் வேறு நாகேஷ்) இருவரும் ஜாலியாக சுற்றித் திரிகிறார்கள்.

### கிசு-கிசு நம்பர் II

## நெப்போலியனை ஒருபிடி!

நெப்போலியன் தற்போது வளர்ந்து வருவதால் புதுமுக நடிகைகள் அவரை கைக்குள் போட போட்டா போட்டியாம். 'மணிரத்னம்' படப்பிடிப்பில் சுழன்றுவரும் 'வெல்வெட்' மெத்தையில் நெப்போலியன் படுத்திருப்பார். அவரை அணைத்தபடி ஒரு கிளு கிளு பாடல்.

"குழந்தைக்கு பசியெடுத்தால் அது கூப்பிட்டுக் குரல் கொடுக்கும்" கனவனை மடக்கும் விதமான பாடல் காட்சி. அந்த புதுமுக நடிகையோ நெப்போலியனை இறுக அணைத்த அணைப்பில் படப்பிடிப்பு குழுவினரே நெப்போலியனின் முதுகெலும்பு முறிந்துவிடுமோ என்றுபார்த்துவிட்டார்களாம். இயக்குநர் கட் சொன்ன பின்பும் நடிகை தாமதித்தே விலகினாராம். நெப்போலியன் புது மாப்பிள்ளை. மனைவி அறிந்தால் போச்!

### கிசு-கிசு நம்பர் III

## சங்கவியின் தாராளம்!

அமராவதி படத்தில் அறிமுகமானவர் சங்கவி. ஏனோ தெரியவில்லை அழகிருந்தும், ஆற்றல் இருந்தும் சினிமா உலகைக் கலக்க முடியவில்லை. இப்போது 'ரசிகன்' படத்தில் நடித்து வரும் சங்கவி தயாரிப்பாளர்கள் பலருக்கு தானே தொலைபேசி எடுத்து, எப்படி நடிக்கவும் தயார் 'ரசிகன்' படம் வந்தபின்னர் பாருங்கள் தெரியும்" என்று தொல்லைப் படுத்துகிறாராம்.

"சார் சங்கவி பேசுறேன்."

"என்ன சங்கவியா? (தலையில் அடித்துக்கொள்வார்) நான் இல்லை என்று சொல்லையா; போ!"

தயாரிப்பாளர்கள் இப்படித்தான் தப்பிக் கொள்கிறார்கள்.

## முகப்பில்

ரேவதி
படம்-என் ஆசை மச்சான்

முகம் முழுக்க சிரிப்போடு
விஜயகாந்த்

சுதேச உடையில்
சரத்குமார்
படம்-நம்ம அண்ணாச்சி



சி

னி

வி

சி

ட்



## வந்தாலும் வரலாம்

ஷில்பா சிரோத்கருக்கு தன் உடல்மீது உடும்புப்பிடியான நம்பிக்கை. இந்த சினிவிசிட்டில் அவர் படம் இருக்கிறது. அதைப் பார்த்து ஷில்பாவின் நம்பிக்கை நியாயம்தானா என்று நீங்களே ஒரு முடிவுக்கு வரலாம். என்ன பார்த்து விட்டீர்களா? அந்த ஷில்பா சிரோத்கரை இந்தியில் இருந்து தமிழுக்கு கொண்டுவந்து ஆடையைக் குறைத்து திரையில் ஓடவிட வேண்டும் என்று பிரபல தயாரிப்பாளர் ஒருவர் முயற்சி செய்கிறாராம். அவ்வாறின் முயற்சி பலித்தால் ஷில்பாவின் சிக்கன உடல் தமிழுக்கும் வந்துவிடும்.

## நடிகையின் துணிச்சல்

இந்தியில் நீலா குமார என்றொரு நடிகை இருக்கிறார். மேற்கிந்திய தீவு அணியின் முன்னாள் கேப்டனோடு கட்டிலைப் பகிர்ந்து கொண்டவர். இப்போது ஒரு கைவிலக்கிரெட்டோடும் மதுவோடும் 'அடுக்கு' என்றும் நண்பரோடு பூச்சிய நிகழ்ச்சியில் காணப்படுகிறார். ஆடும் வரை ஆட்டம்.



எத்தனை கிலோ வோட்ஸ்? தொடாதபோதும் அடிக்கிறதே ஷாக்!

வினீத்ரா



## துணுக் செய்திகள்

### வினிதாவுக்கு கைக்கெட்டியும்....

[illegible]



கஸ்தூரி-ஆனந்தபாபு
படம்-வாச்மேன் வடிவேலு

## காதைக் கொடுங்கள் இங்கே

### கௌதமிக்கு கல்யாணம்?

நடிகை கௌதமிக்கும் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசுக்கும் ஒரு இது. அதுதான் கா சங்கதி. காதலர் தன்னை கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லி கௌதமி நச்சரிக்கிறார். திருவுக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டதால மனைவி சம்மதம் வேண்டும். திருநாவுக்கரசுவும் படங்களில் நடித்துள்ளார். படங்கள் தயாரித்துமிருக்கிறார். கனெக்சன் அப்படித்தான் தொடங்கியது. முடிவு எப்படியோ?

### மக்களாட்சிக்கு என்னாச்சு!

மம்முட்டியை கதாநாயகனாக வைத்து செல்வமணி (ரோஜாவின்ராஜாவேதான்) இயக்கவிருந்த மக்களாட்சி விளம்பரத்தோடு ஓய்ந்துவிட்டது. கதை இதுவரை ரெடியாகவில்லை.

ஏற்கனவே 'குற்றப் பத்திரிகை' படம் எடுக்கப்பட்டு சென்சாரில் முடங்கிக்கிடக்கிறது. செல்வமணிக்கு செல்வ விரயகாலம் இது. (அதிரடிப்படையும் நஷ்டம்)

### சிக்கு புக்கு ஸ்ரீதேவி!

'ஜென்டில்மேன்' படம் இந்தியில் படுவேகமாக தயாராகிவருகிறது. சிரஞ்சீவி-ஜூஹி சாவ்லா ஜோடி நடிக்க மகேஷ்பட் இயக்குகிறார்.

அந்த படத்தில் வரும் 'சிக்கு புக்கு ரயில்' பாடலுக்கு தமிழில் ஆடிய கௌதமியை இந்தியிலும் கேட்டார்களாம். இந்தியில் மார்க்கெட் பிடிக்க அது தடையாகிவிடும் என்று கௌதமி 'நோ' சொல்லிவிட்டாராம்.

ஸ்ரீதேவியை அணுகியிருக்கிறார்கள். "அதற்கென்ன நடிக்கிறேன்" என்று சொன்னதாக தகவல்.

இந்தியில் இப்போது நம்பர் ஒன் யார்? ஜூஹி சாவ்லாதான். மாதுரிதீக்ஷித் 2வது இடத்தில் இருக்கிறார். ஸ்ரீதேவிதான் பாவம். 3வது இடம். இளமை குறைய இடமும் பின்தள்ளிப் போகும்.

## -ராஜ ராஜன்- முன்னாள் அமைச்சர்!


'பாலம்', 'புதிய காற்று', 'மூன்றாம்படி' ஆகிய படங்களை இயக்கியவர் கார்வண்ணன். தற்போது இவர் 'தொண்டன்' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

மாறுபட்ட இரசனை கொண்ட இந்த இளைஞர் இயக்கும் புதிய படம் 'ராஜராஜன்'. சினிமாக்கோலியில் பிரம்மாண்டமாக உருவாகும் இந்தப் படத்தை சன் ஆர்ட்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. முன்னாள் தமிழக அமைச்சர் திருநாவுக்கரசு இப்படத்தில் இரு மாறுபட்ட வேடங்கள் ஏற்று முதலமைச்சர் பாத்திரத்தில் நடிக்கிறார். கதாநாயகனாக ஆனந்தபாபு நடிக்க, அவருக்கு ஜோடியாக ரோகிணி நடிக்கிறார். வில்லத்தனமான பாத்திரம் ஏற்று ஆனந்தராஜ் நடிக்கிறார். இவர்களுடன் நாசர், கவுண்டமணி, ஜனகராஜ், செந்தில், வடிவேலு, ஆர். சுந்தர்ராஜன், மூர்த்தி, அனுஜா, வினீத்ரா, சி.ஆர்.சரஸ்வதி, சாந்திமதி, ஜானகி, மற்றும் புதுமுகங்கள் சாம்ராஜ், சூரியன், பாவலர் ஜெஜேராம் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

பாரதிசேகர் கதை வசனம் எழுத, ஒளிப்பதிவைத் திரைப்படக் கல்லூரி மாணவர் சுந்தர்ராஜன் கவனிக்கிறார். தேவா இசையமைக்கும் இப்படத்திற்கு திரைக்கதை எழுதி இயக்குகிறார் கார்வண்ணன்.

இப்படத்தைப்பற்றி கார்வண்ணனை கேட்டபோது 'இது ஒரு அரசியல் பின்னணிக் கதை. காட்சிக்குக் காட்சி ஆர்வத்தைத் தூண்டும் திருப்பங்கள் கொண்ட படம். இதற்கு முன்னர் நான் இயக்கிய படங்கள் எல்லாம் மீடியம் பட்ஜெட்டில் உருவாக்கப்பட்டவை. இந்தப்படம் நிறைய செலவு செய்து மிகப் பெரிய படமாக உருவாக்கப்படுகிறது. என் மற்றைய படங்களைப்போல இதுவும் ஒரு மாறுபட்ட படமாக இருக்கும்' என்றார்.





## நாளை நமதே

நாங்கள் என்றும் விரும்பும்
நல்ல கல்வி அறிவுதனை
நாடி நன்கு பயின்றிடுவோம்
நாளை இங்கு நமதாகும்.

உள்ளத்தில் நல்ல உள்ளம்
உயர்ந்திட இங்கு வழிகளுண்டு
ஊக்கம் எமது நெஞ்சிலுண்டு
உயர்வோம் உலகம் நமதாகும்.

ஏக்கம் ஏனோ கண்களில்
ஏழை என்றும் ஏழையல்ல
ஏழ்மை அகல வாழ்வினிலே
ஏணி இந்தக் கல்வியடி

அறியாமை இங்கு நாம் நீக்கி
அறிவுகள் தேடிப்பல சேர்த்து
ஆக்கங்கள் பல செய்திடுவோம்
அகிலம் இங்கு நமதாகும்.

சண்டைகள் இங்கே எதற்கென்போம்
சமரம் ஒன்றே நமக்கென்போம்
சர்ச்சைகள் அகலும் வழி காண்போம்
நாளை நமதே என நிமிர்வோம்.

செல்வராஜா நிமலினி–கற்குடா.

"ஒன்றென்று கொட்டு முரசே! - அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே! - இந்த
நானில் மாந்தருக்கெல்லாம்."

–சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை

# பேசும் ஆடு

ரங்கனிடம் ஒரு ஆடு இருந்தது. அதை அவன் பலமுறை விற்க முயன்றும், யாரும் வாங்க முன்வரவில்லை. காரணம், ஆட்டிற்கு அரைக்கொம்பு. ரங்கன் அதை எப்படியாவது விற்க வேண்டும் என நினைத்தான்.

திடீரென ஒருநாள் ஊர் மக்கள் எல்லாம் ரங்கன் வீட்டு ஆட்டைப்பற்றியே பேச ஆரம்பித்தார்கள்.

ரங்கன் வீட்டு ஆடு பேசுகிறதாமே? நாம் என்ன கேட்டாலும் நடக்கும், நடக்காது என்று சொல்கிறதாமே? என்று ஒரே பேச்சு. இதைக் கேட்ட மக்கள் சாரிசாரியாக ரங்கன் வீட்டு வாசலில் ஆட்டைப் பார்க்க கியூவில் நின்றார்கள்.

ரங்கன் ஆட்டுக்கு அழகான சட்டை தைத்துப்போட்டிருந்தான்.

"நம்ம ஊருக்கு மழை வருமா?" என்று ஒருவர் கேட்டார். 'ஓ' என்று மட்டும் பதில் வரும். இல்லை என்றால் 'ஊஹூம்' என்று தான் பதில் வரும். இந்த இரண்டு வார்த்தைகளை மட்டும்தான் ஆடு பேசும்," என்றான் ரங்கன்.

பத்திரிகையாளர்கள் வந்து ரங்கனையும் அவனது ஆட்டையும் படம் பிடித்துச் சென்றார்கள். சிலர் திருஷ்டி சுத்திப் போட்டார்கள்.

ஆடு 'மழை வரும்' என்பதற்கு அறிகுறியாக 'ஓ' என்றதும், அன்று மழை பெய்யத் தொடங்கியது. மேலும், அதன்மீது நம்பிக்கையை அதிகப்படுத்தியது. சிலர் அந்த ஆட்டை 'தெய்வீக ஆடு' என்றார்கள். போன ஜென்மத்தில் அந்த ஆடு ஒரு முனிவராக இருந்ததாகச் சிலர் பேசிக்கொண்டார்கள்.

ஆட்டைப்பார்க்க வருபவர்கள் அதன் அருகே உள்ள உண்டியலில் காசு போட்டுச் செல்வார்கள். உண்டியலில் நிறையக் காசு சேர்ந்தது. ஆட்டிற்கு விதம் விதமான உணவு வாங்கிக் கொடுத்தான் ரங்கன். புதுச் சட்டை தைத்துப்போட்டான். ஆனால், யாரையும் ஆட்டை தொட அனுமதிக்கவில்லை. தொட்டால் அது தன்னுடைய பேசும் சக்தியை இழந்து விடும் என ரங்கன் அனைவரையும் பயமுறுத்தி இருந்தான்.

அதனால் யாருமே அதனை நெருங்கவில்லை. யாராவது கேள்வி கேட்கும்போது ரங்கன் ஆட்டின் முதுகுப்பக்கம் தடவிக்கொடுப்பான். அப்போது ஆடு பேசும்.

இந்நிலையில் ஆட்டை வைத்து ரங்கன் நிறைய பணம் சம்பாதித்து விட்டான். அந்த ஊரில் பணக்காரரான ராஜாமணிக்கு அந்த ஆட்டை, தான் விலை கொடுத்து வாங்க வேண்டும் எனத் தோன்றியது. ரங்கனை அணுகி ஆட்டை விலை பேசினான்.

ரங்கன் ஆட்டை விலைக்கு விற்க ஒப்புக்கொண்டான். ஆனால், சில நிபந்தனைகள் விதித்தான். ஆட்டின் விலை பத்தாயிரம் ரூபாய். இரண்டாவது நிபந்தனை ஆடு கைமாறியதும் பேசவில்லை என்றால் அதற்கு நான் எந்தவிதத்திலும் பொறுப்பேற்க முடியாது என்றான்.

இந்த இரண்டு நிபந்தனைகளையும் ஏற்று ராஜாமணி அந்த ஆட்டைப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டான்.

மறுநாள் ராஜாமணி, ரங்கனைத் தேடி வந்தான்.

"என்னப்பா உன் ஆடு என்னிடம் பேச மறுக்கிறதே" என்றான்.

"ஏதாவது தெய்வ குற்றம் இருக்கும். ஆட்டிற்கு கற்பூரம் காட்டிவிட்டு பேசச் சொல் பேசும்," எனச் சொல்லி அனுப்பி வைத்தான். அவனும் நம்பி திரும்பிச் சென்று அவ்வாறே செய்தான். அப்போதும் ஆடு பேசவில்லை.

ரங்கனிடம் மீண்டும் வந்தான் ராஜாமணி.



"பேசாத ஆட்டைக் கொடுத்து, என்னை ஏமாற்றிவிட்டாய். என்னிடம் வாங்கிய பத்தாயிரம் ரூபாயைத் திருப்பித்தா!" என்று கேட்டான்.

"நான் பேசும் ஆட்டைத்தான் உன்னிடம் ஒப்படைத்தேன். நீ அதைப் பேசவிடாமல் என்னமோ செய்துவிட்டாய். தவறு உன்னுடையதுதான். மேலும் என் நிபந்தனையை ஏற்றுக்கொண்டுதான் நீ வாங்கிச் சென்றாய்," என்றான் ரங்கன்.

ராஜாமணி பேச முடியாமல் திரும்பிச் சென்றுவிட்டான். ரங்கன் சிறிய ரேப் ரெக்கோடரில் 'ஓ' 'ஊஹூம்' வார்த்தைகளைப் பதிவு செய்து ஆட்டின் சட்டைக்குள் மறைத்து வைத்து, யாராவது கேள்வி கேட்கும்போது ஆட்டைத் தடவுவதுபோல தடவி பொத்தானை அழுத்தியது பாவம் ராஜாமணிக்குத் தெரிய நியாயமில்லை.

'கேழ் வரகில் நெய் ஒழுகுகிறது என்றால் கேட்பாருக்கு மதி எங்கே போயிற்று?'

## கால் போன போதும்......



ஹென்றி போர்ஸ் என்பவர் ஆழ்கடலில் உயிரினங்களை போட்டோ எடுத்துக் கொண்டிருந்த போது சுறா மீன் ஒன்று அவரது காலைக் கடித்தது. ஆனால் அவர் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் கடமையே கண்ணாக இருந்தார். ஏன் தெரியுமா? அந்தக் கால் உலோகத்தால் செய்யப்பட்டது. ஆனால் சில ஆண்டுகளில் அவரது மற்றொரு நல்ல காலும் விபத்தொன்றினால் போய் விட்டது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.07.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 47
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 44

**பரிசுக்குரியவர்**

இ. ஜெயகரன்-பதுளை

**பாராட்டுக்குரியவர்கள்**

பவுல். ஜெயகணேஸ்
விபுலானந்தா வித்தியாலயம்
காரைதீவு-02.

சாஹிதா தாஹிர்-மன்னார்-03.

ரஞ்சனா நவரத்தினம்
வின்சன்ட் மகளிர் கல்லூரி
மட்டக்களப்பு.

எஸ். வசந்த்-கொழும்பு-15.

ஜி. மயூரன்-கம்பளை.


எஸ். சபான் முகமட்
ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயம்
திருகோணமலை.

ஏ.ஏ. முகமட் அஸாம்-புத்தளம்.

ஏ.பீ. இன்ஷிபா
அல்-மீரான் கனிஷ்ட வித்தியாலயம்
களுவெல்லை-காலி.

ந. கிருஷ் சந்துரு
இராம கிருஷ்ண கல்லூரி
அக்கரைப்பற்று-8.

## அறிவோம்



அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் இப்போது கிரிக்கெட் விளையாட்டு பிரபலமாக இல்லை. ஆனால் உலகின் முதல் கிரிக்கெட் போட்டி இந்த இரு நாடுகளுக்கிடையேதான் நடந்தது.



விக்ஸ் வேபோரப் என்ற ஜலதோஷ நிவாரண மெழுகைத் தயாரித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த லன்ஸ்போர்ட் ரிச்சட்சன். 1905ம் ஆண்டு இவர் இதைக் கண்டுபிடித்தார். டாக்டராக இருக்கும் தன் மைத்துனர் ஜோஷ்வா விக்ஸ் என்பவரைக் கொண்டு தனது கண்டுபிடிப்பிற்கு விக்ஸ் எனப் பெயரிட்டார்.



கனடாவில் ஒன்டாரியோ நகரில் தான் மிகப் பெரிய மதுபானக்கடை (BAR) உள்ளது. இதன் நீளம் 340 அடி. 1984ம் ஆண்டு ஏப்ரல் 3ம் திகதி இது துவங்கப்பட்டது.

## மனதில் பதிவோம்



பண்டைய எகிப்தியர்கள் பூனைகளைப் புனிதமாகக் கருதினர். அவர்களது தெய்வங்களுக்குப் பூனைத் தலையை வைத்தனர். அவற்றில் முக்கியமானது சூரியக் கடவுள். பெயர் 'ரா'




சுறா மீனில் பலவகை உண்டு. அவற்றில் வெள்ளை சுறாமீன் மிகவும் பயங்கரமானது. 21 அடி நீளம் வளரும். மனிதர்களைக் கடித்து சிறு சிறு துண்டாகக் குதறி விடும்.





இங்கிலாந்தின் மிகப் பழமையான சத்திரம் 'பிங்கலி ஆர்ம்ஸ்' கி.பி.905ம் ஆண்டிலிருந்து இது இயங்கி வருகிறது.



இங்கிலாந்தின் சிறந்த கப்பல் மாலுமி எனப் பெயரெடுத்தவர் ஹொரோஷியா நெல்சன். 1758ம் ஆண்டு பேர்ன்ஹாம்தார்ப் என்ற இடத்தில் பிறந்தார். 12 வயதிலேயே கடலுக்குச் சென்றுவிட்டார். இங்கிலாந்திலிருந்து பல நாடுகளுக்கும் வழி கண்டுபிடித்தார்.



இங்கிலாந்து நாட்டிற்குச் சொந்தமான மிகப் பழமையான கப்பல் 'விக்டரி'. இன்றும் இது போர்ட்ஸ் மவுத் என்ற இடத்தில் காட்சிக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



இங்கிலாந்தின் மிகப்பெரிய கடிகாரம் லிவர்பூல் நகரில் உள்ளது. 220 அடி உயரம் உடையது. இதன் முட்களின் நீளம் 14 அடி. எடை 22 தொன். (ஒரு தொன்= ஆயிரம் கிலோ)

## கணித விநோதம்

கீழ்காணும் எண் வரிசையின் தனித்தன்மை என்ன?

1,3,5,7,9,11,13,15,17,19,21,23,25.......

விடை: முதல் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு...போன்ற எண்களின் கூட்டுத்தொகை முறையே 1,2,3,4... ஆகிய எண்களின் வர்க்கங்களாகும்.

உதாரணம்

$1=1\times1$
$1+3=4=2\times2$
$1+3+5=9=3\times3$
$1+3+5+7=16=4\times4$
$1+3+5+7+9=25=5\times5$
$1+3+5+7+9+11=36=6\times6$
$1+3+5+7+9+11+13=49=7\times7$
$1+3+5+7+9+11+13+15=64=8\times8$
$1+3+5+7+9+11+13+15+17=81=9\times9$
$1+3+5+7+9+11+13+15+17+19=100=10\times10$

எம்.தில்லைராஜா-நமுனுகுல.



# தேன் கிண்ணம்

### தீக்குச்சிகள்

நான்கு சுவர்களுக்குள்
நாற்பது விதவைகளால்..
காலந்தள்ள முடியுமா?
அதனால்தான்
ஒவ்வொருவராக..
தீக்குளித்து கொள்கிறார்கள்.

### நரை

கறுப்பு தேசத்தில்
வெள்ளையர்களின்
ஆக்கிரமிப்பு!

### ஏமாற்றம்

கைகளுக்கு எட்டியது
வாய்க்கு எட்டவில்லை!
சம்பள நாளில்..
கடன்காரன்!

### எயிட்ஸ்

விபசார..
விடுதியில்
கண்டெடுத்த
அழியும்
நினைவுச் சின்னம்!

மனைவிக்கு
துரோகம் செய்தவனுக்கு
யாரோ..
கொடுத்த
நிரந்தர சாபம்!

பொகவந்தலாவ-சோ.ஸ்ரீதரன்.

### வேலைக்குச் செல்லவில்லை

இன்று வேலைக்கு செல்லவில்லை
வீட்டில் வேலை அல்ல
உடலுக்கும் வேதி அல்ல
பூட்டி இருந்த வீட்டை
தட்டி எழுப்பிச் சென்று
சந்தியில் சாய வைத்துப் பின்
வண்டியில் ஏற்றிச் சென்று
வரிசையாய் இருக்கச் சொல்லி
பெயரையும் பதிந்து கொண்டு
கண்ணுக்கு விலங்கிட்டு
வாய் மணி இருக்கச் சொல்லி
பொல்லாத வார்த்தை கூறி
போலீஸ் வீட்டுக்கென்று
முன்னால் அறையும் விட்டு
பின்னால் உதையும் விட்டு
பின் கதவை திறந்தும் விட்டார்
இன்று வேலைக்குச் செல்லவில்லை.

சுராஜ்
காரைதீவு-02.

### என்ன தேர்தல் இது...?

என்ன தேர்தல் இது?
எனக்கு விளங்கவில்லை
சந்தைக் கடைச்
சரக்கு வியாபாரம்
போல்...!

•••

தெரியாமல் செய்த
உதவிகள் எல்லாம்
தெருவில் இன்று
தேர்தல் பிரச்சாரமாக...!

•••

வெள்ளிக்கிழமை
கொடுத்த தர்மத்தைக்
கூட வெகுளித்தனமாக
சொல்லிக்காட்டும்
வேட்பாளர்கள்
சிலர்.....!

•••

என்ன தேர்தல்
இது?
எனக்கு விளங்கவில்லை.

•••

முகம் தெரியாதவர்கள்
எல்லாம்
முறை சொல்லி
சொந்தம் என்கிறார்கள்

•••

எல்லா வியாபாரமும்
செய்து பார்த்தேன்.
எதிலும்
நஷ்டம் நஷ்டம்தான்.
'தேர்தலில் நில்லுங்கள்
உழைக்கலாம்' என்று
தம்பி ஒன்று சொன்னது
அதுதான்
நம்பி வந்துள்ளேன்'
என்று ஒருவர்.....

•••

'வெளிநாடு போக
பாரம் கொடுத்தேன்.
பாஸ்போர்ட்டை
வரும்வரைக்கும்
வருவதை(?)
செய்யலாம்' என்று
வந்தவர் ஒருவர்...

•••

என்ன தேர்தல் இது?
எனக்கு விளங்கவில்லை.
அரசியல் அசிங்கம்
அரங்கேறியதோ
கிழக்கில்

•••

இல்லை இல்லை
ஜன-நாயகம்
என்பது
புரியத்
தொடங்கியுள்ளது.

திருமலை
முகமட்சாலி.





### ஒரு தேசத்தின் அழுகுரல்

விரட்டப்பட்ட
தேசத்தின்-
கனவுகளுக்காக
இன்று
விடப்படுகின்றன
எங்கள் உயிர்கள்..!

•

எங்கோ சுவாசித்த
சொட்டு காற்றுக்கும்
விலாசம் கேட்கும்
விசித்திரர்களுக்குள்
எறியப்பட்டோம்
மானிடராய்..!

•

ஒவ்வொரு
சூரியப் பிரசவத்திலும்
பல தூக்கங்கள்
நிரந்தரமாக்கப்பட்டன
கல்லறைக்கும்
கருவறைக்குமிடையே
'அகதி அறை'யும்
ஆக்கப்பட்டது
எங்களுக்காக—

•

நாளைக்காவது
எங்கள்-
ஆளுமை கண்ட
புதுவித அமைதி
ஒரு சூனிய தேசத்தில்
முடிவுரை எழுதும்.

•

அதற்கு முன்
வரட்டும்; அமாவாசை
உலகைவிட்டு
ஒழித்து ஓட....

புதுவித்தகன்
பொத்துவில்.

### தேசப் பிரச்சனை போல் நீயும்!

என்
எண்ணங்கள்
உன்னையே சுற்றிவர
நீயோ
வேவு பார்க்கும்
விமானங்களைப்போல
தூரப் பறக்கின்றாய்.

ஆட்பலமும்,
ஆயுதப்பலமும் போதாமல்
எதிரியை நெருங்கிட
வீரர்கள் அஞ்சுவதுபோல்
உன்னை நெருங்கிட
என் பொருளாதார நிலை
அச்சப்பட வைக்கிறது.

உன்
தரிசனத்தை தினமும்
எதிர்பார்த்தாலும்
நீயோ
கெரில்லாத் தாக்குதல்போல
திடீரெனத் தாக்கிவிட்டு
மறைந்து விடுகின்றாய்.

பொம்பர்களின்
இலக்கற்ற
குண்டு வீச்சுக்கு
அஞ்சுவது போல்
உன் எண்ணங்களின்
இலக்குத் தெரியாது
தவிக்கின்றேன்.

நான்
உன்னை நேசிப்பது
"நாட்டில்
இனப் பிரச்சனை உண்டு"
என்பதுபோல்
தெளிவான உண்மையாகும்.

ஆனால்
நீயோ அடிக்கடி
"இனப் பிரச்சனையே இல்லை"
என்று அறிக்கை விடுவதுபோல்
என் எண்ணங்களை
மறுத்து வருகின்றாய்!

உன் எண்ணத்தை
நான் அறிவேன்-
என்
எண்ணத்தை
நீ அறிவாய்.

'பேச்சுவார்த்தைக்குத் தயார்'-
அடிக்கடி சொல்லிக்கொண்டாலும்
மனம் விட்டுப் பேசி,

விட்டுக்கொடுக்க
தன்மானம்
தடையாக உள்ளதே!

தன்மானப் பிரச்சினையும்
வீண் பிடிவாதமும்
தேசத்தை நாசமாக்குவதுபோல்-எம்
வாழ்க்கையையும்
பாழாக்குமுன்
மனம்விட்டுப் பேசிட
வரும் நாள் எதுவோ?

எஸ்.ரி.எம்.பஸ்வாக்-கல்முனை-05.



### இதய வண்ணம்

துடிப்புடனே கழியுமிந்த பருவம்-நேரில்
தெரிந்திடாது இருக்குமந்த உருவம்

படிப்புகளில் போகு(ம்) மாலை பொழுது-எதுவும்
பதிவதில்லை ஏனோ மனதில் பழுது!

தேடிவ(ந்)தார் வி(ட்)டாரொரு பெண்ணை-அவர்
தெரிவெனவே பேசி வி(ட்)டார் உன்னை
கூடிடவொரு தேதி கண்டார் பின்பு-நாம்
கலந்திடுவோம் மடலிலினி முன்பு!

மனங்கலந்தால் பிரச்சினைகள் இல்லை-இனி
மனதினிலே எழும் கவிதை முல்லை
'தினமுரசு' தந்திடுந்'தேன் கிண்ணம்'-அது
தாங்கிவரும் என்னிதய வண்ணம்!

எம்.எம்.ஏ.சாதிகீன்-கொழும்பு-12.

## பிரபலமானவரும் இரகசியமான சமாச்சாரமும்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் மீது சமீபத்தில் அழகி ஒருத்தி 'செக்ஸ்' குற்றம் சுமத்தியிருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் சமயத்திலும் இவ்வாறு கிளின்ரன்மீது புகார்கள் முளைக்கொன்று கிளம்பிவந்தன.

அந்தப் புகார்களில் அத்தனை சுவாரசியம் இல்லை.



விபரிக்கிறார் லொறீன்

கடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் (1992) எழுந்த செக்ஸ் புகார்களில் சற்று வித்தியாச சங்கதியான புகார் ஒன்றுண்டு.

அது கிளின்ரனுக்கு எதிராக வரவில்லை.

மற்றொரு ஜனாதிபதி வேட்பாளரான ஜெரி பிரவுண் என்பவருக்கு எதிராக பூதம்போல் கிளம்பியது.

பாவம் ஜெரி- வாக்காளர்களது வெறுப்புக்குள்ளாகிப்போக அந்த புகாரும் காரணம்.

புகார் செய்தவர் ஜெரி பிரவுணின் பிரசாரக் குழுவில் இருந்த கட்டழகி லொறீன் ஃபின்லே.

ஒருநாள் ஜெரி பிரவுண், அழகி லொறீனை அழைத்திருக்கிறார்.

மறுநாள் பெண் தெய்வ வழிபாடு இருப்பதாகவும், பார்ப்பதற்கு மிகச் சிறப்பாக இருக்கும் கூட வருகிறாயா நீயும்? என்று கேட்டிருக்கிறார்.

சடங்கு காணும் ஆசையில் லொறின் 'சம்மதம்' என்று தலையாட்டிவிட்டார்.

மறுநாள் அழகி லொறீன் தன் அதிகாரி பிரவுனுடன் சென்றாள்.

பிரவுண் அவளை அழைத்துச் சென்ற இடம் ஒரு வீடு. அங்கு மாடியில் உள்ள ஓர் அறைக்குள் இருவரும் சென்றார்கள்.

மிகுதியை அழகி லொறின் சொல்லட்டும். கேளுங்கள்:

"அது ஒரு படுக்கை அறை. ஒரு பெரிய கட்டில் இருந்தது. அதனைச் சுற்றி இருபது போத்தல்களில் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டிருந்தன.

"மங்கலான ஒளியில் அறையை பார்த்தபோது மந்திர மாய உலகில் புகுந்தது போல் ஒரு பிரமை ஏற்பட்டது.

"கட்டிலின் மேலே பல வண்ண இறக்கைகள் கொண்ட ஓர் உருவமும், அதன் அருகில் தங்கத்தால் செய்யப்பட்ட சிலையும் இருந்தன.

ஜெரி என் அருகில் வந்தார். என் தோளில் கைவைத்து, காதருகே இரகசியம் பேசுவதுபோன்ற குரலில்,

'லொறின் கட்டிலில் சரிந்துகொள்" என்று சொன்னார்.

நான் மறுக்கக்கூடிய மனநிலையில் இருக்கவில்லை. கட்டிலில் சரிந்தேன்.

அப்போது அறைக்கதவு திறந்தது. ஒரு பெண் மூன்று பாத்திரங்களில் ஏதோ பானம்



பிரவுனும் அழகியும்

கொண்டுவந்து தந்து குடிக்கச் சொன்னாள்.

நிச்சயமாக அது 'சம்பெயின்' அல்ல என்று என்னால் கூறமுடியும். நான் அதனை வாங்கிக் குடித்தேன்.

நான் அதனைக் குடித்தவுடன் பானம் கொண்டுவந்த பெண் என் ஆடைகளை ஒவ்வொன்றாக களையத் தொடங்கினாள்.

அப்பெண் முன்பாகவே ஜெரி என்மீது ஆக்கிரமித்தார்.

சிறிது நேரத்தில் அறைக்கதவு திறந்தது. தேர்தல் பிரசார குழுவில் பணிபுரியும் மூன்று பெண்கள் வந்தனர்.

அவர்களும் தமது ஆடைகளை களைந்துவிட்டு நிர்வாணமாக ஆடியபடி என்னையும் அழைத்தனர்.

"நீயும் பெண் தெய்வத்தின் ஓர் அம்சமாகிவிட்டாய்" என்று பாராட்டினார்கள்.

எனக்கு பயமாக இருந்தது. அறைக் கதவை திறந்து ஓடிவந்தேன். அவர்கள் யாரும் பதட்டப்படவோ, என்னைத் துரத்தவோ இல்லை"

இதுதான் அந்த அரசியல் பிரசார குழுவில் இருந்த அழகியின் அனுபவம்.

இது பொய்யான புகார் என்று பிரவுண் மறுத்துப் பார்த்தார். பயன் இல்லை.

இப்படி ஒரு புகார் கிளின்ரன்மீது அப்போது வந்திருந்தால் ஒருவேளை கிளின்ரனதும் 'கிளீன்போல்ட்' ஆகியிருக்கக் கூடுமோ?

## இந்த வாரம் உங்கள் பலன்

(03.07.94 முதல் 09.07.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன்.புதன் |
| சிம்மம் | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| இடபம் | - செவ்வாய் |

★ சந்திரன்-மேடம், இடபம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்: | சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், குடும்ப நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- உறவினரால் கஷ்டம், மனக்கவலை. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, நிலைப்பிரிவு. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 9 மணி |
| வியாழன்- பணவரவு [illegible], செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- நன்மை அதிகம், பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |
| சனி- உயர்ந்த நிலை, வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மேடம்: | சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மனப் பயம் நீங்கும். | காலை 7 மணி |
| திங்கள்- செய்தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| புதன்- தனலாபம், முயற்சி வெற்றி. | பி.ப 1 மணி |
| வியாழன்- உறவினர் இழப்பு, மனக்கவலை. | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| சனி- காரியானுகூலம், பொருள்பேறு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### இடபம்: | சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப 3 மணி |
| திங்கள்- செய்தொழில் நன்மை, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, உயர்ந்த எண்ணம். | காலை 7 மணி |
| புதன்- பணத்தடை, கடன் பயம். | பி.ப 4 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- புதிய தொழில் முயற்சி, செல்வாக்கு. | காலை 9 மணி |
| சனி- பயனற்ற பிரயாசம், மனக்கவலை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்: | சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- கௌரவம், நினைத்த காரியம் வெற்றி. | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- வீண் தொல்லை, பணச் செலவு. | பி.ப 2 மணி |
| புதன்- பெரியோர் சகவாசம், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வியாழன்- தொழில் நிலை மாற்றம், அரச விரோதம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், நண்பர்களால் நன்மை. | காலை 8 மணி |
| சனி- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: | சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், தொழில் பேறு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- மனக் கவலை நீங்கும், குடும்ப நன்மை. | பகல் 11 மணி |
| புதன்- உறவினர் உதவி, கருமங்களில் வெற்றி. | காலை 10 மணி |
| வியாழன்- தெய்வ நம்பிக்கை, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை நீங்கும், காரியசித்தி. | பகல் 12 மணி |
| சனி- செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 5

### கர்க்கடகம்: | சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செல்வாக்கு மிகுதி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| திங்கள- குடும்ப நன்மை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- பணத்தட்டுப்பாடு, இனசன விரோதம். | காலை 7 மணி |
| புதன்- பெரியோர் உதவி, புதிய முயற்சி. | பி.ப 1 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- ஆடம்பரச் செலவு, பணவிரயம். | காலை 6 மணி |
| சனி- செய்தொழில் நஷ்டம், மனக்கவலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 1

### மகரம்: | சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில்நிலைப் பேறு, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- பணவரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- எடுத்த கருமம் வெற்றி, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, முன்னேற்றம். | காலை 6 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, முயற்சி மேன்மை. | பகல் 11 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், கௌரவம். | பி.ப 2 மணி |
| சனி- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்: | சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- செல்வாக்கு, வெளியிடப் பயணம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- தனலாபம், குடும்ப சுகம். | காலை 9 மணி |
| புதன்- அந்நியர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப 1 மணி |
| வியாழன்- தெய்வ நம்பிக்கை, மன அமைதி. | காலை 8 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, இனசனக் கொண்டாட்டம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 9

### தனு: | சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முன்னேற்றம், பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, உறவினரால் கவலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- மனக்கவலை நீங்கும், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| புதன்- முன்னேற்றம், பொருள் வரவு. | காலை 8 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, காரிய சித்தி. | காலை 6 மணி |
| வெள்ளி- பணத்தட்டுப்பாடு, காரியத்தடை. | பகல் 11 மணி |
| சனி- உயர்ந்த நிலை, கருமங்களில் வெற்றி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்: | சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரியசித்தி, தொழில் பேறு. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்-வீண் குறை கேட்டல், செய்தொழில் விருத்தி. | பி.ப 4 மணி |
| வெள்ளி- தொழில் நிலை முன்னேற்றம், பணத்தடை. | காலை 8 மணி |
| சனி- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: | சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணவரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | காலை 10 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| புதன்- பெரியோர் சகாயம், தொழில் பேறு. | பி.ப 3 மணி |
| வியாழன்- மனக்குழப்பம், பணத்தடை.. | காலை 8 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், இடப் பிரிவு. | பி.ப 1 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், கவலை மறைவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

### கன்னி: | சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சிகள் பலிதம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| புதன்- வெளியிடவாசம், அந்நியர் உதவி. | பி.ப 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- மனக் குழப்பம், தொழில் இழப்பு. | காலை 7 மணி |
| சனி- செலவு மிகுதி, திடீர் பிரயாணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 6

# மருத்துவ உலகம் கடந்துவந்த ஆண்டுகளும் அடுத்து கடக்கப் போகும் ஆண்டுகளும்!



ஜேர்மனிய மருத்துவர் 'வில்ஹெம் கொன்றாட் றொயென்ற்கென்' தனது மனைவியின் கையை 'எக்ஸ்றே'யில் பதிவு செய்த படம் இது. மருத்துவ தொழில்நுட்பத்தில் புரட்சிகர மாற்றம். இப்படம் 1895இல் எடுக்கப்பட்டது. முதன்முதல் எக்ஸ்றே பதிவுப் படம் இதுதான்.

"அன்று உயிருக்குப் போராடிய அமெரிக்க ஜனாதிபதியை மருத்துவத்தால் காப்பாற்ற முடியவில்லை."



'பிளேக்' நோயால் படுக்கையில் விழுந்தவரை, காவிச் செல்வோர் தமக்கும் நோய் பரவாமல் முகக் கவசங்களோடு!

அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக விருந்த ஜேம்ஸ் ஏ.கார்ஃபீல்ட் 1881, ஜூலை 2ம் திகதி ஒரு கொடியவனின் துப்பாக்கி ரவைக்கு இலக்கானார். இவரை உயிருடன் மீட்டெடுக்க மருத்துவ விற்பந்நர்கள் போராடினர். இரண்டு சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டன. இருப்பினும் சில மாதங்களில் அவர் மரணமானார்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நடைபெற்ற அந்த மருத்துவப் போராட்ட வரலாற்றை இன்றுள்ள மருத்துவ விற்பந்நர்கள் ஆழ்ந்து ஆராய்ந்துவருகின்றனர். "இத்தகையதொரு சம்பவம் இன்று நடைபெறுமானால் மிக மிகக் குறைவான சத்திரசிகிச்சையுடன் ஜனாதிபதியைக் காப்பாற்றியிருப்போம்" என்று மார்தட்டிக் கூறுகிறார் ஒரு நவீன மருத்துவர்.

ஜனாதிபதி கார்ஃபீல்ட் துப்பாக்கி வேட்டின் காரணமாக இறக்கவில்லை. அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின்போது இடம்பெற்ற சில சம்பவங்களே அவர் மரணமடைந்ததற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

சத்திரசிகிச்சையின்போது ஜனாதிபதியின் உடலினுள் பாய்ந்த குண்டினைக் கண்டு பிடிப்பதற்காக அவருடைய உடல் கிண்டிக் கிளறப்பட்டது. (இவ்வாறு இன்றும் நடை பெறுவதுண்டு) இதனால்கூட அவருடைய உயிர் பிரியவில்லை. சத்திர சிகிச்சையின்போது தொற்று நீக்கி மருந்து எதுவும் பயன்படுத்தப்படவில்லை. அக்காலத்தில் அத்தகைய தொற்று நீக்கியின் பாவனை எதுவும் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

இருபதாம் நூற்றாண்டு முடிவதற்கு இன்னும் 6 ஆண்டுகளே உள்ளன. ஆனால் இந்த நூற்றாண்டு மனித சமுதாயம் கண்ட வளர்ச்சி அளவிட முடியாதது. குறிப்பாக மருத்துவ உலகம் மாபெரும் சாதனைகளைக் கண்டுவிட்டது.

ஜனாதிபதி கார்ஃபீல்ட் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த அதே கால கட்டத்தில் தொற்று நீக்கி மருந்துகளின் உதயமும் ஆரம்பமாகி விட்டது. பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானியான லுயிஸ் பாஸ்டர் நுண்ணுயிர்க் கிருமிகளுக்கும் நோய்களுக்கு மிடையிலான தொடர்புகளைக் கண்டறிந்து விட்டார்.

வாந்திபேதி, காசநோய் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் மருந்துகளும் கண்டுபிடிக்கப் பட்டுவிட்டன. 1900ம் ஆண்டில் 'எக்ஸ்றே' மற்றும் அஸ்பிறின் போன்றவை மருத்துவத் துறையில் புகுந்தன.

அப்போது மருத்துவ உலகில் பெரும் விந்தையாக கருதப்பட்டவை இப்போது மிகச் சாதாரணமாகிவிட்டன.

பக்டீரியா போன்ற நுண் கிருமிகளை அழித்து பலதரப்பட்ட நோய்களையும் கண்டிக்கவல்ல மருந்துகள் அடுத்த 50 ஆண்டுகளின் புகுந்துவிட்டன.

போலியோ, அம்மை போன்ற நோய்களைத் தடுக்கும் ஊசி மருந்துகள் 1960ல் பயன்படுத்தும் முறை வந்தமையினால் இலட்சக்கணக்கான குழந்தைகள் காப்பாற்றப்படுகின்றன.

20ம் நூற்றாண்டு முடிவுறும் காலகட்டத்தில் 'எயிட்ஸ்' போன்ற பயங்கர நோய்கள் படையெடுத்தாலும் மிகவிரைவில் இவையும் கட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்று துணிவு கொள்ளலாம்.

## என்ன நடந்தது?



1952ம் ஆண்டு எடுக்கப்பட்ட படம் இது. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை சமாச்சாரம் தான் இதுவும். அப்போது உலகெங்கும் 'பிளேக்' நோய் பரவியிருந்தது. நோய் பயம் ஒருபுறம்; முத்த ஆசை மறுபுறம். அதனால் முகக் கவசத்தோடு பாதுகாப்பான முத்தம்.

# கொலைகார புற்றுநோய் தடுக்க சில வழிகள்

"முட்டையுடன் பேக்கனும் சேர்த்து ஒரு சான்ட்விச் தயாரித்துத்தா" என்று பாற்றி லா பெலி என்ற தொலைக்காட்சி நடிகையிடம்



"5 நிமிடத்தில் திரும்பிவந்து பார்த்தபோது உயிர் பிரிந்திருந்தது."

மருத்துவமனையில் படுக்கையில் கிடந்த அவரின் சகோதரி ஜாக்கி கேட்டிருக்கிறார்.

ஆனால் சற்று நேரம் கழித்து வந்து தயாரித்துத் தருவதாகக்கூறிவிட்டு வேறோர் அலுவலாகச் சென்றுவிட்டார் பாற்றி.

பின்னர் வந்து பார்த்தபோது ஜாக்கி எதையும் உண்ணும் நிலையிலில்லை. அவருடைய உயிர் அப்போதே பிரிந்துவிட்டது.

மருத்துவமனையிலிருந்து ஆக 5 நிமிட நடை தொலைவில்தான் பாற்றின் இருப்பிடமிருந்தது. தனது அசிரத்தையினால், இறுதி நேரத்தில் தன் சகோதரி விரும்பிய உணவைத் தயாரித்துக்கொடுக்க முடியாமற் போய்விட்டதே என்று இப்பொழுதும் ஏங்குகிறார் பாற்.

பாற்றின் மூன்று சகோதரிகள் புற்றுநோயுடன் போராடி உயிரிழந்தவர்கள். விவியன் தனது 46வது வயதில் ஈரல் புற்றுநோய் கண்டு மரணமானார். பெருங்குடல் புற்றுநோயுடன் போராடி மடிந்தார் பார்பரா. அப்போது அவருக்கு வயது 46. ஜாக்கி புற்றுநோய் கண்டு இறக்கும்போது 43 வயது. பாற்றியின் குடும்பத்துக்கு புற்றுநோய் பரம்பரை நோய் போன்றிருப்பதனால் பாற்றியையும் கவனமாக இருக்கும்படி மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். ஆனால் பாற்றி அதனைப் பொருட்படுத்துவதில்லை.

தனது சகோதரியின் இறுதிநேர ஆவலைப் பூர்த்தி செய்ய முடியாமற் போய்விட்டதே என்ற ஏக்கம்தான் அவரை ஆட்டிப் படைக்கிறது. இதற்கான பிராயச்சித்தம் செய்வதுபோல் பாற்றி ஜாக்கி மட்டுமல்லாமல் ஏனைய சகோதரிகளினது குழந்தைகளனைத்தையும் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

என்பிசி தொலைக்காட்சி சேவையில் பாற்றி லா பெலி ஒரு பிரபல நடிகை. பாராட்டுக்களும் பரிசில்களும் பெற்றவர். 48வது வயதைத் தாண்டிவிட்டாலும் கவர்ச்சி குறையாதவர்.

தனது சகோதரி ஜாக்கியின் மகளான ஸ்ரேசியை தனது நிர்வாகப் பணிகளில் பிரதான பதவியில் அமர்த்தியுள்ளார்.





இவருக்கு லஃ்ரி என்ற மகனும் இரு வளர்ப்பு மகன்களும் உள்ளனர். இப்பொழுது சகோதரிகளின் குழந்தைகளும் சேர்ந்த பின் பாற்றியின் இல்லம் என்றும் கலகலப்பாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

பாற்றிக்கு புற்றுநோய் வராமல் தடுப்பதற்கான சில உணவு மற்றும் பழக்க வழக்கங்களை வல்லுநர்கள் தெரிவு செய்து தந்துள்ளனர். பொதுவாக இப்பழக்க வழக்கங்கள் சகலருக்கும் பொருந்தும் என்பதனால் இங்கு அவற்றைத் தருகிறோம்:

- கொழுப்புள்ள இறைச்சி முதலான உணவு வகைகளை நீக்கவும்.
- நார்ச்சத்துப் பொதிந்த உணவு, தானியம், ஆகியவற்றை காலை உணவுக்கு வைத்துக்கொள்ளலாம். முட்டை, மற்றும் பேக்கன் போன்றவற்றை காலை வேளையில் பயன்படுத்தலாகாது.
- தலைக்கு சாயம் பூசுவதையும் உணவு வகைகளுக்கு செயற்கை வர்ணம் சேர்ப்பதையும் நிறுத்த வேண்டும். சாய வகைகளில் புற்றுநோய் ஊக்கிகள் உள்ளன என்று கருதப்படுகிறது.
- பழங்கள், பச்சை மரக்கறி வகைகளை கூடுதலாக உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். புற்றுநோய்க் காரணிகளைக் கொல்லும் ஆற்றல் வாய்ந்தவை விட்டமின் A மற்றும் C சத்துக்கொண்ட உணவுகள்.
- புகை நிரம்பிய இடங்களில் இருக்க வேண்டாம். புகைப்போரைவிட அவர்கள் ஊதும்புகையினை சுவாசிப்போருக்கு புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.
- சூரிய வெளிச்சம் நேரடியாக உடலைத் தாக்காதவாறு உடை அணிந்து கொள்ள வேண்டும். சூரியக் கதிரில் சருமப் புற்றுநோயைத் தூண்டும் அம்சங்கள் உண்டு.
- தேகப்பயிற்சி தொடர்ந்து செய்ய வேண்டும். ஹோர்மோன் சுரப்புக்கு தேகப்பயிற்சி பிரதானமானது.
- வாரத்தில் இரு தடவையாவது மீன் உணவு தேவை. மீன் எண்ணையில் புற்றுநோய்த் தடுப்புக்கான அம்சங்கள் உள்ளன.
- கூடுமானவரை மதுபானத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ■

## சின்ன வயதில் ஒரு சாகசம்



## 'திரில்' ரிப்போர்ட்: ஜன்னலில் இருந்து விழுந்த குழந்தை

ஜேவொன் சௌசியர் அந்தப் பகுதியில் பலருக்கும் அறிமுகமானவன். ஆறே வயதுதான். ஆனால் அவனைவிட வயதில் மூத்தவர்களுடன் உதைபந்தாட்டமாடுவதில் இணையற்றவன். இதனால் அவன் படிக்கும் பாடசாலையில் மட்டுமல்லாமல் அந்த வட்டாரத்திலும் நல்ல பெயர் பெற்றுவிளங்குகிறான்.

கொனெக்டிக்கட் மாநிலம், நியூஹேவன் நகரில் வசிக்கும் ஜேவொன் திடீரென மாவீரன் ஸ்தானத்தை எட்டிவிட்டான். அவன் வீடு தேடிவந்து அந்த நகரப் பொலிசார் முதல் பிரமுகர்கள், பாமரர் அனைவரும் பாராட்டிவிட்டுச் செல்கின்றனர். பல பரிசில்களும் குவிந்து விட்டன.

அங்குள்ள அடுக்குமாடித் தொடர் வீட்டின் ஜன்னலில் ஒரு குழந்தையை ஜேவொன் திடீரெனக் கண்டான்.

ஏதோ ஒரு உணர்வு உந்தித்தள்ள பாய்ந்தோடிச் சென்று தன் பிஞ்சுக்கரங்களை நீட்டினான். நீட்டிய கைகளில் நொடிப் பொழுதில் விழுந்தது அக்குழந்தை.

பிராண்டன் எலிசன் என்ற அந்தக் குழந்தை கட்டடத்தின் இரண்டாவது மாடி யன்னலில்- சுமார் 15 அடி உயரத்திலிருந்து கீழே தவறி விழுந்தது. எப்படியோ குழந்தைக்கு அடியேதும் படாமல் ஜேவோன் காப்பாற்றிவிட்டான்.

குழந்தை விழுந்த வேகத்தில் நிலை தடுமாறி குழந்தையுடன் ஜேவொனும் கீழே விழுந்து உருண்டுள்ளான். இருப்பினும் இருவருக்கும் உடலில் எதுவித சிராய்ப்பும் இல்லை. தான் இத்தகைய செயலை எவ்வாறு செய்தான் என்பதை ஜேவொனால் இன்றுவரை அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது.

"யன்னலின் விழிம்பில் கால் வைத்த அக்குழந்தை கீழே விழப் போகிறது என்பதை மட்டும் திடீரென அறிந்தேன். தாவி ஓடிச்சென்று தாங்கிப் பிடித்தேன்" என்கிறான் ஜேவொன். ●



# கொலை விழும் நேரம்

**20**

**தருவது — ரசிகன்**

**வி**னோவின் பின்னால் நடந்து யோசித்தாள் காயத்திரி.

எதிரே சிறியதாய்- ஆனால் கண்ணுக்கு அழகாக தெரிந்த வீடு வெள்ளை பூசிக் கொண்டு அழகாகத் தெரிந்தது. சுற்றிலும் ஒரு ஆளின் மார்பு உயர அளவில் கட்டப்பட்டிருந்த மதில் பலவீனமான காவல்காரன்போல் தெரிந்தது. வாகனம் செல்ல முடியாத அளவிலான சிறிய கேற் இருந்தது. இத்தனை பெரிய இடம் இருக்க ஏன் கேற் மட்டும் சிறிதாக அமைத்தார்கள் என்று காயத்திரி யோசிக்க, வினோ தன் காற்சட்டைப் பையில் சாவிக் கொத்து எடுத்து கேற்றில் தொங்கிய பூட்டில் நுளைத்து திறந்தான்.

காயத்திரி உள்ளே வர மீண்டும் கேற் சாத்திவிட்டு, "வா காயத்திரி" என்று அவளைத் தாண்டி வேகமாய் சென்று வீட்டின் கதவில் இருந்த அழைப்பு மணி அழுத்தினான்.

காயத்திரிக்கு மீண்டும் யோசனை. 'உள்ளே ஆள் இருந்தால் வெளியே கேற் எதற்கு பூட்டப்பட்டிருக்க வேண்டும்?'

உள்ளே யாரோ நடந்து வரும் காலடி ஓசை வெளியே மெல்லியதாய்க் கேட்டது.

கதவு உள்ளிருந்து திறக்கப்பட்டது. எட்டிப்பார்த்த முகம் கண்ட காயத்திரி தன்னையும் அறியாமல் 'வீல்' என்று அலறினாள்.

அடுத்த நொடியே முகத்தை உள்ளே இழுத்துக்கொண்டு, கதவை அகலத் திறந்துவிட்டு முதுகு காட்டி உள்ளே வேகமாய் நடந்து சென்றது ஒரு பெண்.

அவள் சேலை கட்டியிருந்தாள். காயத்திரி அதிர்ச்சி மாறாமல் வினோவைப் பார்த்தாள்.

அவன் காயத்திரியைப் பார்த்து அமைதியாக, இயல்பாகப் புன்னகைத்தான்.

காயத்திரியின் கண்களில் பயம் குடியேறியிருந்ததைப் புரிந்துகொண்டு,

"உள்ளே வா. விபரமாய் சொல்கிறேன்."

என்றான். சொல்லும்போதுகூட லேசாக புன்னகை செய்தான்.

காயத்திரி தயங்க, முதல் தடவையாக, காயத்திரி அவனோடு பழகிய கடந்த ஆறு மாதத்தில் இப்போதுதான் அவனாக முன்வந்து செய்த செயலாக, வினோ காயத்திரியின் இடது கை மணிக்கட்டில் மெல்லத் தொட்டான்.

அந்த அதிர்ச்சியிலும் காயத்திரி அதிசயமாக அவனைப் பார்த்தாள். தன் கை மணிக்கட்டில் பிடித்திருக்கும் அவனது கையைப் பார்த்தாள். 'வினோ இதுவரை நீயாக தொட்டதில்லை. உன் விரல் நுனிகூட தானாக வந்து பட்டதில்லை. இப்போது எப்படி இது?' என்பதுபோலப் பார்த்தாள்.

மீண்டும் காயத்திரி வினோவை- வினோவின் கண்களைப் பார்த்தாள்.

அவன் தன் கண் இமைகளை மூடித் திறந்து, ஆறுதல் சொல்லி, அமைதிப் படுத்துவதுபோல அவளைப் பார்த்தான். மீண்டும் அவளை;

"காயத்திரி வா. உள்ளே."

என்றான். என்றதில் முன்பைவிட அதிக அழுத்தம் உச்சரிப்பில் காட்டினான்.

காயத்திரி உள்ளே காலடுத்து வைத்தாள். கதவு சாத்தினான். முன் ஹோலில் மூன்று பிரம்பு நாற்காலிகள் வட்டமாக போடப்பட்டு, நடுவே சதுரமாக ஒரு ரீப்போ இருந்தது. அதன் மேலே காலியான ஒரு தேநீர் கோப்பை மட்டும் இருந்தது. சன்னலின் ஒரு கதவு மட்டும் சற்றுத் திறந்திருந்ததால் ஹோலில் மங்கலான வெளிச்சம் மட்டுமே இருந்தது. காயத்திரிக்கு மேலும் பயமாக இருந்தது.

"இரு காயத்திரி." என்று வினோ அவள் அருகில் வந்து சொல்ல, சட்டென்று திகைத்து அவனைத் திரும்பிப் பார்த்தாள். என்றாலும் மறுக்காமல் பிரம்பு நாற்காலியில் பயந்தபடி ஒடுங்கி அமர்ந்தாள்.

எதிரேயிருந்த பிரம்பு நாற்காலியில் வினோ அமர்ந்து அவளையே ஊடறுத்துச் செல்வது போலப் பார்த்தான்.

காயத்திரி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டாள். முன்னர் கண்ட முகம் எங்காவது தெரிகிறதா என்று பயத்தோடு பார்த்தாள்.

மீண்டும் அந்த முகத்தைப் பார்க்க வேண்டும் போலவும் இருந்தது. வேண்டாம் என்பது போலவும் இருந்தது.

திடீரென்று இப்போது வினோ சத்தம் போட்டுச் சிரித்தான். சிரித்துக்கொண்டே,

"நான் சொன்னது சரியாக இருக்கிறதா காயத்திரி?"

அவன் எதைக் கேட்கிறான் என்று நினைவுபடுத்திப் பார்த்தாள் காயத்திரி.

வினோ சிரித்ததும், சிரித்துக்கொண்டு பேசியதும் காயத்திரிக்கு நிம்மதியாக மூச்சு விடக்கூடியதாக இருந்தது. சற்று உடலை அசைத்தாள்.

"காயத்திரி வா. இப்போது போகும் இடம் உனக்கு நரகம். எனக்குச் சொர்க்கம்" என்று இங்கு வரும்போது வினோ சொன்னது நினைவுக்கு வந்தது. அதனைத்தான் கேட்கிறான் என்றும் விளங்கிப் போனது.

"பத்திரிகைத் தொழிலில் பயம் கூடாது காயத்திரி. எந்தச் சூழலையும் எதிர்த்து ஆடக் கூடிய தைரியம் முக்கியம்"

வினோ சொல்ல காயத்திரிக்கு வெட்கமாக இருந்தது.

தான் பயந்ததையெல்லாம் தெளிவாக புரிந்துகொண்டுவிட்டானே என்று அந்தர மாகவும் இருந்தது.

இப்போது முதற் தடவையாக காயத்திரி வாய் திறந்தாள்.


"கதவு திறந்தார்களே, யார் அது?"

என்று கேட்டாள்.

எங்காவது நின்று பார்க்கக்கூடுமோ என்று விழிகளை சுழல விட்டுப் பார்த்தும் கொண்டாள்.

"பயந்துவிட்டாய் காயத்திரி. பயந்து நீ அலறியது அவளைக் காயப்படுத்தியிருக்கும். சோ...அவள் வெளியே வரமாட்டாள். நீ இங்கிருக்கும்வரை உள்ளேதான் அவள்..."

"நீயும் ஒரு பெண்ணானால்
நிலவே மறையாதே!-உன்
நெஞ்சில் ஈரம் உண்டென்றால்
இரவே விடியாதே!"
-கவியரசு கண்ணதாசன்-



"மன்னித்துக்கொள் வினோ! எனக்கு... அது..எதிர்பாரா ஷாக்... அதிர்ச்சி.... யார் அது வினோ?"

வினோவிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

"சொல்கிறேன் காயத்திரி. அதற்காகத் தானே உன்னை இங்கே அழைத்து வந்தேன். என்ன குடிக்கப்போகிறாய்? ரீ அல்லது..."

"வேண்டாம் வினோ. அவள்... அவர் உனக்கு என்ன முறை? முகத்தில் அது..அது.. என்ன வினோ..எப்படி...?"

காயத்திரி அவளைப் பற்றி அறிவதற்கு காட்டிய ஆர்வத்தில் பாதி தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் உள்ள உறவு பற்றியதாகவும் இருப்பதை நினைக்க வினோவுக்கு சிரிப்பாக இருந்தது.

'எங்கே தன் காதலுக்கு அவள் தடையாகி விடுவாளோ என்று காயத்திரி பயப்படுகிறாள். தனது காதலை மறுப்பதற்கு காரணம் அவள்தானோ என்று காயத்திரி சந்தேகப் படுகிறாள்.'

வினோ மனதுள் சிரித்துக்கொண்டான்.

"நல்ல கதை கேட்கும் சுவாரசியம் இதில் இருக்காது காயத்திரி. கதை முடிவில் உனக்கு திருப்தியும் இருக்காது காயத்திரி."

"நான் கதை கேட்க வரவில்லை. யார் அது? அது சொல்லு. முகத்தில் ஏன் அப்படி? அதற்கு காரணம் சொல்ல விரும்பினால் சொல்லு. அது இன்னொருவர் சம்பந்தப்பட்ட விவகாரம். நான் வற்புறுத்தக் கூடாது. விரும்பினால் சொல். எனக்கு மிக முக்கியம் தேவையான பதில் என் காதலை நீ.. மறுப்பதற்கும் என்னை இப்போது இங்கே அழைத்து வந்ததுக்கும் இடையே ஒரு முடிச்சு உண்டா? உண்டெனில் அது என்ன சொல்லு. உன் மறுப்பின் நியாயத்தை விளக்கு."

மூச்சுப் பிடித்து பேசி முடித்தாள். சற்று முன் பயந்து ஒடுங்கிப் போயிருந்த காயத்திரிதானா இவள் என்று வினோ ஆச்சரியப்பட்டான்.

"காயத்திரி! உன் கேள்விகளுக்கான விடை ஒரு சின்னக் கதையில்தான் இருக்கிறது. சொல்லவா, விடவா?"

கேட்டபடி ஆழமாய் பார்த்தான்.

"சொல்லு வினோ. சுற்றி வளைக்காதே?"

சொல்லத் தொடங்கினான் வினோ.

■

**கு**லாம்ஷாவை நிர்மலா இதுவரை நேரில் கண்டது கிடையாது.

ஆனால் பத்திரிகைகளில் படத்தோடு செய்திகள் பார்த்திருக்கிறாள்.

துணிச்சல், விவேகம், எதிரிகளை துவம்சம் செய்தல் என்று தூள் கிளப்பும் கிரைம் புலி என்று கேள்விப்பட்டிருக்கிறாள்.

இப்போது குலாம்ஷா திடீரென்று தோன்றியதில் புதிய நம்பிக்கை வந்தது.

நிர்மலாவுக்கு நம்பிக்கை வந்த அந்த நேரத்தில்தான் ஜவாஹருக்கு துணிச்சலும் வந்தது.

வெறுங்கையோடு வந்திருக்கும் கிரைம் புலியை மடக்கி விடலாம் என்று நினைத்தான் ஜவாஹர்.

தன் சட்டை விலக்கி படுவேகமாய் பிஸ்டல் எடுத்து உயர்த்த,

கண்மூடிக் கண் திறப்பதற்குள் குலாம் ஷாவின் கையில் ஒரு பிஸ்டல் தோன்றியது.

ஜவாஹரின் மணிக்கட்டில் பிஸ்டலின் தோட்டா பாய்ந்தது.

ஜவாஹரின் பிஸ்டல் தரையில் விழுந்தது. 'யம்மா' என்று அலறி தன் இடது கையை வலது கையால் பிடித்தபடி முனகினான் ஜவாஹர்.

பசுபதி திகைத்துப்போனார். குலாம்ஷாவா மாயமனிதனா? எத்தனை வேகம்? முதலிரவுத் தம்பதிகள் மாதிரி ஆர்வமான வேகம். பிஸ்டல் எடுத்ததும் தெரியவில்லை. அது வெடித்ததும் தெரியவில்லை.

குலாம்ஷா பசுபதியைப் பார்த்து கண் சிமிட்டினார்.

"பசுபதி உன் நாடகம் படு தோல்வி. பல கோடிகள் கொட்டி எடுக்கப்பட்டும் ஓடாமல் கிடக்கும் திரைப்படம் மாதிரி உன் நாடகமும் நேர விரயம்."

பசுபதியை நோக்கி குலாம்ஷா முன்னேற, பசுபதி பின்நோக்கி நகரத் தொடங்கினான்.

ஜவாஹரின் கையில் இருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவன் வலியால் அவஸ்தைப்பட்டபடி குலாம்ஷாவை அச்சத் தோடு கவனித்துக்கொண்டிருந்தான்.

"என்னைத் தெரியுமா பசு...பதி?"

பசுவையும்-பதியையும் இடைவெளி கொடுத்து உச்சரித்து வெறுப்பூட்டிக் கேட்டார்.

"தெரியும்."

குரல் நடுங்கியது.

"அதுதானே. குலாம்ஷாவைத் தெரியாத குற்றவாளிகள் குறைவுதான். அதுசரி பசுபதி இந்தக் கொலைகளை எல்லாம் ஒரு பெண்ணை வைத்து ஏன் செய்தாய்?"

பசுபதி பேயறைந்தவர்போல் மிரண்டார். பதில் எதுவும் சொல்லாமல் குலாம்ஷாவை நோக்கினார்.

"கொலை செய்ய பெண்ணை ஏவும் தந்திரம் எப்படியப்பா உன் புத்தியில் மலர்ந்தது? பாவம் பிரியா. அவளைப்போய் கொலைகாரி என்று என்னை நம்பவைத்து நீ யாரைக் காப்பாற்ற நினைக்கிறாய் பசுபதி?"

இப்போது பசுபதி குலாம்ஷா எட்டி உதைத்தால், அதுபட்டு சுருண்டுவிழும் தூரத்தில் இருந்தார். எனவே காற்றில் ஆடும் மரம்போல பயத்தில் உடல் நடுங்கியது.

குலாம்ஷாவே தொடர்ந்தும் பசுபதியைக் குடைந்தார்.

"என்ன பசு..பதி! உன் உத்தரவுகளை நிறைவேற்றிய உத்தம புத்திரி யார் என்று சொல்லமாட்டாயா? விரும்பவில்லையா விடு! பசு..பதி. உனக்கு என்னைப் பற்றி எந்தள வுக்குத் தெரியும் என்று எனக்குத் தெரியாது. குற்றவாளிகளை- ஐ.மீன் கொடிய குற்ற வாளிகளை, கோட்டில் நிறுத்துவதைவிட என் பிஸ்டலுக்கு விருந்தாக கொடுப்பதுதான் எனக்குப் பிடிக்கும். அது தெரியுமா உனக்கு?"

பசுபதியின் கண்கள் பயத்தால் வெளியே வந்துவிடும்போல் தெரிந்தன.

அதே நேரம் திடீரென்று உயர்ந்த குலாம்ஷாவின் வலது கால் பசுபதியின் மார்பின் மையத்தில் இடியாக இறங்கியது. பசுபதி பின்புறமாய், மேசையின்மீது முதுகுபட மல்லாந்து சரிந்தார். உயர்ந்த காலை கீழே இறக்காமல், அப்படியே ஒரு சுற்றுச் சுழன்று ஜவாஹரின் கழுத்தின் வலது புறப் பகுதியில் உதைத்தார் ஷா.

தரையில் தொப்பென்று விழுந்த ஜவாஹர், ஏற்கனவே நிறைய இரத்தமும் இழந்து போயிருந்ததால் சுயநினைவை இழந்தான்.

பசுபதி இப்போது பாம்பின் வாயில் சிக்கிய தவளை மாதிரி துடித்தார்.

"அடிக்காதீர்கள். இதய வருத்தம் எனக்கு இதய......"

சொல்லி முடிப்பதற்கு இடையில் குலாம்ஷா மீண்டும் உதைத்தார். இம்முறை அடி, வயிற்றில் இறங்கியது உதை.

"இதயம் உனக்கெல்லாம் இருக்கிறதா பசுபதி? அந்த லப் டப் லப் டப் என்று அடிக்கும் பார் அதுதான் இதயம். உனக்கு அது இருக்காதே."

என்றுவிட்டு முறைக்க, பசுபதி கையெடுத்துக் கும்பிட்டார்.

"என்னைக் கொன்றுவிடாதீர்கள் குலாம்ஷா."

"நீ மட்டும் திட்டம் போட்டுக்கொடுத்து எண்ணி எண்ணிக் கொலை செய்யலாம். நீ மட்டும் சாகக்கூடாது. இதென்ன நியாயம் பசுபதி? சரி. நியாய- அநியாயம் பற்றி உன்னோடு பேசி..."

நிறுத்தி, தலையில் அடித்து கேலியாய் சிரித்துவிட்டு,

"யார் அந்தப் பெண்? அதாவது அந்த உத்தம புத்திரி?"

பசுபதி சொல்லாமல் தப்ப முடியாது என்று உணர்ந்தார்.

சொல்ல வாய் திறந்தார். நிர்மலா பதட்டமானாள். குலாம்ஷா நிர்மலாவை ஒரு முறை முழுதாக நோக்கிவிட்டு பசுபதியையே முறைத்தபடி நின்றார்.

அதே நேரம் வெடித்தது ஒரு துப்பாக்கி. "குலாம்ஷா" என்று பயத்தில் குரல்கொடுத்து அலறினாள் நிர்மலா.

■

**தி**ருமதி ஹரிகரனின் உடலை ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டிருந்த போதும் வீட்டின் உள்ளே ஃபோன் உயிர்த்தது.

கொன்ஸ்டபிள் ஃபோன் எடுத்து காதுக்கு கொடுத்து 'ஹலோ' சொல்ல மறுமுனை "டி.ஐ.ஜி வேண்டும்" என்றது.

ஆம்புலன்ஸ் அருகே நின்று கவனித்துக்கொண்டிருந்த டென்சிலிடம் கொன்ஸ்டபிள் வந்து காதோடு செய்தி சொல்ல, யோசனையாய் சென்று,

'ஹலோ டி.ஐ.ஜி ஹியர்."

மறுமுனையில் சிரித்தது பரிச்சயமாகி விட்ட அந்த பெண் குரல்.

"என்ன டி.ஐ.ஜி. இங்கு ஏன் நிற்கிறீர்கள்? நீங்கள் இங்கே நின்றால் இன்னொரு கொலை நடந்திருக்கிறதே அதை யார் விசாரிப்பது? இந்த நிமிசமே இந்த இடத்தை காலி பண்ணுவது நல்லது. பைதபை உங்களை சந்திப்பதாகச் சொன்னேன் அல்லவா? அநேகமாக விரைவில் நாம் சந்திப்போம்."

ஃபோனை வைத்துவிடுவாளோ என்ற அவசரத்தில்,

"பொறு. கொலையானது யார்?"

அவள் சிரித்தாள். பின் பேசினாள்.

"பரவாயில்லையே டி.ஐ.ஜி. என் தகவல்களில் உங்களுக்கு நம்பிக்கை வந்துவிட்டது. உங்கள் அலுவலகத்திற்கு செல்லுங்கள். அங்கு ஒரு தகவல் இருக்கும்."

தொடர்பு துண்டித்தாள்.

கோபம் வந்தது. 'யார் இவள்?' கேள்வி வந்தது.


என்றாலும் உடனே அலுவலகம் செல்ல வேண்டும். அவள் பொய் சொன்னதில்லை.

மேற்கொண்டு செய்யவேண்டிய ஏற்பாடுகள் சொல்லிவிட்டு அலுவலகம் நோக்கி ஜீப்பில் விரைந்தார் டி.ஐ.ஜி. டென்சில்.


அங்கே காத்திருந்தது...

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: செ.சிவா
வயது: 20
முகவரி: 189/1A, டொரிங்டன் அவனியூ, கொழும்பு-07.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, நண்பர்கள் தொடர்பு.




பெயர்: ஜலீல் ஏ. வாஹிட்.
முகவரி: 42, 'ஹுஸ்னா மன்ஸில்', பாடசாலை வீதி, கொடபிட்டிய, அக்குறஸ்ஸ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் படித்தல், வானொலி, பேனா நட்பு, நண்பர் தொடர்பு.




பெயர்: செ. காளியம்மா
வயது: 28
முகவரி: 1/3 D, 60, கெமுதுபுர, கதிரான தோட்டம், மட்டக்குளிய, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: எம்.எவ். நஜிமா
வயது: 14
முகவரி: நாஸிரா மன்ஸில், மத்திய வீதி, மூதூர்-03.
பொ.போக்கு: செல்லப்பிராணிகள் வளர்த்தல், வீட்டுத் தோட்டம் வளர்த்தல்.



பெயர்: ஜி.சி. ஜெயராஜா
வயது: 27
முகவரி: TELE COM DIVISION JASHTECHNICALSERVICES C.T.D. P.O.BOX-173, RIYADH 11411-K.S.A.
பொ.போ: வழமையானவை.



பெயர்: எம்.எஸ்.எம். இப்திகார்
வயது: 22
முகவரி: AL-JAMAZ EST. SARA SITTEEM, P.O.BOX-7014, RIYADH 11462, K.S.A.
பொ.போ: வழமையானவை.

பெயர்: கே. ஜெகதீசன்
வயது: 24
முகவரி: MOTOREN STR. 21 8005 ZURICH, SWITZERLAND.
பொ.போக்கு: பத்திரிகை, ரி.வி., நண்பர்களுடன் அரட்டை.

பெயர்: ஷாஹுல் ஹமீட் சுபியான்
முகவரி: P.O.BOX-808 CODE NO. 51009, FINTAS, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: சுரேன் விஸ்வநாதன்
வயது: 21
முகவரி: ரிக்கார்டன் கொலனி, மஸ்கெலியா.
பொ.போ: வானொலி, பத்திரிகை, மர்ம நாவல் வாசித்தல்.

பெயர்: ஏ.சி.எம். ஹசன்
வயது: 24
முகவரி: 10, மெயின் வீதி, தலவாக்கலை.
பொ.போ: ரி.வி.பார்த்தல், பத்திரிகை, வானொலி, விளையாடுதல்,

பெயர்: கே.நாதன்
வயது: 20
முகவரி: குருக்கள் வீதி, அக்கரைப்பற்று-07.
பொ.போ: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: ஏ.எஸ். பரீஸ்
வயது: 19
முகவரி: பிரதான வீதி, கிண்ணியா-02.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்.

# "எழுதிச் செல்லும் விதியின் கை..."

சிறுகதை

ஹரீரா அனஸ்

இறைவனின் படைப்புகளின் அதிசயம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். சிலவைகள் மனதை அப்படியே பாரித்துவிடுகின்றன. எனது சிறுகதைக்கு உட்படப்போகிறவர்களும் வித்தியாசமான-விதந்து நோக்கவேண்டியவர்கள்.

அந்தக் கீதம் இன்னும் காற்றில் மிதந்த வண்ணமே இருந்தது. அந்தப் புல்லாங் குழலில்தான் எத்தனை ராகம். எத்தனை சுருதி. கோகுலக் கன்னிகள் எல்லாம் இந்த மூங்கிலின் இசைக் கோர்வைக்குத் தானே மயங்கிக் கிடந்தனர்.

அவன் புல்லாங்குழலில் எத்தனை ஆலாபனைகளை அருமையாக வெளிக் கொணர்கிறான். தினம் தினம் அந்த ஆலமரம் பஸ் ஸ்டொப்பைத் தாண்டிப் போவோர் எல்லாம் அவனைப் பார்த்து அவனுக்கு சில்லறை போடாமல் போவதில்லை.



காலப் போக்கில் நான் அவனது பரம இரசிகனாகிவிட்டேன். அந்தப் படிக்காத மேதைக்கு நான் சில்லறைகளைப் போடுவதைவிட தாள்களையே கொடுத்து வருவேன். அவனோடுகூட ஒரு பெண்ணும். என்ன சோதனை! அவனும் அவளும் இரண்டு கண்களுமே குருடானவர்கள். அவன் பாடுவான்- புல்லாங்குழலும் வாசிப்பான். அவள் பாடுவது மட்டும்தான். ஆனால் ஆணும் பெண்ணும் சேர்ந்ததனால் எவ்வளவு இனிமை-பாடலும் குழலும்.

▫▫▫

அன்று அவன் வழமைபோல இல்லை. சந்தோஷமாக-மிகவும் சந்தோஷமாக இருந்தான். என்ன எதுவென்று பேச்சுக் கொடுப்பதாய் எண்ணினேன். முதன் முதலில் அவனோடு பேசினேன்.

"என்ன கண்ணா! (இது அவனுக்கு நானாக இட்ட பெயர்) "மிகவும் குதூகலம்?"

இல்லை... இவளும் என்னைப் போல கண் தெரியாதவள். வேற்றூர்ப் பெண். ஏதோ தெரியாத் தனமாக போன கிழமைதான் இங்கே என்னிடம் வந்தாள். பின்னர் நாங்களிருவரும் பேசினோம். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டோம்.

"நாங்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டு குடித்தனமாக வாழ்வதென்று முடிவு செய்து நேற்றுத்தான் திருமணம் செய்துகொண்டோம்."

எனக்குள் சிரிப்பும்-இன்னும் பல உணர்வுகளது தோன்றித் தோன்றி மறைந்தன. அவளும் அவனுக்கேற்றவளாகவும் அழகானவளாகவும் காணப்பட்டாள். இரண்டு பேருக்குமே கண் தெரியாது என்ற குறைதானே தவிர வேறொன்றுமில்லை.

நான்தான் எத்தனையோ விடயங்களை எண்ணினேன். திருமணம் முடித்தாயிற்று. சரி. ஆனால் இருவருக்குமே கண் வெளிச்சமில்லை.... ஒதுக்குப்புறமென்று என்ன தெரியும்? எப்படிக் குடித்தனம்....? எப்படி...வாழ்க்கைத் தேவைகள் எப்படி...? உடல் தேவைகள்...? எனக்குத்தான் எண்ணமே தவிர அவர்களுக்கது இருப்பதாக கொஞ்சமேனும் தெரியவில்லை. என்ன இவர்களின் துணிவென்றும் எண்ணிக்கொண்டேன். அடுத்த நாள் நான் வேலைக்குப் போகும்போது பார்த்தேன். அவர்களை அந்த இடத்தில் காணவில்லை. என் புல்லாங்குழல் கண்ணனும் ராதையும் எங்கே...? மனம் அங்கலாய்த்தது-தவித்தது. அவனின் கீதம் இன்னும் அந்த ஆலமரத்தைச் சுற்றியே வலம் வருவதாய் பிரேமையேற்பட்டது. என்னைப்போல் எத்தனையோ பேர் அவனைத் தேடுவதாக எனக்குப் பட்டது.

▫▫▫

அந்த அழகிய கிராமம் விழித்துக் கொண்டது. இப்போது அவன் தனதிருப்பிடத்தை ஒரு ஆலமர நிழலில் அமைத்துக்கொண்டிருந்தான். பழைய துணிகளைச் சேர்த்து தடியினால் கட்டி அமைக்கப்பட்ட கூடாரம் அது.

இருவருக்கும் பார்வையில்லாத நிலமைதான். ஆனால் மற்றவர்களுக்கு பார்வையிருக்கிறதே என்ற கவலைதான் அவர்களை அப்படி ஒதுங்க வைத்தது. அவனின் புல்லாங்குழலுக்கு கிராமத்திலும் அதிக கிராக்கி...

▫▫▫

காலம் வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டு போனது என் கண்ணையே என்னால் நம்ப முடியவில்லை. ஆம் அவனேதான். என் வேணுகோபாலன் தான். என் கண்ணன்தான். சுமார் இரண்டரை வருடங்களுக்குகூட இருக்கும். குறையாது. அதே ஆலமர 'பஸ் ஸ்டொப்' பிற்கு அருகில் புல்லாங்குழல் வாசித்தபடி...

"எங்கேயடா கண்ணா இவ்வளவு காலமும் போனாய்..? ஏனடா என்னிடம் சொல்லாமல் போனாய்...? என்னடா கண்ணா செய்கிறாய்..?" என்றெல்லாம் அவனிடம் கேள்வியாய்க் கேட்டுத் தொலைக்க வேண்டும்போல இருந்தது. பின்னர் அவனோடு அவ்வளவு உரிமையாய் பழகவில்லையே நான். நான் மட்டும்தானே அவனிடம் அன்பு வைத்திருந்தேன். அவனுக்குத் தெரியாதே... என்றெல்லாம் எண்ணிவிட்டு பேசாமல் அவனின் குழல் நாதத்தை இரசித்தேன்.

கொஞ்சத் தூரத்தில் அவனின் மனைவி 'வெள்ளைப் பிரம்போடு' அவனை நோக்கிவந்து கொண்டிருந்தாள். இடுப்பில் ஒரு அழகான குழந்தை 'மொழு..மொழு' என்று எவ்வளவு அழகு. அப்படியே குழந்தையை வாங்கி ஆசைதீர அமுத்தி முத்தமிட வேண்டும்போல.. அவ்வளவு கொள்ளையழகு.

இறைவா! உன் படைப்புக்களின் வினோதம்...! உலகம் எவ்வாறு ஆக்கப்பட்டிருக்கிறது? இந்த உலகத்தில்தான் எத்தனை வித்தியாசங்கள்? இங்கே தங்கள் குழந்தையின் அழகைக்கூட... அதன் சௌந்தர்யத்தைக்கூட அனுபவிக்க- பார்த்து இரசிக்க புண்ணியம் செய்யாத இந்தப் பெற்றோர்கள்.

பின்னர் நானும்தான் பார்க்கிறேன். வருஷத்திற்கொன்றாய் அவர்கள் கைகளில் ஒரு குழந்தை இருக்கும்.

சாதாரணமானவர்களுக்கென்றால்... வைத்தியசாலை, நாள் கணக்கு, தாதிமார், உணவு விடயங்கள், எத்தனை சீர்பாடுகள் தேவைப்படுகின்றன. ஆனால் இவர்கள்...? இப்பொழுது அவர்களுக்கு மூன்று குழந்தைகள். மூன்றும் பெண்கள். கண்ணனும் ராதையும் எதற்குமே கவலைப்படுபவர்களாக இல்லை. எனக்குத் தோன்றவுமில்லை.

அன்று காலை நான் கண்ட காட்சி என்னை அப்படியே மெய் சிலிர்க்க வைத்துவிட்டது. மனம் இறைவனைப் புகழ்ந்து கொண்டது. கண்ணனின் மூத்த குழந்தை மேகலா அப்பாவின் கையைப் பிடித்து முன்னால் வழிகாட்டிச் செல்ல, ஒரு குழந்தையை தாயும் மற்ற குழந்தையை தந்தையுமாகச் சுமந்து செல்லும் காட்சி. இன்னும் என்னை நெகிழ்விக்கிறது. இறைவனாகப் பார்த்து ராதையை கண்ணன் பக்கம் வரச் செய்து, திருமணம் என்ற பந்தத்தை ஏற்படுத்தி, அந்த இரண்டு அந்தகர்களுக்கும் வழிகாட்டிகளாக அந்தக் குழந்தைகளை ஆக்கி...

தேவச் செயல்களுக்கு விளக்கம் கற்பிக்க என்னால் முடியுமா என்ன? "மானிடன் ஒரு இயந்திரம். அதனை இயக்குபவன் இறைவன்." என்ற பகவத் கீதையின் சுலோகம் எவ்வளவு தத்துவார்த்தமானது?

அந்த ஆலமரத்தின் நிழல்கூட எனக்கு இப்போது புதிதானதாகவும் குளிர்வானதாகவும் ஸ்பரிஸித்தது. எங்கேயோ இருந்து கண்ணதாசன் சொல்லிக்கொண்டிருந்தான்:

"எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற் செல்லும். அழுதாலும் தொழுதாலும் அதில் ஒரெழுத்தும் மாறாதே..."

நான் நடந்து கொண்டிருந்தேன். என் சிந்தனைகள் எனக்கு முன்னால்..போய்க் கொண்டிருக்க.....! ■

---

# ஏதோ மோகம்.....

-எம். சுரேஷ்-

சிறுகதை

பச்சையாகச் சொன்னால் என் உடலைக்கூட ரசிக்கத் தெரியாத — ஒரு — வியாபாரி அவன்!



கூட்டிக் கழித்துப் பார்த்தால் வாழ்க்கை பூச்சியம்தான்...... இந்த விசயத்தில் எனது நண்பிகளைக்கூட நான் குறை சொல்லமாட்டேன்.... ஆகக் குறைந்தது கௌரியோ, ஜெயாவோ சொன்னவற்றைக் கூட நான் ஒருபோதும் கேட்டதில்லை. இது எனக்கு நானே இட்டுக்கொண்ட சாபம். அல்லது என் பெற்றோர்கள் தமது குறுகிய சம்பிரதாய வழக்கங்களில் இருந்து விடுபட முடியாமல் சொந்த-பந்தம், ஊர் சனத்தின் பேச்சுக்கு பயந்து எனது வாழ்க்கையை குழிதோண்டிப் புதைத்திருக்கலாம்... ஆனால் அவர்களும் என்னை வற்புறுத்தியதாக ஞாபகமில்லை. நானும் சில விசயங்களை சொல்லாமலும், எதிர்த்து நிற்காமலும் இருந்ததன் விளைவு..நரகம்!

அந்த 35 வயதிலும் 18 வயது நினைவுகளை எண்ணி மௌனமாக அழுதாள் வேதா. ஒரு காலத்தில் நிலவே இறங்கி வந்து அவள் இளமைக்கு சாமரம் வீசியபோது, வந்திருப்பது நிலவுதான் என்பதை அவளுக்குப் புரிந்துகொள்ளும் பக்குவம் இருக்கவில்லை.

முதற் பார்வையை சூரியன் பார்த்தால் சூரியனைவிடத் தனித்தன்மையான ஒன்று உலகில் இருக்கும் என்று ஒருத்தி நினைப்பதில் தவறில்லை. ஆனால் சூரியன் எத்தனை என்பது குப்பி விளக்கோடு குடும்பம் நடத்தும் போதுதான் அவளுக்குப் புரிந்தது.

▫▫▫

அது எங்கோ ஒரு ஒதுக்குப் புறமான பெரிய கிராமம் அல்லது சிறிய நகரம். இருபதாம் நூற்றாண்டிலும் சாஸ்திரம், சம்பிரதாயம்,சாதி, இனம், என்று ஏதேதோ பயனற்ற தத்துவம் பேசும் பின்தங்கிய 'மேதைகள்' வாழும் ஒரு குழுமுறையான வாழ்க்கை...

உண்மையில் அவர்களுக்கு வாழ்க்கையின் அர்த்தம் புரிந்திருக்கிறதா? வாழ்க்கை என்றால் என்ன என்று அவர்கள் எப்போதாவது சிந்தித்திருக்கிறார்களா? நவீன யுகத்தில் புத்திசாலித்தனம் நிறைந்த, அதீத ஆற்றல்களோடு கூடிய ஒரு சக்திமிக்க புதிய சந்ததியின் கூட்டிணைப்பின் சிறப்பை புரிந்துகொள்ளும் அளவுக்கு அவர்களுக்கு (கல்வி) அறிவில்லை.

உண்மையாய் சிந்தித்துப் பார்த்தால்... என் பெற்றோர்கள் எதை நோக்காக வைத்து என்னை வளர்த்தார்கள்? தயார்படுத்தினார்கள்?.... தினமும் ஒருவனோடு உறவுகொள்வதற்கும், சமைப்பதற்கும், குழந்தை, குடும்பத்தை பார்ப்பதற்கும்தானே? இல்லையேல் அவர்கள் நிச்சயம் எனக்கு உயர் கல்வியையோ, அல்லது தொழிற் கல்வியையோ பெற்றுத் தந்திருப்பார்களே? விரக்தியாய் சிரித்தாள் வேதா.

▫▫▫

கல்யாணத்தை மாத்திரம் தடல்புடலாக நடத்தினார்கள். ஒளி மிகுந்த மின்குமிழ்கள், சிரித்தபடியே வந்துபோன உறவினர்கள், துள்ளிசைப்பாடல்கள்...எனக்கு சிறப்பான ஒரு எதிர்காலம் இருப்பதைப்போல தோன்றியது... முதலிரவுகூட மிகுந்த இன்பமாகத்தான் இருந்தது. அந்த முதல் இரவில் எனக்கு பெருத்தமான ஒருவன் கிடைத்துவிட்ட மாதிரியும், சாதிக்க முடியாத ஒன்றை நான் சாதித்துவிட்ட மாதிரியும் எண்ணி மகிழ்ந்த நாட்களை எண்ணும்போது குமட்டிக்கொண்டு வந்தது.

கோடிகோடியாய் பணம் வைத்திருந்தாலும் மனதிற்குப் பிடிக்காத ஒருவனுடன் வாழ முடியுமா? பெற்றோரைத் திருப்திப் படுத்துவதற்காக யாரோ ஒருவனைத் திருமணம் செய்யச் சம்மதித்ததன் பயனை இப்போது அவள் அனுபவித்தாள்.

எனது தெரிவு மிகவும் தரமானதாக-சிறப்பானதாகத்தானே இருந்தது... ஆனால் என் பெற்றோருக்கு முன்னால் நான் மௌனம் சாதித்ததால்... எனக்குக் கிடைத்த கணவன் அழகை இரசிக்கத் தெரியாதவன், பச்சையாகச் சொன்னால் என் உடலைக்கூட இரசிக்கத் தெரியாத ஒரு வியாபாரி அவன்.

ஆரம்பத்தில் சொந்தமாக ஒன்றிரண்டு கடைகளும், சில இலட்சங்களும் வைத்திருந்ததால் பெற்றோர் என்னை அவனுக்குத் தாரை வார்த்தனர். இப்போது அவன் மட்டும்தான் மிஞ்சியிருந்தான்!

▫▫▫

முற்றத்துப் பூவரச மரத்திலிருந்து சிந்தும் ஒவ்வொரு மழைத்துளியையும் இரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் வேதா. அந்தத் தனிமை அவளுக்கு இளமைக்கால நிகழ்வுகளை நினைவுபடுத்தி, ஒரு அற்புதமான, மகிழ்ச்சியான எதிர் காலத்தை இழந்துவிட்ட சோகத்தை அதிகரிக்க வைத்தது.

மழையில் நனைந்தபடி ஓடி வந்த கடைசி மகன் வர்மா சாடையாய் நனைந்த சீனிச் சுருளை அவளிடம் நீட்டினான்.

"எத்தினை கிராம் வாங்கினனி?"

"250 கிராம்" ஒரே வார்த்தையில் பதில் வந்தது.

"நான் கெதியாத் தேத்தண்ணி போட்டுத் தாறன் ஓடிப்போய் அப்பாவுக்குக் குடுத்துட்டு வா என்ன?"

சமையலறைக்குள் நுழைந்து சீனிச் சுருளைப் பிரித்து வெறுமையாய்க் கிடந்த சீனி போத்தலுக்குள் போட்டுவிட்டு, பேப்பரில் ஒட்டியிருந்த மீதிச் சீனியைச் சேகரிக்க முயன்றவளின் கண்களை நீர் நிரப்பியது. மனதிற்குள் எத்தனையோ சடுதியான மாற்றங்கள், அவளுக்கு வாய்விட்டுக் கதறி அழவேண்டும்போல் இருந்தது.. அந்தப் பேப்பரை நன்கு உற்றுப் பார்த்தாள்.....

"பேராசிரியர் முரளி கிருஷ்ணா இலண்டன் பயணமானார்." தலையங்கத்தின் கீழ் முரளி கிருஷ்ணாவின் கம்பீரமான போட்டோ.. மெதுவாக அந்தப் போட்டோவை ஒருமுறை தொட்டுப் பார்த்தாள். கைகள் நடுங்கியன. மீண்டும் தொட்டாள். "அழுதாள்... மௌனம், மௌனம், ஒரு அதிகபட்ச மௌனம்....

"அம்மா! தேத்தண்ணி போட்டாச்சே...?"

மகனின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்ட வேதா, முரளி கிருஷ்ணாவின் புகைப்படம் இருந்த பத்திரிகையை சடுதியாக மடித்து மேலாடைக்குள் மறைத்துக்கொண்டாள்!

யார் அந்த முரளி கிருஷ்ணா?...... (மீண்டும் ஒரு முறை தலையங்கத்தைப் பாருங்கள்)

---

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

அவன்: சிரிக்கும்போது காயம் பட்டுடிச்சா எப்படி?

இவன்: விழுந்து விழுந்துல்ல சிரிச்சேன்.

▫▫

நோயாளி: டாக்டர் அடிக்கடி எனக்கு தலை சுத்துது.

டாக்டர்: அப்ப ரொம்ப சௌகரியமாப் போச்சு. உங்க முதுகை நீங்களே பாத்துக்கலாம்.

▫▫



நண்பர்: போஸ்ட்மன் தபால் இல்லைன்னு சொன்னதும் ரொம்ப சந்தோசம்னு சொன்னீங்களே ஏன்?

எழுத்தாளர்: பத்திரிகைக்கு அனுப்பி கதை திரும்பி வரலையேங்கிற மகிழ்ச்சிதான்.

▫▫

நோயாளி: நாலு நாளா இருமல் டாக்டர்.

டாக்டர்: இனிமேல் ஐஸ்கிறீம் சாப்பிடாதீங்க.

நோயாளி: என்னால ஐஸ்கிறீம் சாப்பிடாம இருக்க முடியாது டாக்டர்.

டாக்டர்: அப்போ நல்லா கொதிக்க வச்சு சாப்பிடுங்க.

▫▫

நோயாளி: வலியில உயிரே போயிடும்போல இருக்கு டாக்டர்.

டாக்டர்: அப்போ, ஒப்பரேசன் தேவையில்லையின்னு சொல்லுறீங்களா?

▫▫

ஒருவன்: கீரைக்காரியைக் காதலிச்சியே... கட்டிக்க ஒத்துக்கிட்டாளா?

மற்றவன்: ம்ஹூம். 'மசிய' மாட்டெங்கிறா.

▫▫

பாபு: என்னது! உங்கப்பாவுக்கு பில் கிளின்டனைத் தெரியுமா?

கோபு: ஆமாம். ஆனால் பில் கிளின்டனுக்குத்தான் எங்கப்பாவைத் தெரியாது.

▫▫

ஒருவர்: நீங்க வலது சாரியா, இடது சாரியா?

மற்றவர்: நான் பாதசாரிங்க.

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'மிர்ரர்' பத்திரிகையில் நீண்ட காலங்களுக்கு முன் பிரசுரமான இச்சிறுகதை அப்போதே மொழிபெயர்க்கப்பட்டு, பிரசுரம் மறுக்கப்பட்டு (சிபாரிசு இல்லாத காரணத்தால்) கோப்புகளின் (Files) அடியில் சென்று ஒளிந்துகொண்டுவிட்டது. முரசும்- அதனது வாசகர்களும் என்னை இனம் கண்டுகொண்டபின் அது அச்சு இயந்திரம் ஏறுகிறது. இதனை வங்காள மொழியில் எழுதிய எழுத்தாளரின் பெயரும், ஆங்கில மொழியில் பெயர்த்த எழுத்தாளரின் பெயரும் தொலைந்துபோனது துர் அதிஷ்டமே.

சிறுகதை

# ஒரு சோடி சப்பாத்து

-அஸ்வதி-

கௌஹாவிலிருந்து பிலாஸ்பூருக்குப் புறப்பட்ட புகை வண்டியில் என்னுடன் பிரயாணம் செய்த எழுபது வயது நிரம்பிய அந்தக் கிழவனைப் பார்க்க எனக்கு மிகவும் சந்தேகமாக இருந்தது. மிக மலிந்த பருத்தியில் அழுக்கான 'சேட்'டும் தடித்த துணி ஒன்றில் காற்சட்டையும் அணிந்திருந்தார். இப்படியான மனிதர்கள் முதலாம் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்வது சாதாரணமானதல்ல. இருப்பினும் நான் எதுவும் பேசவில்லை.

எங்களுக்கிடையே இருந்த மௌனத்தை அந்த வயோதிபர் உடைத்தார்.

"நீர் எங்கே இறங்கப் போகிறீர்?"

"பிலாஸ்பூர்" என்றேன்.

"நல்லது. நானும் அங்கேதான் போகின்றேன். நீர் அங்கே என்ன செய்கின்றீர்?"

"நான் அந்தப் பகுதியின் பிரதம மருத்துவ உத்தியோகத்தர்." அவரைப் பார்க்க எனக்கு வெறுப்பாக இருந்தது. எனக்கு நிச்சயமாகத் தெரியும் அவர் பிரயாணம் செய்வதற்கு 'ரிக்கட்' எடுத்திருக்க மாட்டார் என்பது.

சிறிது நேரத்தின்பின்,

"நீர் எவ்வளவு சம்பளம் பெறுகின்றீர்?" என்றார். அவரை ஒரு கண்டிப்பான பார்வை பார்த்தபடி எதுவும் பேசாமல் இருந்தேன். இந்தக் கேள்விக்கு எப்படிப் பதிலளிப்பது? ஒரு அந்நியன் இந்த மாதிரி ஒரு கேள்வியைக் கேட்பாரென நான் எதிர்பார்க்கவேயில்லை.

"பணம் மிக முக்கியமானது என்பது உமக்குத் தெரியும். பணம் இல்லாதுவிட்டால் எல்லாமும் பூஜ்யம். பணமிருந்தால் மற்றையோர் எல்லோரும் உமது அடிமைகள். இல்லாமற் போனாலோ உம்மை யாருமே கணக்கெடுக்க மாட்டார்கள்."

நான் அவரைத் தவிர்க்க எவ்வளவோ முயன்றும் அவர் என்னை விடுவதாயில்லை.

"என்னைப் பாரும். நான் என்னுடைய பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைத்து உயர்ந்த பதவிகளைப் பெற்றுக் கொடுத்தேன். தயிர்க்கட்டிகளையே அதிகமாகச் சாப்பிட்டேன். பருவகாலம் இல்லாத போதுகூட மாம்பழம் சாப்பிட்டேன். என்னால் எவ்வளவு தொகை உண்ண முடியுமோ அவ்வளவு தொகையை என் பிள்ளைகளுக்கும் ஊட்டினேன். அதனாலேயே நான் ஏழையானேன். எனது மகன் என்னைக் கவனிப்பான் என்ற நம்பிக்கையிருந்தது. அதுவும் அற்றுப் போய்விட்டது. இத்தனைக்கும் நான் ஒரு நீதிமன்ற லிகிதராகத்தான் வேலை பார்த்தேன்."

"உமது மகன் என்ன சொன்னான்?"

"இந்தத் தடவை நான் எனது மகனைப் பார்க்கத்தான் போய்க்கொண்டிருக்கிறேன். அவன் எனக்கு ஒரு சதம்கூட அனுப்பாமல் நான் எப்படி வாழ முடியும்? கண் பார்வை கூடச் சரியாகத் தெரியவில்லை. ஒரு டாக்டருக்குக் காட்டுவதாயிருந்தால்கூட எட்டு ரூபா வேண்டும். அதற்கு நான் எங்கே போவது? முன்பெல்லாம் கட்சிக் காரர்களிடமிருந்து காசைக் கறந்தேன். அந்த நாட்கள் மிகவும் வித்தியாசமானவை. இன்றைய கட்சிக்காரரும்கூட மாறி விட்டனர்."

"உமது மகன் என்ன செய்கிறார்? புகையிரதப் பகுதியிலா வேலை?"

"ஆம், ஒரு பணக்காரக் கட்சிக்காரனின் தயவுடன் நான் அவருக்கு அந்த வேலையைப் பெற்றுக்கொடுத்தேன். எனது வயதான காலத்தில் அவன் என்னைக் கவனிப்பான் என்று நம்பியது வீணாகப் போய்விட்டது."

"அவன் ஏன் உமக்குப் பணம் அனுப்புவதில்லை?"

"அவன் எனக்கு அறுபது ரூபா அனுப்பினான். நீங்களே சொல்லுங்கள். இந்த நாட்களில் அறுபது ரூபா போதுமா? அரைலீட்டர் பால் ஒரு ரூபா, அரைக்கிலோ மீன் மூன்றோ, நாலு ரூபா, இரண்டு வாழைப்பழங்கள் ஐம்பது காசு. இது எப்படிப் போதும்?"

"உமக்கு வேறு பிள்ளைகள் இல்லையா?"

"இருக்கின்றார்கள். அனால் அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் ஐக்கியமாகி விட்டனர். இந்த வயதான தந்தையிடம் பணமில்லை என்பதைப் பற்றி அவர்கள் நினைப்பதுமில்லை. எனது கண்பார்வையும் மங்கி கடந்த பத்து வருடங்களாக நான் மிகவும் சிரமப்படுகிறேன். டாக்டருக்குக் கொடுக்க எட்டு ரூபாக்கூட இல்லாத நிலை. ஆஸ்பத்திரிக்குப்போய் காட்டும்படி சொன்னார்கள். நான் ஒரு தர்ம ஆஸ்பத்திரிக்குப் போனால் உங்கள் கௌரவம் என்னவாகும் என அவர்களைக் கேட்டேன்."

"ஒரு ஆஸ்பத்திரிக்குப் போவதில் என்ன தப்பு?"

"ஒரு விவேகமுள்ள மனிதன் முட்டாளைப்போலக் கதைக்கின்றீர்கள். ஆண்பிள்ளைகளைப் பெற்ற நான் ஆஸ்பத்திரிக்குப் போய் என்னிடம் எட்டு ரூபா இல்லையென்றால் வெட்கமில்லையா?"

"அப்படியானால் காசுக்காகத்தான் நீர் பிலாஸ்பூர் போகின்றீர்?"

"டாக்டரைப் பார்க்க எட்டு ரூபா அனுப்பும்படி எனது மகனுக்கு எழுதினேன். அவன் என்ன எழுதினான் தெரியுமா? இல்லையில்லை. நீங்கள் அதைக்கேட்க வேண்டாம். அது எல்லோருக்கும் கவலையைத்தான் தரும். ஆனால் ஒரு நோக்கமாகத்தான் இப்போது போய்க் கொண்டிருக்கிறேன். உன்னை சிறு வயது முதலே கண்ணும் கருத்துமாகப் பார்த்து வந்தேன். உணவு தந்தேன், உடை தந்தேன். இவை பெறுமதியானவையில்லையா? நான் குருடனாக இருப்பதையே நீ விரும்புகிறாயா? என்று கேட்கப் போகிறேன்."

"நீர் எட்டு ரூபாவிற்காக எவ்வளவு ரூபா புகைவண்டிக்குச் செய்திருக்கின்றீர். பார்த்தீரா?"

"நான் பயணச் சீட்டு எடுத்து எனது காசை விரயமாக்கியதேயில்லை" என்றுவிட்டு மிகவும் உற்சாகமாகச் சிரித்தார். எனக்கு உடலெல்லாம் ஏதோ ஊர்ந்தது. வண்டி நின்றவுடன் அவரைப் பிடித்து போலிசில் ஒப்படைக்கலாமா என்று எண்ணத் தோன்றியது. ஆனால் எனது இரக்க சுபாவம் அப்படிச் செய்ய விடவில்லை. பாவம். பிள்ளைகளைக் கஷ்ரப்பட்டு ஆளாக்கிய ஒருவருக்கு இந்த நிலமையா?

"ஆனால் பெரியவரே, பரிசோதகர் வந்தால் உமக்குப் பெரிய தொல்லையாக இருக்குமே? உம்மை வண்டியிலிருந்து இறங்கச் சொல்லலாம்" என்றேன்.

"என்னை இறக்கிவிட்டால் நான் அடுத்த வண்டியில வந்து சேருவேன்."



"பரிசோதகர் உமது காசு எல்லாவற்றையும் எடுத்துப் போனால் என்ன செய்வீர்?"

"நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் பணம் வைத்திருப்பதில்லை. என்னை நிர்வாணமாக்கினால்கூட அவர்களால் ஒற்றைச் சதத்தைத்தானும் என்னிடமிருந்து எடுக்க முடியாது. இருந்தால்தானே எடுக்க முடியும்?"

"ஆனால் பிரயாணத்தின்போது உமக்குச் சாப்பாட்டிற்குக் காசு தேவைப்படுமே?"

ஒரு சின்னத் துணிப் பொதியைத் தூக்கிக் காட்டி, "என்னிடம் சாப்பாடு இருக்கிறது" என்றார்.

"அதற்குள்ளே என்ன இருக்கிறது?"

"இதற்குள்ளே பத்து பதினைந்து சதம் பெறுமதியான றொட்டித் துண்டுகளும் சில மிளகாய்களும் உண்டு. றொட்டி வயிற்றுக்கு நல்லது. எனக்கு வயதானபடியால் நல்ல சாப்பாடுகள் ஜீரணமாகாது. நான் இளமையாக இருக்கும்போதே அவையெல்லாவற்றையும் அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டுவிட்டேன்." எனது பொருட்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, நான் சாப்பிட்டுவிட்டு வருவதற்காகச் சென்றேன்.

திரும்பி வந்தபோது அவர் றொட்டியும் மிளகாயும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

"சாப்பிட்டு முடிந்ததா?" என்றார்.

சொன்னேன்.

"சாப்பாட்டிற்காக எவ்வளவு கொடுத்தீர்?"

"மூன்று ரூபா ஐம்பது சதம்."

"இப்படிப் பணம் வசூலித்து அவர்கள் என்னை ஏமாற்ற முடியாது."

நேரம் போய்க்கொண்டிருந்தது. நான் படுப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தேன். அவரும் மேலே ஏறிப் படுத்துவிட்டார். அவரிடம் பெட்டி, படுக்கை எதுவும் இருக்கவில்லை. சாப்பாட்டுப் பொதியைத் தலையில் வைத்துப் படுத்து விட்டார். சப்பாத்தைக்கூட கழற்றவில்லை.

"நீர் சப்பாத்தோடேயே தூங்குவீரா?"

"நான் இந்தச் சப்பாத்துக்களைக் கழற்றமாட்டேன். இவற்றைப் பதினெட்டு ரூபாய் கொடுத்துச் செய்வித்தேன்."

நான் அவருடைய சப்பாத்தைப் பார்த்தேன். அவை புதியனவாகவே இருந்தன. எட்டு ரூபாவிற்காகப் பிரயாணச் சீட்டு எடுக்காத ஒருவரால், பதினெட்டு ரூபாய் கொடுத்து ஒரு சோடி சப்பாத்து எப்படிச் செய்ய முடியும்? என்பதை நினைக்க அதிசயமாக இருந்தது. ஆவலை அடக்க முடியாமற் கேட்டேன்,

"உமக்கு சப்பாத்து என்றால் அவ்வளவு பிரியமா?"

"சென்ற ஐந்து வருடங்களாக இந்தச் சப்பாத்தைப் பாவித்து வருகிறேன். சாப்பாடு இல்லாதுவிட்டாலும் சப்பாத்து அவசியமான ஒன்று."

நாங்கள் விளக்குகளை அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டோம். 'றைகா' என்ற இடம் வந்ததும் நான் விழித்துக் கொண்டேன். அந்தப் பெரியவர் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

"நீர் எழுந்துவிட்டீரா?" என்றேன்.

எனது கேள்வியில் எந்தவித அக்கறையும் இல்லாமல் "அடுத்த புகையிரத ஸ்தானம் 'பிலாஸ்பூர்' தானே" என்று கேட்டார். நான் எனது, படுக்கையைச் சுற்றிக்கொண்டு இறங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன். அந்தப் பெரியவர் மிகவும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டார்.

"பிலாஸ்பூரில் நிறையப் பரிசோதகர்கள் நிற்பார்களா?"

"ஆமாம்...நீர் மிகவும் கவனமாக இரும்."

"வண்டி நிற்பதற்கு முன்பாகவே நான் இறங்கிவிடுவேன்." அடுத்த நிமிடம் அவர் கதவைத் திறந்து பாய்வதற்கு ஆயத்தமாக இருந்தார். வண்டி நிற்பதற்கு முன்பாகவே 'பிளாட் பார'த்தில் குதித்தார்.

'பிளாட்பார'த்தில் ஒரு கூட்டம் காணப்பட்டது.

நான் இறங்கிப் பார்த்தபோது 'பிளாட்பார'த்துக்கும் தண்டவாளத்துக்குமிடையில் சிக்குப்பட்டுக்கொண்டிருந்த அந்தப் பெரியவரை இழுத்து எடுக்கச் சிலர் பெரும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தனர். அவருடைய கால்கள் இரண்டும் முழங்காலோடு துண்டாடப்பட்டிருந்தன. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஆயத்தப் படுத்தியபோது... "எனது கால்கள்.. எனது கால்கள்...." எனக் கத்தியபடி இருந்தார்.

அவருக்கு சத்திர சிகிச்சை செய்து முடிக்கப்பட்டது. அரை மயக்கத்திலிருந்த அவர், "எனது கால்கள் எங்கே.... எங்கே" என்று புலம்பினார். அவர் பூரணமான மயக்க நிலைக்குச் செல்ல நான் ஒரு ஊசி போட்டேன். இந்தச் சம்பவத்தைக் கேட்டு அவருடைய மகன் வந்தான். உன்னால்தான் இவ்வளவும் நடந்தது என அவனைத் திட்டினேன். அவன் எந்தவிதமான எதிர்ப்புமில்லாமல் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான். அடுத்த நாள் மயக்கம் தெளிந்தவுடன், அவர் தனது கால்கள் எங்கே என்றுதான் கேட்டார்.

"காலைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நீர் தப்பியதே பெரிய காரியம்" என்றேன்.

"என்னுடைய காலைக் கொண்டு வாருங்கள் டாக்டர்" என்று கத்தினார்.

"உம்முடைய கால்கள் பத்திரமாக உள்ளன. நீர் சுகமடைந்ததும் உம்மிடம் தருகிறேன்."

"உம்முடைய தகப்பனார் உடைந்து போன கால்களில் ஏன் இவ்வளவு கவனமாக இருக்கிறார்?" என அவருடைய மகனைக் கேட்டேன்.

அவன் எதுவும் பேசவில்லை.

பெரியவர் சிறிது குணமடைந்திருந்தார். ஆனால் அவர் தனது காலைப்பற்றிக் கேட்க மறக்கவில்லை. காலைப்பற்றியே விசாரித்துக்கொண்டிருந்தார். டாக்டர்கள், தாதிகள், பணியாளர்கள் எல்லோரையும் அதைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருந்தார். நான் அவரைப் பார்க்கப் போகும் போதெல்லாம் "எனது காலைத் தரமாட்டீர்களா?" என்பார்.

"அவற்றைப்பற்றி விசாரித்து உமது காலைப் பெற்றுத் தருகிறேன்" என்று அவரைச் சமாதானப் படுத்துவதற்காகச் சொன்னேன். அவர் இப்படி விசாரிப்பது சப்பாத்துக்களின் மேலுள்ள அக்கறையில் தான் என்பது எனக்குப்புரிந்தது. அதற்காகத்தான் அவர் பதினெட்டு ரூபா செலவு செய்திருக்கிறாரே.

அன்று மாலை அந்தக் கால்களைப் பற்றி விசாரித்தபோது, அவை சப்பாத்துக்களோடு சேர்த்து எரிக்கப்பட்ட விபரம் கிடைத்தது. நான் ஆஸ்பத்திரிக்குப் போனேன்.

"என்னுடைய கால்களைப்பற்றி விசாரிப்பதாகச் சொன்னீர்களே, என்ன வாயிற்று?"

"அந்தக் கால்களை வைத்து நீர் என்ன செய்யமுடியும்? உமக்கு மரக் கால்கள் பொருத்தினால் நல்லது." மிகவும் ஏமாற்றமடைந்தவராகக் காணப்பட்டார்.

"அந்தச் சப்பாத்துக்களுக்கு என்ன நடந்தது?"

"சப்பாத்தையும் கால்களையும் எரித்துவிட்டார்கள்."

அவருடைய முழு உடலும் துடித்தது.

"சப்பாத்துக்களினுள் நான் காசு வைத்திருந்தேன் டாக்டர்."

"என்ன?"

"காசு வைப்பதற்கென்றே நான் செய்வித்த சப்பாத்துக்கள் அவை."

"எவ்வளவு காசு இருந்தது?"

"ஐம்பத்துமூன்று ஆயிரம் ரூபா" சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவர் சுயநினைவை இழந்தார். நான் சிகிச்சைக்கான ஏற்பாடுகளைச் செய்தேன். இழந்து போன கால்களைவிட காசுதான் அவருக்குப் பெரிதாக இருந்திருக்கிறது.

அன்றே அவர் இறந்துவிட்டார். ●

# நட்பு

திருமதி. கிரேஸ் தங்கராசா

"சே...என்ன இன்னும் இரயிலக் காணல்ல. நேரம் பத்து மணியாச்சே" புகையிரதத்தின் வருகை தாமதமானது கண்டு மதனின் மனம் சஞ்சலப்பட்டது. இவ்வாறு மதனது அவசரத்திற்குக் காரணம் அவனது அன்புக்குரிய சீத்தாவின் வருகைதான். மதன் சீத்தா ஆகிய இருவரும் நட்பு என்ற அன்புப் பிணைப்பில் ஒன்றுபட்டுப் போனதாலேயே இந்த வேகம்.

சீத்தாவும் தானும் உண்மையான நட்புடன் பழகிய அந்த இனிமையான நாட்களை மனத்திரையில் மீட்டிக்கொண்டிருந்த வேளையில் "ஏம்பா ஏதோ தெரிஞ்ச பையனாச்சே எண்ணு வந்தா இன்னும் ஓ சீத்தா வரவில்லையே?" சலித்துக்கொண்டார்.

ஓட்டோ ட்ரைவர் மாணிக்கம். "நா என்ன பண்ணுற மாணிக்கண்ண ரயில் லேட்டா கிறதுக்கு எதுக்கும் இன்னும் அரை மணி நேரம் பார்த்திட்டுப் போவோம் ப்ளீஸ்..." மாணிக்கத்தைக் கெஞ்சலாய்க் கேட்டுக் கொண்டான்.

நேரம் செல்லச் செல்ல மதனின் பொறுமை கரைந்துகொண்டிருந்தது.

'சீத்தாவாம் சீத்தா இஞ்ச நான் ஒருத்தன் சாப்பாடுகூட இல்லாம காத்துக்கிடக்கிறன். ரயில் இல்லாட்டி பஸ்ஸுல வர்றதுதானே? எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும். எவருக்கும் பொறுமை எண்ணு ஒன்னு இருக்கு.'

எவ்வளவுதான் மனதுக்குள் திட்டித் தீர்த்தாலும் மதனின் இதய வீட்டினுள் இடம் பிடித்துவிட்ட சீத்தாவை கணப்பொழுதுதானும் மறந்துவிட முடியவில்லை. காலங்கள் பல கரைந்து போனாலும் அன்பு மனங்கள் கொண்ட நேசம் விட்டுப் போகுமா? பல வருடங்கள் கழிந்து சீத்தாவைப் பார்க்கும் ஆனந்தத்தில் கோபம் பரிதியைக் கண்ட பனி போன்று மறைந்துவிட்டது.

இருக்கையில் அமர்ந்துகொண்டு அன்றைய தினமுரசு வாரமலர் தாங்கிவந்த புதுமைகளையும், அறிவியல் உண்மைகளையும் சுவாரசியமாகப் படித்துக்கொண்டிருந்தான். "தம்பி மதன் ரயில் வருதப்பா" என்று கூறிய ஓட்டோ ட்ரைவர் அவனது கவனத்தைத் திசைதிருப்பினார். "ஆமா ரயில் வருது சீத்தா இதுலதான்..." என்று கூறிமுடிக்காமல் துள்ளி எழுந்தான். 'ஓ சீத்தாவ நான்சுமந்துவர்றன்.' என்றுகூறுவது போல ஒலி எழுப்பிய வண்ணம் புகையிரதம் வந்துகொண்டிருந்தது.

தரிப்பிடத்தில் வேகத்தைக் குறைத்துக் கொண்ட புகையிரதம் பயணிகளைப் பிரசவித்துகொண்டிருந்தது. மதன் தனது சீத்தாவை நெரிசலுக்குள் தேடிக்கொண்டிருக்க, "ஏய் மதன்" என்ற குரல் கேட்டுத் திரும்பினான். அங்கே...அங்கே... சீத்தா! மதனது சீத்தா! எதிர்பார்த்து துடிக்க வைத்த சீத்தா!

"ஹாய் சீத்தா எப்படி இருக்கே?" கேட்டபடியே சீத்தாவைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

சீதாவுக்கு வெட்கமாக இருந்தது.

கூட்டத்தில் சிலர் அவர்களை வேடிக்கை பார்த்தனர்.

"ம்... மதன் விடு எல்லோரும் நம்மையே பார்க்கிறாங்க மதன் என்ற பேருக்கு ஏத்தாப் போலவே மன்மதனா இருக்கே விடுப்பா."

மதனின் இறுக்கமான அணைப்பில் இருந்து விடுபட்டுக்கொண்டு "ஏய் நம்ம கிளம்பலாம்தானே? என்று கேட்க, "சரி கிளம்பலாம்" என்றான் மதன். மூவரையும் தன்னுள் போட்டுக்கொண்டு ஓட்டோ விரைந்தது.

பிரதான வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்த ஓட்டோ மதனின் வீடு வந்ததும் தனது மூச்சை நிறுத்திக்கொண்டது.



"சீத்தா இது தான் ஐயாவோட அரண்மனை. இறங்கி வலது கால எடுத்து வச்சி வா. உனது வரவு நல்வரவாக அமையட்டும்." மதன் கூறிக்கொண்டு ஓட்டோ ட்ரைவரிடம் பயணத்திற்கான பணத்தினைக் கொடுக்க மீண்டும் ஓட்டோ உயிர்பெற்று அவ்விடத்தை விட்டு நகர்ந்தது.

மதனுடன் சீத்தா வருவதைப் பார்த்து விட்டாள் அவனது அம்மா."இது யாரு ஒங்கூட....." என ஒன்றும் புரியதவளாய் வினவ, "இதாம்மா நம்ம சீத்தா நம்ம பழைய வீட்டிற்கு வந்து சின்ன வயதில என்கூட வந்து விளையாடுற சீத்தா" என தனது தாய்க்கு அறிமுகப்படுத்தினான்.

"ஆமா இப்போதான் எனக்கு ஞாபகமே வருதப்பா முன்பு ஒரே கிளாஸில படிச்ச சீத்தாராமன் தானே இது! அட..இப்படி நல்லா வளர்ந்திட்டதால அடையாளமே தெரியலப்பா; எப்ப பார்த்தாலும் மதனுக்கு ஒரே ஓ நெனப்புத்தான். ம்...பத்து வருசங்களுக்கு அப்புறம் நண்பர்கள் சேர்ந்திருக்கீங்க. ஏம்பா சீத்தாராமா ஒரு மாசமாவது எங்க கூடவே தங்கிட்டுப்போவேன்" என்றாள் மதனின் அம்மா.

"அம்மா ஒரு மாசமென்ன நாள் பூராவும் நான் உங்க வீட்டிலேயே தங்கப் போறேன் அதோட 'மை டியர் ப்றண்ட்' மதனோட பொழுது போறதே தெரியாது அவ்வளவு அறுவ" என்றான் சுருக்கமாக சீத்தா என்று அழைக்கப்பட்ட சீத்தாராமன்.

"சரி ரெண்டுபேரும் போய் குளிச்சிட்டு வாங்க சாப்பிடலாம்" என்றாள் அம்மா.



# இலக்கிய நயம்

## பார்த்துவிட்டால் பறந்துவிடும்

தருவது ரசிகன்

கன்னிமாடத்திலே இருள் எட்டிப்பார்க்கத் தொடங்கியிருந்தது.

சூரியன் இல்லாத துணிச்சலில் வான்நிலவு தன் உலாவை ஆரம்பிக்க ஆயத்தம் செய்துகொண்டிருந்தது.

செவ்வந்தியும் தன் அறையில் யாருமில்லாத துணிச்சலில் ஆடை கலைந்திருந்ததையும் அலட்சியம் செய்துவிட்டு பஞ்சணையில் மல்லாந்து கிடந்தாள்.

மேலே கூரையில் தொங்கிய அழகான வேலைப்பாடுகளுடன்கூடிய சரவிளக்குகள் மெல்லிய ஒளி தந்துகொண்டிருந்தன.

அந்த விளக்குகளை செவ்வந்தியின் விழிகள் நோக்கிக்கொண்டிருந்தாலும்கூட அவற்றின் அழகையோ, அவை சிந்தும் ஒளியையோ இரசிக்கக்கூடிய சிந்தையை செவ்வந்தி இழந்திருந்தாள்.

அவள் சிந்தை சாளுக்கிய நாட்டின் தூதனாக வந்து தங்கியிருக்கும் விஜயகேசியின் மீது விழுந்து கிடந்தது.

தூதனாக வந்து எண்ணி ஒருவாரம் கூட கடந்துவிடவில்லை. அதற்குள் இளவரசி செவ்வந்தியின் இதயக் கோட்டையை ஆக்கிரமித்துக்கொண்டான் விஜயகேசி.

சுவாசிக்கக்கூட மறக்கலாம். மூச்சை நிறுத்திவிடக்கூட சம்மதிக்கலாம். ஆனால் விஜயகேசியை மறந்திருக்க முடியாது. விஜயகேசியின் நினைவைத் துறந்திருக்க இயலாது.

இப்போது விஜயகேசியின் நினைவு தான் செவ்வந்திக்கு.

அன்றுமாலை செவ்வந்தியின் தந்தையார் விக்கிரமனைக் காண வந்திருந்தான் விஜயகேசி.

மன்னர் தன் மகளை அழைத்தார்.

"செவ்வந்தி இங்கே வா அம்மா. நம் தூதருக்கு பழரசம் கொண்டுவந்து கொடு."

செவ்வந்திக்கு இறக்கை முளைத்தது போன்ற மகிழ்ச்சி.

தந்தையின் முன்பாக தன் மனதுக்கு பிடித்தவனுக்கு பழரசம் பரிமாறும் பாக்கியம் நினைக்க வெல்லச்சுவையாக மனதுக்குள் இனிமை சுரந்தது.

தங்கக் குவளையில் பழரசம் கொண்டு வந்து நீட்டினாள். கரங்கள் சற்றே நடுங்கிக்கொண்டன.

மன்னருக்கும் தெரியாமல், மன்னருக்கு அருகேயிருந்த தன் தாயார் பட்டத்து ராணிக்கும் தெரியாமல் செவ்வந்தி ஒரு குறும்பு செய்தாள்.

பழரச குவளையை நீட்டும்போது, அதனை விஜயகேசி வாங்கும் தருணத்தில் மெல்ல விரல்களால் விஷமம் செய்தாள். நீளமாக வளர்த்து மருதாணி போட்டிருந்த நகம் அவன் விரல்களில் ஒன்றில் ஆழமாய் கீறிவிட்டது. எதுவும் நடக்காதது போல விஜயகேசி குவளையை வாங்கிக்கொண்டான். அவள் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

மாலையில் நடந்ததை இப்போது மனக் கண்ணில் கொண்டுவந்து நிறுத்திப் பார்த்தாள் செவ்வந்தி.

"ஏதோ முன்பின் தெரியாதவர்போல அன்றோ நடந்துகொண்டார்!

'மன்னர் முன்பாக மரியாதையாக நடந்துகொள்ள நினைத்திருந்தாலும் வாய் திறந்து ஒரு நன்றியாவது சொல்லியிருக்க வேண்டாமா?

'சரி-நன்றிதான் சொல்லவேண்டாம். நமக்குள் எதற்கு நன்றி? இணைபிரியாத உள்ளங்களுக்குள் அது எதற்கு குறுக்கே என்று நினைத்திருக்கலாம்.

'போகட்டும். ஒரு புன்சிரிப்பையாவது உதிர்த்துத் தொலைத்திருக்கலாம் அல்லவோ.

'கல் நெஞ்சக்காரர்! தோழிகள் என்னைப் பார்த்து 'கொல்' என்று நகைக்க வைத்து விட்டார்.'

"என்னடி செவ்வந்தி. உன்னவர் கண்ணசைத்துக்கூட உன் முகம் பாராது இருந்துவிட்டாரடி."

இது ஒருத்தி.

"பாவமடி செவ்வந்தி. பழரசம் கொடுத்ததற்கு அந்த கட்டழகர் ஒரு நன்றிகூட கொடுக்காமல் அன்றோ அனுப்பிவிட்டார்."

இது மற்றொருத்தி.

"போங்களடி. இதழ் ரசம் இருக்க, அதைப் பருகத் தராமல் பழரசம் தருகிறாயோ. பாவியடி நீ என்றுதான் அந்தக் கட்டழகர் கோபத்தால் சுட்டிருப்பார்."

என்று கூறி நகைத்தாள் இன்னொருத்தி.

"பைத்தியம். பைத்தியம். இதுவரை எங்கள் செவ்வந்தியின் இதழ்ரச தித்திப்பை பருகி மயங்கி, வெல்லச் சுவை பெரிதோ, கள்ளியிவள் கொவ்வை இதழ் சுவை பெரிதோ என்று வியக்காமலோ இருந்திருப்பார் அந்த துடுக்கான தூதர்?"

செவ்வந்திக்கு பொறுக்கவில்லை. எரிந்து விழுந்தாள்.

தோழிகள் நகைத்தபடி ஓடி மறைந்து கொண்டனர்.

■

எழுந்துவரும் சூரியன்போல ஒளி சிந்தும் கண்களும், நீண்ட கைகளும், உயர்ந்து விரிந்த தோள்களுமாய் விஜயகேசி செவ்வந்தியைத் தேடி வந்தான்.

கண் நிறைய அவன் கம்பீரம் இரசித்த திருப்தியிலும், தன் முகம் நோக்கி விஜயகேசி சிந்திய கபடமற்ற கம்பீர புன்னகையிலும் நேற்றிரவு அவன்மீதுகொண்ட கோப நினைவு தணலில் இட்ட மெழுகாகியது.

நந்தவனப் படிக்கட்டில் தன் அருகே அவன் அமர நகர்ந்து இடம்கொடுத்தாள்.

ஆனால் அமரவில்லை விஜயகேசி. அவளை பாதவிரல் தொடங்கி உச்சி ரேகை வரை விழியை எருதுகளாக்கி உழுதுகொண்டிருந்தான். விழிதான் எருது. பார்வைதான் கலப்பை. பருவ மேனியின் எழில்கள்தான் நிலம்.

செவ்வந்திக்கு வெட்கமாக இருந்தது.

"பார்த்தது போதும். பக்கத்தில் அமருங்கள்" என்றாள்.

உடனே நகைத்தான் விஜயகேசி. செவ்வந்திக்கு புரியவில்லை.

"எதற்கு இந்த நகைப்பு?"

சிறிது சினம் கலந்து கேள்வி போட்டாள். விஜயகேசி புன்னகையை உதட்டில் வைத்துக்கொண்டே பதில் சொன்னான்.

"பூவின் அழைப்பு வண்டுக்கு பூரிப்பு! வந்து அமர் என்று பூ இழுக்க மாட்டேன் போ என்று சொன்ன வண்டை கண்டதுண்டோ பூமியில் எங்காவது? செவ்வந்தி உன் அழைப்புத் தந்த உவகையால் வந்த நகைப்பு மீது நீ எதற்கு கோபக்கணை தொடுக்க வேண்டும்?"

"சேச்சே..."

கரம் எடுத்து முகம் மூடினாள், மோகம் பொழியும் கோல உருவத்தாள் செவ்வந்தி.

முகம் மூடிய அவள் கைகள் தொட்டு விலக்கினான் விஜயகேசி. இப்போதும் அமரவில்லை.

அவன் நின்றுகொண்டிருக்க தான் மட்டுமே அமர்ந்திருப்பதால் சங்கடப்பட்டு,

"அமரு.."

சொல்லிமுடிக்காமல் உதட்டை கடித்துக் கொண்டு,

"இருங்கள்."

மாற்றிச் சொன்னபோதும் விஜயகேசி விடுவதாக இல்லை.

"எங்கே? இங்கே இருக்க உண்டோ சொல் அனுமதி?"

என்று கேட்டு செவ்வந்தியின் வலது முழங்காலுக்கு மேலே இடது கரம் வைத்து கேட்டான்.

கரம்பட்ட இடம் குளிர்ந்தது. விஜயகேசியின் கரம் அங்கே மேலும் அழுத்த, அழுத்திய இடம் மட்டுமல்ல அவள் முகமும் சிவந்தது.

அவன் கையின் மேலே தன் கரத்தை வைத்து தடுத்தபடி,

"சாளுக்கியர்கள் காதல் கலையிலும் கரை கண்டவர்கள் என்று கேள்விப்பட்டது சரிதான் போலிருக்கிறது."

என்றாள் அவனை விழிகளால் விழுங்கியபடி.

"கரைகாண வேண்டுமானால் கடலில் இறங்கத்தானே வேண்டும். இப்படி அழகான கடல் கிடைத்தால் கரைகாணும் கட்டற்ற வேகம் வரத்தானே செய்யும்."

அவள் தோள்களின் இருபுறமும் தன் கரங்கள் வைத்தபடி அவளின் கீழ் தாடையில் இதமாய் முத்தமிட்டான். தோளில் தொடங்கி நுனிவிரல்வரை இருபுறமும் ஒரே நேரத்தில் வருடி இறங்கி வந்த அவன் கரங்கள் அவள் கரங்களின் விரல்களோடு கோர்த்து கலந்து கொண்டன. விரல்களால் விரல்களை இறுக்கிவிட்டு விஜயகேசி மயக்கமாய் சிரித்தான்.

"என்ன வலிமை?' என்ன சாகசம்?! பொல்லாத குறும்பர். கொல்லாமல் அன்றோ கொல்லுகிறார்!"

செவ்வந்தி மனதில் விஜயகேசிக்கு பாராட்டுப் பத்திரம் வரைந்தாள்.

நேற்றிரவு இவர்மீது தவறு கண்ட மனது இப்போது இவரை நேரில் கண்ட போது மட்டும் வளைகிறது, குழைகிறது. காணதபோது.... குற்ற ஓலை எழுதுகிறது. நேரில் இவரைக் கண்டுவிட்டால் குறும்பு இரசித்து பாராட்டைக் கொட்டுகிறது. என்னே விந்தை..!

வியப்பு செவ்வந்திக்கு மட்டுமல்ல. உங்களுக்கும் வருமன்றோ?

அதற்குத்தான் நம் திருவள்ளுவர் இருக்கிறார். வியப்புக்கு விளக்கம் சொல்வார்.

**"காணுங்கால் காணேன் தவறாய காணக்கால் காணேன் தவறல் லவை."**

குறள்- 1286, அதிகாரம்-129



## குறுக்கெழுத்துப் போட்டி இல-56

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | ■ | 4 |
| | | ■ | 5 | | 6 | |
| | | ■ | | ■ | | |
| ■ | | ■ | | ■ | | |
| 7 | ■ | 8 | | | ■ | 9 |
| 10 | 11 | | ■ | ■ | 12 | |
| | | ■ | 13 | | | |

**இடமிருந்து வலம்**

1. சமீபத்தில் இது இந்தியாவில் நடந்தபோது உலகமே அதிர்ச்சியில் ஆழ்ந்தது.
5. சிலரால் இது விரும்பியும் உண்ணப் படும்.
8. இதை மறந்தவர்களுக்கு உய்வில்லை என்கிறார் திருவள்ளுவர்.
10. சீதையின் புத்திரன்
12. இங்கே இப்போதும் கம்யூனிஸ்ட் கட்சிதான் ஆட்சியில் இருக்கிறது.
13. கண்ணனை இப்படியும் அழைப்பதுண்டு.

**மேலிருந்து கீழ்**

1. இந்துமத அர்ச்சகர்கள் அணிவது.
2. காரியம் என்றும் சொல்லலாம்.
3. இருளைத் துரத்துவதில் வல்லவன்.
4. முற்காலத்தில் ஆண்கள்கூட இதை வைத்துக்கொண்டதுண்டு.
6. விலைவாசி போல் இதுவும் ஏறி வருகிறது.
7. இது மடியைக் காலியாக்கி விடும்.
9. பொன்னான நேரத்திற்குள் இதுவும் அடக்கம்.
11. இதுவும் உடலை வதைக்கும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 09.07.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-56
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-54க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மூ | ல | த | ன | ம் | ■ | 2 சா |
| க் | ■ | 3 ர | 4 க | சி | ய | ம் |
| 5 கு | டு | ம் | ப | ம் | ■ | ப |
| த் | ■ | ■ | டி | ■ | 6 வே | ல் |
| 7 தி | 8 பெ | த் | ■ | 9 அ | ■ | ■ |
| ■ | ரு | ■ | 10 கா | ல் | ந | டை |
| 11 அ | மை | தி | ■ | 12 வா | யா | டி |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.54இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி.பி.விஜேஸ்வரி ஹட்டன்.
2. வை.சத்தியேந்திரா மொரட்டுவ.
3. கே.ருத்திரா நாவலப்பிட்டி.
4. செல்வி.ச.விஜயகௌரி தம்பிலுவில்-01.
5. ஜே.நூர்தீன் கொழும்பு-06.
6. நா.சீனித்தம்பி களுவாஞ்சிக்குடி.
7. சி.வேலு ஹட்டன்.
8. ப.சசிகரன் மட்டக்களப்பு.
9. திருமதி.பி.மீரா ஹட்டன்.
10. ஆர்.சரவணன் நைனாதீவு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# கும்-கும் திட்டுக்கள்

**அடுத்தவர்மீது கண்டனம் தொடுக்கும்போது சுவாரசியமாக-சுவையாக தொடுக்கலாமா? தொடுக்கலாம். இதோ சில சுவையான திட்டுக்கள்:**

அவனைப்பற்றி என்னைவிட உயர்ந்த கருத்தை வேறு யாரும் கொண்டிருக்க முடியாது. அவன் ஒரு கேவலமான மிருகம் என்பதுதான் என் கருத்து.

[redacted] (டபிள்யூ.எஸ்.கில்டர்ங்)

••

பேசிக்கொண்டிருந்தபோது அர்த்தமில்லாமல் சிரித்துக்கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து டாக்டர் ஜோன்சன் சொன்னது இது; "நீங்கள் சிரிப்பதைப் பார்த்தால் நான் பேசியதில் ஏதோ ஒன்று உங்களுக்கு புரிந்துவிட்டது போல் இருக்கிறது. அப்படியானால் அவ்வளவு சராசரித்தனமாகப் பேசியதற்காக இங்குள்ள மற்ற நண்பர்களிடம் நான் மன்னிப்புக் கேட்கவேண்டும்."

[redacted]

••

ஆங்கிலேயர்கள் ஒருபோதும் அடிமையாக இருக்கமாட்டார்கள். அவர்கள் எதையெல்லாம் செய்யலாம் என்று மற்றவர்கள் அனுமதிக்கிறார்களோ அதையெல்லாம் வெகு சுதந்திரமாகச் செய்வார்கள்.


[redacted] (பெர்னாட்ஷா.)

"என்மீது நீ கைவைத்தமை உன் அம்மாவுக்கு தெரிந்தால் குலைத்துவிட்டு உன்காதைக் கடிக்கப் போவது நிச்சயம்."

-யாரோ-



"நான் பனங்காட்டு நரி. என்னோடு மோதாதே" என்றவனைப் பார்த்து ஒரு புத்திசாலி கேட்டது இது; "ஒத்துக் கொள்கிறேன். ஆனாலும் ஒரு சந்தேகம். நரி உன் வீட்டுக்கு வந்ததா அல்லது உன் தாயார் காட்டுக்குப் போனார்களா?"



நடிகைகளின் திருமணங்கள் முறிவது ஏன்?

ஆர்.சௌந்தரநேசன்-ஆரையம்பதி-மட்டக்களப்பு.

உடல், புகழ், பணம் மூன்றின்மீது மட்டுமே குறிவைத்து நடிகைகளை மணப்பவர்கள் தேவை முடிந்ததும் தூக்கி எறிய நினைப்பதுதான் காரணம். ஆனால் விதி விலக்குகள் இல்லாமல் இல்லை.

□□

தன்னுடைய குற்றங்களை மறைப்பதற்கு பிறரை குறை கூறுபவர்கள் பற்றி?

ம.மு.ரஞ்சன் துரைசிங்கம்-நோட்டன் பிரிட்ஜ்.

திருடன் திருடன் என்று கத்திக்கொண்டு தப்பிக்கொள்ள நினைக்கும் புத்திசாலித் திருடர்கள்.

□□

ரஜினியின் நூறாவது படம் எது?

ஐ.கிஷோர்-கொழும்பு-12.

'ராகவேந்திரா'

அறிஞர்கள்கூட முட்டாள்களாவதுண்டா?

வே.இந்திராணி-ஹட்டன்.

அறிஞர்கள் சிலர்கூட முகஸ்துதியாளர்களால் முட்டாள்களாக்கப்படுவதுண்டு.

□□

தூக்கம் வர மறுக்கிறதே! என்ன செய்யலாம் என்று சொல்லுங்களேன்.

வீ.மணிமாறன்-திருகோணமலை.

தூக்கம் வராவிட்டால் எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. ஆனால் நீங்கள் ஒரு நூறுதரம் தோப்புக்கரணம் போட்டுப் பாருங்கள். உடல் களைக்க உறக்கம் வரும்.

□□

# மகாபாரதம்

அங்கம் 36

இவ்வாரம் (03.07.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** காலமாகிய எனது ஓட்டம் தங்குதடையற்றது. ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் எவரும் ஒன்றிப் போகலாம் அல்லது துறந்தும் விடலாம். இன்பமும் துன்பமும் ஒரு நதியின் இரு கரைகளைப் போன்றது. ஆனால் என்னைப் பொறுத்த வரை அதுவே எனது சாராம்சமல்ல. சகுனியை எடுத்துக் கொண்டால் அவனுடைய வாழ்க்கை ஒரு சூதாட்டம். துரியோதனனையும் தனது சூதாட்டத்தின் பகடையாக சகுனி பயன்படுத்துகிறான். இதனால் தன் நிலையினை அவன் உணர முடியாதிருக்கிறான். அதுமட்டுமல்ல, வேறு எவராலும் அவனை வழி நடத்தவும் முடியாது. சிறுபிள்ளைகளைப் போல், விடாப்பிடியாக வற்புறுத்துவதற்கு இதுதான் தருணம் என்று சகுனி சொன்னால் துரியோதனனும் அவ்வாறே அடம்பிடிப்பான்.

-காட்சி தொடக்கம்-

திருதராட்டிரன் அரண்மனை-துரியோதனன் வருகிறான்.

**துரியோ:** அப்பா! காம்பிலிய நகருக்குச் சென்று பாண்டவர்களை அழைத்துவரும்படி விதுரர் சித்தப்பாவை அனுப்பினீர்களாமே உண்மைதானா அப்பா!

**திருத:** வேறு என்னதான் செய்யமுடியும்? அரக்கு மாளிகை சதி விவகாரம் பற்றி முன்னமே தெரிந்திருந்தால் அப்போதே தடுத்திருப்பேன். அவர்கள் உயிருடன் தான் இருக்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியினை வெளிக்காட்டாமல் என்னால் இருக்க முடியுமா? உன்னையே அனுப்பியிருக்கலாம். ஆனால் நிச்சயம் நீ மறுத்திருப்பாய்.

**துரியோ:** பாண்டவர்களுக்கு இவ்வளவு தூரம் பயப்படுகிறீர்களே! அதுதான் எனக்குப் புரியவில்லை.

**திருத:** நான் பாண்டவர்களுக்குப் பயப்படவில்லை மகனே! நாட்டு மக்களுக்குப் பயப்படவேண்டியிருக்கிறது. உன்னை ஒரு மாவீரன் என்று மக்கள் போற்ற வேண்டும், அஸ்தினாபுர அரியணைக்கு அருகதையுடையவன் நீ என்று மக்கள் ஏற்றிப் போற்றவேண்டும் என்பதுதான் எனது அபிலாசையும் மகனே!

**துரியோ:** அவ்வாறானால், யுதிஷ்டிரன்தான் உங்கள் வாரிசு என்று விதுரரின் தூண்டுதலினால் அன்று அவையில் நீங்கள் ஏன் அறிவிக்க வேண்டும்?

**திருத:** விதுரர் போன்ற அரசியல் ஞானம் பெற்ற எவரும் இன்றைய உலகில் இல்லை மகனே! அவருக்கு மதிப்பளிக்கக் கற்றுக்கொள்! அவருடைய நம்பிக்கையைப் பெற முயற்சி செய். தேவையற்ற வார்த்தை ஜாலம் அவரிடம் கிடையாது. அநாதையான யுதிஷ்டிரனை முடிக்குரிய இளவரசனாக்குவதற்குப் பிரதான காரணம் விதுரரே! ஆனால் யுதிஷ்டிரன் இன்று அநாதையல்ல. பாஞ்சால நாட்டதிபன் துருபதனின் துணையும் துவாரகாபுரி மன்னன் கிருஷ்ணனின் அரவணைப்பும் இன்று அவர்களிடம் உள்ளன. ஆகவே அவர்களை விரோதிக்காமல் அவர்களுக்கு நல்வரவினைக் கூறி வரவேற்பாயாக. சிறுவயதிலிருந்தே அவர்களிடம் குரோதம் கொள்ளாதிருந்திருப்பாயானால் இன்று நிலைமையே வேறவிதமாக இருந்திருக்கும். இராஜதந்திரி எப்போதும் தனது ஆசாபாசங்களையும் கவலைகளையும் அந்தரங்கமாகவே வைத்திருக்க வேண்டியவன்.

**துரியோ:** அப்பா! எவர் வந்தாலும் -கடவுளே தான் வந்தாலும் முடிக்குரிய இளவரசன் நான் என்ற பட்டத்தை நான் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. நிர்ப்பந்தித்தால் தற்கொலை செய்வேன்! இது உறுதி!

**திருத:** துரியோதனா! என் மகனே! அவ்வாறு கூறாதே! பார்வையற்ற உன் பிதா நீ நினைப்பதுபோல் துணையற்றவனாகி விடவில்லை. இன்று நான் அமர்ந்துள்ள அரியணைக்கு அருகதையுடையவன் நீ. உனக்குச் சேர வேண்டியதை உனக்கு எப்படியும் தந்தே தீருவேன். இது சத்தியம். நீ ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். உனது நாக்கு ஒரு குதிரையைப் போன்றது. அதனை அடக்கக் கற்றுக்கொள். குதிரையை நாம் அடக்க வேண்டுமே தவிர நம்மை குதிரை அடக்க அனுமதிக்கலாகாது. அரக்கு மாளிகை விவகாரத்தில் உனக்கும் பங்கு இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள். நானும் அதற்கு உடந்தை என்றும் கருதுவார்கள். அவர்களைத் தூண்டி விடவும் பலர் முன்வருவார்கள். ஆகவே மிகவும் அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும்.

-காட்சி மாற்றம்-

கர்ணன் தன் அரண்மனையில் அமைதியின்றி முன்னும் பின்னும் உலாவுகிறான்.

**காவலன்:** வாழ்க அங்கத்துக்கதிபதியே! தங்களை நாடி இளவரசர் துரியோதனன் வருகிறார்.

**கர்ண:** என்ன! இந்த வேளையிலா.....?

**துரியோ:** ஏன் வரக்கூடாதோ? நான் வேறு எங்குமே இல்லாவிட்டாலும் உன் இதயத்தில் இருப்பேன் என்று கூறப்பட்டதே!

**கர்ண:** உண்மைதான் நண்பா! எனது அன்பும் நானும் உன்னுடனும் உன் ஆட்சியுடனும் என்றும் இணைபிரியாதிருக்கும் என்பதனை மேலும் வலியுறுத்துகிறேன். இதனை என்றும் இழக்கலாகாது.

**துரியோ:** இழப்பதா.....? என் அருமை நண்பனான நீ என் அருகிலிருக்கும் போது ஓரங்குல நிலத்தைத் தானும் எவரும் என்னிடமிருந்து பிரிக்க முடியுமா? அதைவிடு. கடும் கோபமாகக் காணப்படுகிறாயே! நண்பனே இதற்கான காரணம் தான் என்ன?

**கர்ண:** மாமா சகுனியின் மேல்தான் என் ஆத்திரமெல்லாம்.

**துரியோ:** காரணம் என்ன நண்பனே?

**கர்ண:** அவர் செய்த சூழ்ச்சித் திட்டத்தினால் பாண்டவர்களை நேர்முகமாக சந்திக்க முடியாத நிலைக்குள்ளாக்கப்பட்டு விட்டோம். வாரணாவதி சதித் திட்டம் உலகறியாதிருக்கலாம். பாண்டவர்கள் முட்டாள்களல்ல. அவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். இதனையிட்டு அவர்கள் வெளிக்காட்ட மாட்டார்கள். அதேவேளை நீதான் கோழையைப் போல் மாமாவின் திட்டங்களில் தொடர்ந்து ஈடுபடுவாய். நண்பனே! நீயோ கதாயுதம் ஏந்திய மாபெரும் வீரன்! இருப்பினும் மாமாவின் செயற்பாடுகளில் அதிக நம்பிக்கை வைத்து உன்பலத்தையும் வீரத்தையும் இழந்து விடுகிறாயே!

**துரியோ:** நண்பா! உன்னுடன் உரையாடும் போது நீ கூறுவதே சரியெனப்படுகிறது. ஆனால் மாமாவைக் கண்டதும் அவருடைய ஆளுமையினால் ஈர்க்கப்பட்டு செயலிழந்து விடுகிறேன்.

**துச்சாதனன்:** அந்த ஐவரும் தாயாரும் அந்த விபத்திலிருந்து எப்படித் தப்பினார்கள் என்பதையும் அறிந்தாக வேண்டும்.

**துரியோ:** ஆமாம். அங்கு பணியாற்றிய பாதுகாப்புப் படையின் தளபதி மாமாவுக்கு மிக நெருக்கமான-நம்பிக்கைக்குப் பாத்திரவானவனுமாவான்.

**கர்ண:** நம்பிக்கை-அவநம்பிக்கை இரண்டையும் பேதப்படுத்துவது மிகமிக மெல்லிய கோடுதான். அவனும் விலை போயிருக்கலாம் அல்லவா?

**துரியோ:** அவ்வாறிருக்க முடியாது. இலகுவில் விலை போகத்தக்க எவரையும் மாமா எப்பணியிலும் ஈடுபடுத்தமாட்டார். இருப்பினும் தம்பி துச்சாதனனின் கூற்றும் கவனிக்கப்பட வேண்டியதொன்றே!

-காட்சி மாற்றம்-

சகுனியின் அரண்மனை- பாதுகாப்புப் படைத் தலைவன் வருகிறான்.



**சகுனி:** வாரும் அருமை நண்பரே! காந்தார நாட்டிலிருந்து என்னுடன் இங்கு வந்து எனக்குச் சிறந்த சேவை செய்திருக்கிறீர்!

**ப.தலை:** தங்களுக்குச் சேவை செய்வதே எனது பாக்கியம் பிரபு!

**சகுனி:** இருப்பினும் நீர் இங்கு நீண்டகாலம் தங்கி விட்டீர்.

**ப.தலை:** நாளையே காந்தாரம் செல்லட்டுமா மன்னவரே!

**சகுனி:** நாளை வரை ஏன் தாமதிக்க வேண்டும்? இன்றே-இப்போதே போகலாம். ஆனால் காந்தார நாட்டுக்கல்ல......!

**ப.தலை:** தங்கள் சித்தம் எப்படியோ.....!

**சகுனி:** அரக்கு மாளிகையில் கிடந்த ஏழு எலும்புக் கூடுகளும் யாருடையவை...?

**ப.தலை:** பாண்டவர்கள் மற்றும் மகாராணி குந்தி ஆகியோருடையவைதான் பிரபு!

**சகுனி:** அவர்கள் காம்பிலிய நகரில் உயிருடனும் நல்ல சுகத்துடனும் வாழ்கிறார்களே! அரசியலில் பொய் கூறினாலும் உண்மை எப்படியும் வெளி வந்தேயாகும் என்பது தெரியாதோ உமக்கு? சரி இதற்கு ஏற்ற தண்டனை என்னவாக இருக்கும்?

**ப.தலை:** இத்தகைய குற்றத்துக்கு ஒரே தண்டனைதானுண்டு. மரணதண்டனை பிரபு!

**சகுனி:** நானும் அவ்வாறே கருதுகிறேன். யாரங்கே.........!

பணிப்பெண் நஞ்சுகலந்த பானம் கொண்டுவருகிறாள். அதனை படைத் தலைவனிடம் சகுனி தருகிறான்.

**சகுனி:** உன்மீது நான் பாசம் வைத்திருந்தமைக்காகவே இந்த இலகுவான சாவினை உனக்குத் தருகிறேன். மேலுலகில் என் தந்தையைக் கண்டால், காந்தாரிக்கு அஸ்தினாபுரி இழைத்த அநீதிக்காக அஸ்தினாபுரிமீது பழிதீர்க்க நான் காத்துக் கொண்டிருப்பதாக அவரிடம் கூறிவிடு. போய் வா நண்பனே! நீ இருந்த வண்ணமே உயிரை விட உரிமை தருகிறேன். ஆனால் அந்த யுதிஷ்டிரன் எந்த உரிமையினையும் பெற அனுமதிக்கவே மாட்டேன்!

-காட்சி மாற்றம்-

காம்பிலிய நகர்

**கிருஷ்:** இளவரசர் யுதிஷ்டிரரே! அடுத்த திட்டம் என்ன?

**யுதிஷ்:** யுத்தம் எவ்வகையிலும் தவிர்க்கப்பட வேண்டும் கண்ணா!

**கிருஷ்:** நானும் யுத்தத்தை விரும்பவில்லை. நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். ஆகவே உனது உரிமைகளை நீ கோரவேண்டும். அவ்வாறு கோராவிட்டால் அனைத்தையும் துரியோதனனே அபகரித்து விடுவானல்லவா?

**பலரா:** துரியோதனன் ஒரு மாவீரன். கீழ்த்தரமாக அவன் நடக்கமாட்டான்.

**கிருஷ்:** இருக்கலாம். சுயநல நாட்டம் எதையும் பொருட்படுத்ாதல்லவா?

**துருபதன்:** கிருஷ்ணன் கூறுவதுதான் உண்மை. ஆதிக்கவெறி எந்த வீரனையும் ஆட்கொண்டு விடும். அதி பலசாலியும் வீரனுமான துரோணாச்சாரியாரே மகுடத்தின் ஒளியில் மயங்கவில்லையா? பாண்டு இளவரசரே! பாஞ்சால நாட்டின் படைகளும் ஏனைய நேச நாட்டுப் படைகளும் உங்கள் கொடியின் கீழ் அணி வகுக்க எப்போதும் ஆயத்தமாகவுள்ளன.

**கிருஷ்:** பாஞ்சால நாட்டு மன்னரே! தனது உரிமைகளை வென்றெடுக்க படை பலம் முக்கியமல்ல. திட நம்பிக்கைதான் பிரதானம். உரிமைகளுக்காக வாதாடும் போது, படை பலத்தை பிரயோகிப்பதால் அந்த உரிமைகளே ஊறுபட்டுப் போக நேரிடும். தனது உரிமைகளைப் பெறுவதற்காக யுதிஷ்டிரன் தனது பெரிய தகப்பனாருக்கு எதிராகப் படை நடத்தினால் அஸ்தினாபுரத்தின் மக்கள் தங்கள் நாட்டைப் பாதுகாக்க தங்கள் மன்னருடன் இணைவார்களல்லவா? பாண்டவர்களிடம் உண்மை உண்டு. உண்மை வெல்வது நிச்சயம்! போர்தான் முடிவென்றால் அவர்களே தொடங்கட்டும். பாண்டவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்ற பெயர் வேண்டாம்!

**திஷ்ட:** போருக்கான இலக்கணம் அதுவல்லவே! அவர்களின் கூற்றுப்படி, எவர் தாக்குதலை ஆரம்பிக்கிறாரோ அவரே ஆற்றலுள்ளவர்.

**கிருஷ்:** நான் போரைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. சமாதானமே எனது கோரிக்கை!

**திஷ்:** பாண்டவர்களும் தாயும் கூண்டோடு அழிக்கப்பட சதித்திட்டம் வகுக்கப்பட்டது. உங்களுக்கும் உங்கள் சகோதரர்களுக்கும் தாய்க்கும் அக்கதி ஏற்பட்டிருக்குமானால் என்ன செய்வீர்கள்?

**கிருஷ்:** இளவரசே! எனது ஆறு சகோதரர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். எனது பெற்றோர்கள், என் தாய்மாமனால் பல வருடங்கள் பாதாளச் சிறையுள் பூட்டப்பட்டிருந்தார்கள். இருப்பினும் நான் மதுரா நகருக்கு போகவில்லை. மாமா கம்சன் என்னை அழைத்தபோதுதான் போனேன்.

**பீமன்:** அவர்கள் அழைக்கும்வரை காத்திருக்க வேண்டுமாக்கும்....!

**கிருஷ்:** அப்போ நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

**பீமன்:** அவன் துரியோதனனை ஒரே அடியில் வீழ்த்த வேண்டும்!

**பலரா:** குந்தி அத்தையின் இரண்டாவது மகன் சண்டை பற்றித்தான் பேசுவான் போலும்.

**காவலன்:** வாழ்க மகாராஜா! அஸ்தினாபுரத்திலிருந்து அரச தூதராக பிரதம மந்திரி விதுரர் வந்திருக்கிறார் - தங்கள் சமுகம் நாடி....!

**துருப:** மகனே! சகல மரியாதைகளுடன் அவரை வரவேற்று விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் செல். பயணக் களைப்பாறட்டும். நாளை அவரை சந்திப்போம்.

**பலரா:** விதுரர் இங்கு வருவார் என்பது முன்னமே தெரிந்ததா?

**கிருஷ்:** தங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டுமே அண்ணா! திருதராட்டினர் துரியோதனனை போகும்படி கேட்டிருப்பார். அவனுக்கு புத்தியைவிட தற்பெருமையே அதிகம்! மறுத்திருப்பான்.

**யுதிஷ்:** சித்தப்பாவை நாங்கள் போய்ப் பார்க்கலாமா?

**கிருஷ்:** இல்லை இளவரசே! அவர் இங்கு உங்கள் சித்தப்பாவாக வரவில்லை. அஸ்தினாபுரியின் அரச தூதராக வந்திருக்கிறார். உங்களுக்குள் நடைபெறும் பேச்சுவார்த்தைகளை ஏனையோரும் அறியவேண்டும். தப்பர்த்தங்களுக்கும் தப்பபிப்பிராயங்களுக்கும் இன்றைய நிலையில் இடமளிக்கலாகாது.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரர் அரண்மனை.

**காந்தாரி:** பிரபு!

**திருத:** என்ன காந்தாரி! காலோசையின்றியே வந்துவிட்டாய்?

**காந்தா:** கடந்த சில நாட்களாக மிகவும் கவலையுடன் காணப்படுகிறீர்களே! பாண்டவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்ற நல்ல தகவலறிந்த பின்னரும் கவலை ஏன்?

**திருத:** அந்த நல்ல தகவலின் விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பது தான் என் வேதனைக்குரிய காரணமாகும்.

**காந்தா:** பாண்டவர்கள் உயிருடன் இருப்பது பற்றி உங்களுக்கு மகிழ்ச்சியில்லையா?

**திருத:** காந்தாரி! பார்வையற்ற என்னால், யார் பொய்யர்கள், யார் மெய் கூறுகிறார்கள் என்பதை அறிய முடியாதிருக்கிறது. உன் கண் மீதுள்ள கட்டுகளை அவிழ்த்து விடு.

**காந்தா:** எனது சபதத்தில் தலையிடாதீர்கள் பிரபு. உங்களை வாட்டும் காரணங்களைத் தெரிவியுங்கள்.

**திருத:** எனது மகன்மீது நான் வைத்துள்ள பாசம்தான் என் சங்கடமான நிலைக்குக் காரணம். இதனால் பாண்டவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறேன்.

**காந்தா:** பாண்டவர்கள் உயிருடனில்லை என்பதனால் துரியோதனனை முடிக்குரிய இளவரசனாக்கினீர்கள். இறைவனருளால் பாண்டவர்களுக்கு எதுவும் நடக்கவில்லை. பாண்டவர்கள் உயிருடனிருக்கும்போது துரியோதனன் பட்டத்துக்குரியவனாக முடியாதல்லவா?

**திருத:** அதுதான் முக்கியமான பிரச்சனை காந்தாரி! துரியோதனனின் குணம் நமக்கு நன்கு தெரியும்! அவன் யுதிஷ்டிரனுக்கு விட்டுக்கொடுக்க மாட்டான். அவன் எனது மூத்த மகன் அல்லவா? வேறு ஏதாவது மார்க்கம்தான் கண்டு பிடிக்கப்பட வேண்டும்!

-காட்சி மாற்றம்-

சகுனி சொக்கட்டான் ஆடுகிறார்.

**துரியோ:** மாமா! கடும் சிந்தனையிலாழ்ந்திருக்கிறீர்களே!

**சகுனி:** உன் அப்பாவின் செயல்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பாண்டவர்களை அழைத்துவர என்னை அனுப்பியிருந்தால் அவர்களுக்கு முடிவு கட்டியிருப்பேன். விதுரரை அனுப்பியிருக்கிறார். அவர் பாண்டவர்களுக்கே சகாயம் செய்பவராயிற்றே! அவருக்கு உன்மீது நம்பிக்கை கிடையாது.

**துரியோ:** விதுரர் சித்தப்பாவின் அரசியல் அணுகல்கள் பாண்டவர்கள் பாலுள்ளது என்பது உண்மைதான். ஆனால் அவரிடம் பாகுபாடு இருக்கிறது என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது.

**சகுனி:** குரு வம்சத்தாருக்கு தங்களுக்கு நன்மையானவையெல்லாம் தீமையாகவே தோன்றும். மருமகனே! நீ குருடனோ, கண்களை மறைத்துக்கொண்டு திரிபவனோ அல்ல. நன்றாகப் பார்! அந்த தாதி மகன் விதுரர் பாஞ்சால நாட்டில் உனக்கெதிராக எத்தகைய சூழ்ச்சி வலை பின்னுகிறாரோ? யார் அறிவார்?

-காட்சி மாற்றம்-

காம்பிலிய நகர்-விதுரரின் விடுதி-

**குந்தி:** விதுரரே! நலமா?

**விதுர:** நலம் என்று கூற முடியாத நிலையிலுள்ளேன் அண்ணி! அஸ்தினாபுரியில் நிலமை நன்றாயில்லை. அண்ணன் திருதராட்டினர் தன் மகன் மீது கொண்ட பாசத்தால் ஆவலுக்கு அடிமையாகி விட்டார். இதனால் அஸ்தினாபுரியின் அத்திவாரமே ஆட்டம் கண்டு வருகிறது. துரியோதனனோ சகுனியின் பிடியில் பரிதாபமாகச் சிக்கிக் கொண்டான்.

**குந்தி:** அப்போ அந்நாட்டின் தூதராக தாங்கள் ஏன் வரவேண்டும்?

**விதுர:** அஸ்தினாபுரத்தில் பாத்தியதை உள்ளவர்கள் பாண்டவர்கள்தானே! எனது பிரச்சனை என்னவென்றால், நான் அஸ்தினாபுரியையும் நேசிக்கிறேன். எப்படியானாலும் இவர்கள் அஸ்தினாபுரம் வரவேண்டியவர்கள் தானே?

**குந்தி:** நாங்கள் என்றும் தங்களுக்குக் கடமைப்பட்டவர்கள் விதுரரே! அன்று அரக்கு மாளிகை சதி பற்றி நீங்கள் தகுந்த வேளையில் எச்சரிக்கவில்லையானால் பாண்டவர்கள் அழிந்தே போயிருக்க வேண்டும். இன்று தாங்களே அவர்களை அந்நாட்டுக்கு வரும்படி அழைக்கிறீர்கள்!

**விதுர:** என்மீது நம்பிக்கை வைத்து வாருங்கள். அந்நாட்டு மகுடத்துக்குரியவன் யுதிஷ்டிரன். ஒருநாள் அந்நாட்டு மன்னனாகப் போகிறவனும் அவனே!

**குந்தி:** நீங்கள் வற்புறுத்துவதால் வருகிறோம்.

**விதுர:** சரி அண்ணி! மன்னர் துருபதனைக் காணச் செல்கிறேன்- அனுமதிப்பீர்களா?

**குந்தி:** ஆண்டவன் அருள்வானாக.

-காட்சி மாற்றம்-

துருபதனின் சபாமண்டபம்.

**அறிவிப்பாளா:** சிறந்த அறிவாளியும் -அரசியல் மேதையும் - அஸ்தினாபுரி மாமன்னரின் அருமைத் தம்பியும் - பிரதம அமைச்சருமான விதுரர் சபைக்கு வருகிறார்.

**திஷ்ட:** தங்கள் வரவு நல்லவரவாகுக. ஆசனத்தில் அமருங்கள். தங்களைப் போன்ற-சகல துறைகளிலும் மேம்பாடுடைய ஒரு பெருமகனைத் தரிசித்ததில் பெருமையடைகிறேன். தங்கள் வாழ்த்துக்களை அருளுங்கள்.

**விதுர:** இளவரசே! மேன்மை மிக்க தந்தையைத் தங்களுக்கு இறைவன் அருளியிருக்கிறான். தெய்வீகமான தங்கையையும் வீர குருவம்சத்தின் இணைப்பையும் பெற்றுள்ள தாங்கள் சகல மேன்மைகளையும் அடைந்திருக்கிறீர்கள். இத்தனைக்கும் மேலாக நான் எதனைக் கூறி வாழ்த்த முடியும்?

**திஷ்ட:** என்னுடைய இலட்சியம் நிறைவேற வாழ்த்துங்கள்.

**விதுர:** படைக்கும் அந்தப் பரம்பொருளின் திட்டங்களில் தலையிட என்னால் முடியுமா? அவனுடைய எண்ணம் எதுவோ அதுவே நடக்கும்.

**துருப:** மகனே! அவரை வாக்குறுதி வழங்க வற்புறுத்தலாகாது. விதுரர் அவர்களே! வாருங்கள். எமது மாளிகைக்குத் தாங்கள் வருவது எங்களுக்கு பெருமை தருகிறது.

**விதுர:** மகாராஜா திருதராட்டிரரின் நல் வாழ்த்துக்களையும் அவருடைய மகளுக்கான பரிசில்களையும் கொண்டு வந்திருக்கிறேன்.

**துருப:** எனது மகளுக்கு மகாராஜாவின் வாழ்த்துக்களே பெரும் பரிசில்கள்தானே! ஏற்றுக்கொள்ளுகிறோம். அமருங்கள்.

**விதுர:** அஸ்தினாபுரம் தன் மருமகளை வரவேற்கக் காத்து நிற்கிறது. பாண்டவர்களையும் என்னுடன் அழைத்துச் செல்ல அனுமதியுங்கள். மகாராஜா, அவர்களைக் காண அவாவுடனுள்ளார். குரு வம்சத்துக்கும் பாஞ்சாலத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள பிணைப்பை பிதாமர் பீஷ்மர், துரோணாச்சாரியார் மற்றும் நாட்டு மக்கள் அனைவரும் வரவேற்கின்றனர். இந்த இரு பெரும் நாடுகளும் இணைவதற்கு பாத்திரவாளியான திரௌபதியைக் காண நாடு ஆவலுடன் காத்திருக்கிறது.

**துருப:** தங்களின் விருப்பப்படி திரௌபதியை அழைத்துச் செல்லுங்கள். பாண்டவர்கள் எனது விருந்தாளிகள் மட்டுமல்ல; எனது மருமக்களுமாவர். அவர்களைப் போ என்று என்னால் எவ்வாறு கூறமுடியும்? அவர்கள் தங்கள் நாடு செல்ல விரும்பினால் என்னால் தடுக்கத்தான் முடியுமா?

**கிருஷ்:** பாண்டவர்கள் அங்கு போகவேண்டும். இதுவே எனது அபிப்பிராயமும். நானும் அவர்களுடன் சென்று எனது உறவினர்களைக் கண்டு வர ஆசைப்படுகிறேன். அண்ணாவும் என்னுடன் வருவீர்கள் அல்லவா?

**பலரா:** நிச்சயமாக...மகாராஜா! நானும் அவர்களுடன் போகப் போகிறேன்.

**துருப:** மகனே! திரௌபதியின் அஸ்தினாபுர பயணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய். ஆயிரம் யானைகள், ஒவ்வொன்றும் நான் குதிரைகள் பூட்டப்பட்ட பத்தாயிரம் இரதங்கள், ஐயாயிரம் இளமங்கையர், தங்கம் மற்றும் வெள்ளியாலான பத்தாயிரம் பாத்திரங்கள் ஆகியவற்றை எமது மகளின் சீதனமாக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி-திருதராட்டினர் மற்றும் காந்தாரியை காண பீஷ்மர் வருகிறார்.

**காந்தா:** வாருங்கள் மாமா!

**பீஷ்ம:** ஆண்டவன் அருள் பாலிப்பானாக.

**காந்தா:** தாங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் காணப்படுகிறீர்கள்?

**பீஷ்ம:** மகிழ்ச்சியான, முக்கியமான செய்தியுடன் வந்துள்ளேன். எங்கே மன்னர்?

**காந்தா:** அண்ணன் சகுனியுடன் உணவருந்துகிறார். அமருங்கள்.

**பீஷ்ம:** மகிழ்ச்சியான- செய்தியைக் கூறிவிட்டு வரவேற்புக்கான ஆயத்தங்களைச் செய்ய வேண்டும் என்று வந்தேன்.

**காந்தா:** வரவேற்பா? யாருக்கு..?

**பீஷ்ம:** பாண்டவர்களை இங்கு அனுப்பிவைக்க மன்னர் துருபதன் இணக்கம் தெரிவித்து விட்டதாக விதுரர் செய்தி அனுப்பியுள்ளார். மருமகள் திரௌபதியுடன் வந்து கொண்டிருக்கிறார்கள்.

பாஞ்சால நகரில் திரௌபதி வழியனுப்பப்படும் காட்சிகள்.

__பின்னணிப் பாடல்:__

*குணவா னெழுகதிர் குவலயந்தழுவி*
*குடதிசை யடைந்து களிப்படைவதுபோல்*
*குலமக ளவளும் பிறந்தகம் விடுத்தே*
*கணவ னகத்தில் பொலிவடைகின்றனள்*

*நாயக னுடனே நடக்கின்ற நங்கை*
*நலமெலாம் பெற்று நீடுழி வாழ்கென*
*தாயகம் வாழ்த்திடும் தரணியும் போற்றிடும்*
*தூயவள் விழிகளி துளிபொழிந்திடுமே.*

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்

4 3 6 3 3 1



பெண்களின் அழகோ ...
அதை எங்களது ... நகைகள்
மின்னிப் பேசுகின்றன

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11





Kala



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேழை

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


## நலம்-நலமா? அறிய ஆவல்!

இந்த இரு வேட்டை நாய்களும் உள்ள படம் ஒரு பத்திரிகை நடத்திய புகைப்படப் போட்டியில் பரிசினை வென்றிருக்கிறது.

அப்படி என்ன புதுமை இப்படத்தில் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? ஒரே வீட்டில் வளரும் இரு பிராணிகள் பொதுவாக ஒன்றுக்கொன்று நட்புறவு கொள்வது இயல்புதானே! இதில் என்ன வேடிக்கை?

பொறுங்கள்-பொறுங்கள். இதோ பதில். இந்நாய்களில் ஒன்று பொம்மை! மற்றையது தான் உயிருள்ள நாய். தரையில் வைக்கப்பட்டிருந்த பொம்மை நாயை- தரையினை சுத்தம் செய்வதற்காக எஜமானி-தூக்கி சோஃபா மீது வைத்தார். அவருடைய வளர்ப்பு நாய் ஓடோடி வந்து பொம்மை நாயின் உடல் மீது தன் தலையினை வைத்து ஓய்வெடுக்கிறது.

இந்தப் படத்தினை எடுத்து பரிசு பெற்றவர் நியூயோர்க் நகரின் போட். ஜெபர்சன் ஸ்ரேஷனைச் சேர்ந்த பார்பரா என்பவர்.

## ஜூனியர் கென்னடி காதல் சாகசத்தில் சீனியர்!



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியாக இருந்த ஜாக்குலின் கென்னடி மே 19ல் புற்றுநோயால் விழுங்கப்பட்டது தெரிந்த செய்தி. ஜாக்கியின் மகன் ஜோன் கென்னடி உல்லாசப் பேர்வழி. ஏற்கனவே பெண்கள் விடயத்தில் அப்படி இப்படி என்று பேசப்பட்டவர்.

தற்போது காதலிக்கிறார். காதலி பெயர் டெரில். அவர்களுக்கு காதல் வந்தது பற்றி யாரும் சினப்படவில்லை. ஆனால் ஜாக்குலின் இறந்த பத்தாவது நாள் அன்று காதலர் இருவரும் களியாட்டத்தில் ஈடுபட்ட காட்சிதான் பலரை சினம் கொள்ள வைத்திருக்கிறது.

ஜோன் கென்னடியின் அமெரிக்க இல்லத்தில் அவர்கள் இருவரும் ஜாலியாக பொழுதைப் போக்கிய காட்சியை இரகசியமாக படம் பிடித்து வெளியிட்டு விட்டது ஒரு பத்திரிகை.

அம்மா எழுதிவைத்த சொத்து இருக்கிறது அனுபவிக்க. கூடவே காதலியும் இருப்பதால் ஜூனியர் ஜாலியாக இருக்க அவசரப் படுகிறாரோ!



## ரசிக்கவைக்கும் உத்திகள்



மேல்நாடுகளில் விளம்பர அழகிகளுக்கு கொழுத்த பணம் சேருகிறது. 'பாஷன்' காட்சிகளில் கவர்ச்சி உடல் அமைப்புள்ள பெண்களை பயன்படுகிறார்கள். அடிக்கடி 'பாஷன்' காட்சிகள் நடத்தி தமது ஆடைத் தயாரிப்புக்களை அறிமுகம் செய்வதில் நிறுவனங்கள் போட்டா போட்டி. அதனால் கவர்ச்சிக்காக அழகிகளுக்கு வற்றிப்போகாத வருவாய். மகிழ்ச்சிக்கு குறைவேயில்லை. 'பாஷன்' காட்சிகளின் இரசிக்க வைத்து வியாபாரம் பெருக்கும் உத்திக்கு அழகுப் பெண்கள்தான் ஆயுதம்!

## சண்டைக்கு முந்தும் சாவு வியாபாரிகள்!

போதைப் பொருள் பாவிப்போரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கிறது.

உலகெங்கும் இந்தக் கொடிய பழக்கத்தை ஒழித்துக்கட்ட பல பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் பலன் கிடைப்பதாகத் தெரியவில்லை.

போதைப் பொருள் கடத்தலுக்கு தலைமையிடம் என்று கருதும் நிலையில் இருப்பது கொலம்பியா. தென் அமெரிக்க ஆகியவற்றை இணைக்கும் பனாமா நாட்டின் தென் கிழக்கே-தென் அமெரிக்காவில் உள்ள இந்நாடு போதைக் கடத்தலின் கேந்திர ஸ்தானம்.

இங்குள்ள போதைக் கடத்தல் மன்னர்கள் தங்களுக்கென்றே ஆயுதப் படைகளை வைத்து தங்களை அரண் செய்துள்ளனர். இவ்வாறுள்ள கடத்தல் மன்னர்களுக்கு இடையில் பலத்த போட்டிகள். இதன் பயனாக பெரும் பயங்கரப் போர்களும் ஏற்படுவதுண்டு.

→



அந்நாட்டு அரசாங்கப் படைகள் போதை மன்னர் இராச்சியங்களை அணுக முடியாது.

இந்த போதை வியாபாரிகள் போதையை கடத்துவதில் பல வித்தைகளை கையாளுகிறார்கள். எப்படி கடத்துகிறார்கள் என்று கண்டுபிடிப்பது சுலபமானதல்ல. அப்படிப் பெற்ற பயிற்சியால் தற்போது குண்டுகளையும் கடத்த தொடங்கியுள்ளார்கள்.

போதை மன்னர்களுள் ஒருவர் அமெரிக்க அரசாங்கப் படைகளுக்குரிய 4 குண்டுகளையே களவாடிக் கடத்தி வந்தாராம். மற்றுமொருவர் இலக்கில் அமெரிக்காவைச் சேர்ந்த எல்சல்வேடர் நாட்டிலிருந்து சில குண்டுகளை சிறு விமானமொன்றில் ஏற்றி வந்துவிட்டாராம். இவ்வாறு எல் சல்வேடரிலிருந்து கடத்தி வரப்பட்ட குண்டுகளில் ஒன்றுதான் இது.

## வாரமலர் தினமுரசு



## தொலைந்து போன சூரியன்

சோமாலியாவில் அமைதி என்னும் சூரியன் தொலைந்து நான்கு வருசம்! நான்கு வருடத்திற்குள் அது ஏற்படுத்தியுள்ள பாடு என்னவென்று அறிய இந்தப்படம் ஒன்றே போதும்.

அகதி முகாம் ஒன்றில் தன் செல்லக் குழந்தைகளாது கொள்ளையிடப்பட்ட வாழ்க்கையை நினைத்து வாடும் தாய், பாசக் கரங்களால் வருடிக்கொடுக்கிறாள். எரியும் போரின் வெப்பம் குறைக்க குளிர்ந்த நீரில் குளிக்க வைக்கிறாள்.

கொடிது-கொடிது போரின் மத்தியில் வாழ்க்கை கொடிது. இங்கும் அதுதான். சோமாலியாவிலும் அப்படித்தான். ●